# வல்லிபுரத்தான்

## தலபுராணம்



கு. பெரியதம்பி — ஆழ்கடலான்

100/-

உ

ஸ்ரீராமஜெயம்

# வல்லிபுரத்தான் தலபுராணம்


ஆக்கியோர் :

கு. பெரியதம்பி

ஆழ்கடலான்



வெளியீடு :

இந்து கல்வி கலாசார மன்றம்

வல்லிபுரம் — புலோலி — இலங்கை

1987

## BIBLIOGRAPHICAL DATA


**Title of the Book:** Vallipurathan Thalapuranam

**Authors:** Puloly South K. Periyathamby
Singainagar Azhkadalan

**Editor:** Miss Chithra Paramanathan
Urelu North, Chunnakam

**Edition:** First

**Date of Publication:** 29-7-87

**Copy Right:** Murugavey Paramanathan
Vallipuram, Puloly.

**Number of Pages:** xxviii + 122

**Printer:** Thirumakal Press, Chunnakam

**Price:** Rs. ~~20.00~~

**Publisher:** Vallipuram Hindu Education and Cultural Society
Puloly, Point Pedro.

## உரிமையுரை

எம்மைக் கல்விமானுக்கியவர் பெற்ற தாய் இலட்சுமிப்பிள்ளை. உழைத்து உறுதி நல்கியவர் தந்தை வேலுப்பிள்ளை. வளர்த்தவர் சிறியதாயார் சின்னப்பிள்ளை. ஆசிரியனுக்கியவர் தாய்மாமனுர் வல்லிபுரம் (உபாத்தியாயர்). இவர்கள் வல்லிபுரக் கோயிலின் ஆதிகர்த்தாக்களின் பரம்பரையில் வந்தவர்கள். இவர்களுடைய ஆத்மீக குரு இடைக்காட்டுச் சுவாமிகள். இந்தப் பஞ்ச கர்த்தாக்களின் நினைவாக இந்நூல் ஆழ்வார் சுவாமிகளின் கமல பாதங்களில் அர்ச்சிக்கும் பாக்கியம் பெற்றது.

**ஆழ்கடலான்**

" தூப்புல் "
வல்லிபுரம்
புலோலி

## ஆசியுரை

வைணவதத்துவங்களின்படி திருமாலுடைய நிலைகள் ஐந்து. பரத்வம், வியூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்பனவே அவை. பரமபதத்திலே பரவாசுதேவ ராய் எழுந்தருளியிருப்பது பரத்வம்; இறைவனைப் பற்ற வேண்டுமென ஆசைப்பட்டவனுக்குப் புறம்பே ஆவரணஜலம் போல் இருக்கிறது. திருப் பாற்கடலிலே எழுந்தருளியிருப்பது; கேள்விப்பட்டதன்றி அடையமுடியாதது வியூகம். இதுவே, இராம—கிருஷ்ண நிலை; கிட்டியாயும் கிட்டாத, பெருகாறு போன்றது விபவம். சராசரப் பொருள்களெல்லாவற்றுள்ளும் எள்ளினுள் எண்ணெய்போல மறைந்து வசித்தலும் அடியார் மனத்தில் வீற்றிருத்தலும் அந்தர்யாமித்துவம். பூதகஜலம் தாகமுடையவனுக்கு உடனே கிடையாது; தோண்டியெடுக்க வேண்டும். விக்ரகரூபத்திலிருப்பது அர்ச்சை. நீர்வேட்கை உடையவனுக்கு உடனே பருக உதவுவது பொய்கை—மடு போல, கோயிலிலும், க்ருஹங்களிலும் எங்கு மொக்க யாவர்க்குமிலக்காம்படி நிற்பதே அர்ச்சாவதாரம். எனவே ஒருவகையாலும் அருமைப்பாடின்றி, ஆங்காங்கு கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்ற அர்ச்சையே நமக்கெல்லாம் எளிதிலமைந்து ஈடேறக்கூடியது. அர்ச்சை மாநுஷம், ஆர் ஷம், தைவதம், ஸ்வயம் வயத்தம் என நான்காகப் பேசப் படும். இப்படியான, வைணவ, க்ஷேத்திரங்கள் பஞ்சகிருஷ்ண ஸ்தலம், முத்திதலம்... என்றெல்லாம் வகைப்படுத்தப் படும். இந்தவகையில் க்ஷேத்திரப் பெருமைமிக்க புனித தலமே வல்லிபுரம். அருள்பாலிப்பான் வேண்டி அச்சுதனங்கே அர்ச்சாவதாரியானான். மூலமூர்த்தி சுதர்ஸனமே. இப் பொன்னாலயத்தின் பூர்வீக வரலாற்றைப் புராண வடிவிலே வடித்திருக்கிறார்கள் இரு அன்பர்கள். முழுமுதற் பொரு ளாயும், தொண்டர் தொண்டனுமான பத்மநாபனுடைய பெரும்புகழ் பேசுவதில் மன அமைதி காண்பவர் ஆழ்கட லான். மூலக்கருவறையின் துவக்கத்திலிருந்து வளர்ந்த ஆல யப் பெருமையை சொந்த மண்ணின் சுவையோடிணைத்து வெளிவருமிப் பத்திப்பனுவல்போல எதிர்காலத்திலும்—எல் லாக் கற்றளிகளின் வரலாறும் வெளிவர மெய்யடியார் கள் முன்வரவேண்டும். பிறழ்வான வரலாற்றை எழுதாமல் இந் நூல்போல் உள்ளதைச் சொல்லவேண்டும். உலகமுய்யத் தியானிப்போம். எல்லாரு மெம்பெருமானின் திருவடிகளை வணங்கிப் பிறப்பறுப்போமாக. சுபம்!

திருக்கேதீஸ்வரம்
5–7–87

**சி. சபாரத்தினம்**
(திருவாசக சுவாமிகள்)

ஹரி ஓம்

# பதிப்புரை

பகவானைத் தியானிப்போம் ஒரு கணம்; பின் இப்புனித புராணத்தைப் பக்தியோடு பாராயணம் பண்ணுவோம்; உலக க்ஷேமத்தை முன்னெடுத்துச் செல்வோம். எங்கும் அமைதி சாந்தி சமாதானம் நிறைவு மகிழ்ச்சி நிலவப் பிரார்த்திப்போம்.

வேதம் இந்து தர்மத்தின் ஆதாரநூல். இதைச் செய், இதைச் செய்யாதே என விதிகளையும் விலக்குகளையும் சொல்வது அது. அதை ஏற்று நடப்பது நம் கடமை. தலைவனின் ஆணையை அட்டியின்றி அப்படியே ஏற்று நடப்பது போல, வேதம் சொல்வதன்படி நடக்க வேண்டும். எனவே வேதத்தை பிரபுஸம்கிதை என்பர். வேதசாரத்தை அடிப்படையாகக் கொண்டு காலத்துக்குவப்பான மாற்றத்தை வகுத்துச் சொல்வது ஸ்மிருதி. அது நண்பனுடைய அறிவுரை போன்றது. அதை ஸூக்ருத் ஸம்கிதை என்பர். காவியம் காப்பியம் மனைவியின் மொழிபோல இனிமையாய் இருப்பதால் காந்தாஸம்கிதை என்பர். சிறுர்களுக்குச் சொல்லும் கதைகளைப் போல நீதிகளை அமைத்துச் சொல்வன புராணங்கள். அவற்றைச் சிசுஸம்கிதை என்பர். பல்லாயிரமாண்டு கட்கு முன் நடந்ததைச் சொல்வது பழமை. இக்காலத்துக்குப் பயன்படுவதாற் புதுமை. எனவே பழமைக்கும் பழமையான வரலாறுகளைப் புதுமையான கண்ணோட்டத்துடன் இணைத்து இன்றைய வருங்கால சமுதாயத்துக்கு ஏற்றவகையிலமைத்து சமய அடிப்படையில் வழங்குவது தலபுராணம். ஒரு க்ஷேத்திரத்தைப் பற்றி எண்ணற்ற தலபுராணங்கள் வெளிவர வேண்டுமென்பது காஞ்சிப் பெரியவர்களுடைய இதய தாகம் மட்டுமல்ல வாக்கும் கூட. இந்த அடிப்படையில் எழுந்ததுவே வல்லிபுரத்தான் தலபுராணம். வல்லிபுரம் ஆழ்வார் ஸ்வாமி மீது பிள்ளைத் தமிழொன்று வெளியிட வேண்டுமென்ற எண்ணத்திலே ஊறிப்போன எமது தந்தையார் பல பெரும்

புலவர்களை அணுகினர். எவரும் கைகொடுக்கவில்லை. ஒரு தினம் கரம்பொன் சாத்வீகம் குமரேசையா அவர்களைக் கண்டு கதைத்தபோது, அவர்கள் முதலிலே தலபுராண மொன்று வெளிவர வேண்டுமென்று சொன்னார்கள். நல்லவர் வாக்குப் பலித்துவிட்டது. சுமார் மூன்றாண்டுகள் கையெழுத்துப் பிரதியாய் உறங்கிக் கிடந்தது. அண்மையிலொரு நாள் முருகேசு ஸ்வாமிகளைக் கண்டு தந்தையார் தன் மனக்கருவை அந்த மகானிடம் சொன்னபோது முற்பணத்துடன் ஆசீர்வாதமும் நல்கி, பணியை மேற்கொள் என்றார்கள். செயற்படுகிறவனும் செயலாக்குகிறவனும் அவனேயாதலின் அளவற்ற இக்கட்டுகளின் மத்தியில் இப்புனித நூல் உருவேறித் திருவேறி பெருவெற்றியுடன் வண்ணமும் வடிவமும் பெற்றுவிட்டமைக்கு முதலில் அந்தப் பரந்தாமனும், அடுத்து கலாநிதி இ. பாலசுந்தரமவர்களுமே கருத்தாக்களென்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. சுவாமிகளை அடுத்து எம்மை ஊக்கியவர் இளைப்பாறிய பிரதம கணக்காளர் உயர்திரு. வி. முத்துவேலு அவர்கள். இன்னும் விளம்பரம் வேண்டாத சில விஷ்ணுபக்தர்களின் உதவி கிட்டியும், எமது பற்றுக்குறை பட்ஜெட்டை நிறைவு படுத்துவானந்த மாயவன் என்பதை நாமறிவோம். ஏனெனின் முன்பு வெளியிட்ட சுமார் ஆறு பிரபந்தங்களுமப்படியான சூழ்நிலையிலேதான் உருவாயின.

பூமியைவிட நீர்ப்பரப்பு உயர்ந்தது. ஒளி நீரை விட உயர்ந்தது. வாயு இல்லாத இடமேயில்லை. எனவே ஒளியை விட வாயு உயர்ந்தது. காற்றிலும் ஆகாயம் உயர்ந்தது. மனமோ ஆகாயத்தையும் கடந்தது. மனம் லயிக்கும் விஷயங்களில் தத்துவத்தைப் புரிந்துகொள்ளும் வலிமை அறிவுக்கேயுண்டு. மனதிலும் அறிவு சிறந்தது. காலம் காட்டும் வழியிலே அறிவு செல்லவேண்டி யிருப்பதால் அறிவுக்கு மேம்பட்டது காலம். ஆனால் பிரபஞ்சமே தானாகி மேலே சொல்லப்பட்ட எல்லாப் பூதங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீமந் நாராயணனே இவையெல்லாவற்றுக்கும் மேம்பட்டவன் என்பது பாரத வாக்யம். அவனே பக்தி வலையிற் படுபவன். அன்பெனும் பிடியுளகப்படும் மலை.

சொல்லுகைக்கில்லாத அப்பரவஸ்து பைந்தமிழ்ப்பின் சென்றவனல்லவா. என்னவோ அப்பகவானின் க்ஷேத்திர மகிமையை இந் நூலாசிரியர்கள் எப்படிப் பாடினரோ நாமறியோம். அவனறிவான். மக்களுக்கு எதைச் சொன்னல் ரஸிப்பார்களோ சுவையாக இருக்குமோ அதை இப்புராணம் சொல்லவில்லை. மக்களுக்கு எது தேவையோ எது உண்மையான நன்மையைக் கொடுக்குமோ க்ஷேத்திர வரலாறு எதுவோ அதையே தந்திருக்கிறார்கள். காலத்தையும் கடந்து நின்று மண்ணின் வாசனையை வெகு நுணுக்கமாகப் படம் போட்டுக் காட்டியிருக்கிறது இந் நூல். உலக கலை இலக்கிய சமய வரலாற்று ஏடுகளின் மத்தியில் இப்புராணம் தகுதியான இடம் பிடித்திருக்கிறது. எவரும் செய்ய முடியாத தொன்றைச் செய்ய வேண்டியதைச் செய்திருக்கிறார்கள் ஆசிரியர்கள். ஆழ்கடலானின் பெருமையே பெருமை.

இந் நூலாக்கம் பெறப் பல்வேறு வழிகளிலும் உழைத்தவர்கள, ஊக்கமளித்தவர்கள், தகவுரை வழங்கியோர், மற்றும் அழுத்தகத்தார், நிதி வழங்கியோர் யாவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியை எழுத்திலேதான் வடிக்க முடிகிறது. எல்லாம் வல்ல வல்லிபுரநாதன் எல்லாருடைய நல்வாழ்வுக்கும் தோன்றாத் துணையாய் நின்று அருள் பாலிக்கிறான். யாமவனிடம் யாசிப்பது பொன்னும் பொருளும் போகமுமல்ல. அன்பும் - அருளும் அமைதியும் ஆனந்தமுமாகும். பொன்னெழுத்துகளில் வல்லிபுரம் பொறிக்கப்பட்டு பட்டொளிவிட்டுப் பறக்கிறது. ஆய்வாளருக்கோர் அரும் பொக்கிஷமே இத்தலபுராணம்.

வன்பெருவா னகமுய்ய அமர ருய்ய
 மண்ணுய்ய மண்ணுலகில் மனிச ருய்ய,
துன்பமிகு துயரகல அயர்வொன் றில்லாச்
 சுகம்வளர அகமகிழுந் தொண்டர் வாழ,
அன்பொடுதென் திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்
 அணியரங்கன் திருமுற்றத்து, அடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்
 இசைந்துடனே யென்றுகொலோ விருக்கு நாளே!

— பெருமாள் திருமொழி

29-7-87

— பக்திமதி

# புராணம் மலர்ந்த கதை

தொல்பெரும் ஆலயங்கள் சில இன்றில்லை. அவற்று ளொன்று திருக்கரைசைப்பதி. திருகோணமலைக்கு அருகாமையிலுள்ள மகாவலிகங்கைக் கரையிலமைந்திருந்த சிவஸ்தலம் இது. 'அகத்தியத் தாபனம்' என்றும் இதற்குப் பெயர். காலவெள்ளம் கரைத்தாலும் கரைசை பற்றி எழுந்த தலபுராணம் கரையவில்லை. உலகமுள்ளளவும் கரை சைப்பதியின் வரலாறு பொன்னெழுத்துக்களிற் பொறிக்கப் பட்டுவிட்டமை, சைவ உலகம் செய்த தவப்பேறாகும். இந்த அடிப்படையில் எழுந்ததே வல்லிபுரத்தான் தலபுராணம்.

அடியேன் பிறந்து தவழ்ந்து வளர்ந்து வாழ்ந்துகொண் டிருக்கும் வல்லிபுர நல்லூரின் தொன்மையான வரலாற்றை— தொல்பொருட் சான்று பகரும் கதையை விலாசத்தை— மாற்றி மறைத்துக்கூற முயல்கின்ற சிலரின் செயல்கண்டு மனம் நொந்த நிலையில் சுமார் ஐம்பது ஆண்டுகள் அயரா துழைத்து ஏழு பிரபந்தங்களை வெளியிட அவனருள் கிடைத் தது. ஆழ்கடலான் என்னும் வரலாற்று நூலும் உருவானது. நீண்டகாலமாக பிள்ளைத்தமிழொன்று வெளியிடவேண்டு மென்ற எண்ணம். எத்தனையோ புலவர்கள் கவிஞர்களைக் கேட்டும் அவர்கள் கைகொடுக்கவில்லை. பண்டிதர் குமரே சையாவிடம் சொன்னபோது, முதல் தலபுராணம் வெளி வரட்டும். நீ பாடுவாய் பாடு என்றார். அடியேன் யார் பாடுவதற்கு. அமரர் கு. பெரியதம்பியவர்களிடம் சொன் னேன். அவரதும் எளியேனதும் கூட்டுமுயற்சியால் இத் தலபுராணம் மலர்ந்திருக்கிறது. பாட்டும் பொருளும் பாடிய வனும் பாடுவித்தவனும் ஏடாக்கியவனும் எம்மை வழி நடத்தியவனும் அவனேதான். இந் நூற்கு முன்னுரை நல்கிய பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை யவர்கட்கு எனது தனித்துவ நன்றி உரித்தாகுக.

"எல்லாப் பொருள்களிலும் நானிருக்கிறேன்; எல்லாம் பொருள்களும் என்னிடமுள்ளன; என்னிடத்தில் ஒரு பொருளு மில்லை; நான் ஒரு பொருளுமில்லை."

**ஆழ்கடலான்**

"தூப்புல்"
வல்லிபுரம்
புலோலி, 29-7-87

# முன்னுரை

புராணம் என்பது பழமையென்று பொருள்படும் வட சொல். தொல்காப்பியத்திலே எண்வகை வனப்புகளுளொன்ருகக் குறிப்பிடப்படும் 'தொன்மை' புராணத்தையே சுட்டுகிறதெனச் சிலர் வாதிப்பர். வட மொழியில் மகா புராணங்கள், உப புராணங்கள் முதலியன நீண்டகால வரலாற்றை யுடையன. வேள்விச்சாலைகளிலே உரைக்கப்படும் புராணக் கதைகளைப்பற்றிய குறிப்புகள் மிகப் பழைய வட மொழியிலக்கியங்களிலேயே காணப்படுகின்றன. வேதங்களைத் தொகுத்த வியாசரே பதினெண் மகா புராணங்களையும் இயற்றினுர் எனக் கொள்வது மரபு.

அமரசிம்மன் முதலிய பழைய நிகண்டாசிரியர்கள் உலகத் தோற்றம், ஒடுக்கம், மனுவந்தரம், முனிமரபு, அரசமரபு ஆகிய ஐந்து இலக்கணங்களையும் உடையதாகப் புராணம் இருக்கவேண்டுமென்று கூறுகிருர்கள். ஆனுல் முற்காலப் புராணங்கள் மட்டுமே இவ்வைந்து இலக்கணங்களையும் உடையனவாக இருக்கின்றன. பதினெண் உப புராணங்களுள் ஓர் உட்பிரிவே தல புராணமெனச் சிலர் வாதிப்பர். தலம் என்பது இடம் என்று பொருள்படும் ஸ்தலம் என்ற வட சொல்லின் திரிபு.

தமிழ் இலக்கியப் பரப்பிலே புராண இலக்கியம் ஒரு சிறப்பான பகுதி. பன்னிரண்டாம் நூற்ருண்டில் முதன் முதலாகத் தோன்றிய திருத்தொண்டர் புராணம் தொடங்கி, இருபதாம் நூற்ருண்டுவரை, நூற்றுக்கணக்கான புராணங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள்ளும் பெரும்பகுதி 'தல புராணம்' என்ற வகையைச் சேர்ந்தவை. இறைவன் கோவில் கொண்டுள்ள இடம் 'தலம்' ஆகும். தலத்தில் எழுந்தருளிய இறையின் பெருமையையும், அதன்வாயிலாகத் தலத்திற்குரிய சிறப்பையும் பாடுவது தலபுராணம். தலத்தில் வழிபட்டு அருள்பெற்ருர் பலர் என்று கதைகள் அத்தலப் பகுதியில் வழங்கியிருக்கும். இவை மட்டுமன்றி, நாட்டார் கதைகள் பலவற்றையும் அத்தலத்தைச் சார்த்திச் சொல்வதுண்டு. இவ்வாறு வழங்கிய கதைகளைத் தொகுத்து, இந்திரன், சூரியன் முதலான தேவர்களும், அகத்தியர் முதலான முனிவர்களும், எறும்பு முதல் வெள்ளை யானைவரை உள்ள விலங்குகளும், பறவைகளும் இங்கு வழிபட்டு நன்மை

யடைந்தார்கள் என்று கதைகளும் புனைந்து பாடப்பெற்றது தலபுராணம் என்பது மு. அருணசலம் அவர்களின் கருத்து.

தலபுராணங்களுள் இன்று நமக்குக் கிடைத்திருக்கும் மிகப் பழைய நூல், பதின்மூன்ரும் நூற்ருண்டைச் சேர்ந்த திருவாலவாயுடையாயர் திருவிளையாடற் புராணமாகும். பெரும்பற்றப்புலியூர் நம்பியால் இயற்றப்பட்ட இந்நூலுக்கு மதுரைப் புராணம் என்ற பெயரும் உண்டு. அடுத்த நூற்ருண்டைச் சேர்ந்த உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய கோவிற் புராணம் என்ற சிதம்பரப் புராணமே மிகப் பழைய தலபுராணம் என்று கொள்வாரும் உளர். 15ஆவது, 16ஆவது நூற்ருண்டுகளிலே, வடமொழிப் புராணங்கள் பல தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டன. பதிஞருவது நூற்ருண்டிலிருந்து பத்தொன்பதாவது நூற்ருண்டுவரை பெருந்தொகையான தலபுராணங்கள் எழுந்தன.

ஒவ்வொரு தலபுராணமும் செய்யுட் தொகையில் வேறுபாடு உடையதாக அமைந்திருக்கும். காண்டங்களாகப் பிரிக்கப்பட்ட தலபுராணங்களிலே இரண்டு, மூன்று அல்லது நான்கு காண்டங்கள் காணப்படும். காண்டத்தின் உட்கூறுகள் சருக்கம், படலம், அத்தியாயம் என்ற பெயர்களில் அமைந்திருக்கும். காப்புச் செய்யுள், கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நாட்டு வருணனை, நகர வருணனை, நைமிசாரண்ணிய வருணனை முதலியன எல்லாத் தலபுராணங்களிலும் இடம்பெறும் பொதுக்கூறுகளாம். எல்லாப் புராணங்களும், நைமிசாரணியத்திலே சனகாதி முனிவர் கேட்க, சூதமுனிவர் சொன்னுர் என்றே தொடங்கும்.

தலபுராணங்கள் காவிய அமைப்பின. ஆனுல் ஒரு முக்கியமான வேறுபாடு சுட்டத்தக்கது. காவியங்களில் வரும் கதைகள் ஒரு மையக் கதையைச் சுட்டியே பின்னப்பட்டிருக்கும்; துணைக் கதைகள் மையக்கதையுடன் ஏதோவகையிலே தொடர்புடையனவாகவே அமைந்திருக்கும். தலபுராணத்தை நோக்க, எல்லாக் கதையையும் இணைத்து நிற்கும் ஒரு பெரிய கதை இல்லை; தலத்தின் பெருமையையும் தீர்த்தத்தின் பெருமையையும் மூர்த்தியின் பெருமையையும் கூறும் சிறு சிறு துண்டுக் கதைகளாக அமைந்திருக்கும். தலபுராணத்தின் தலைவன் இறைவனுக இருப்பான்.

தலமே தலைமை பெறுகின்றதென்றும் கூறலாம். தலபுராணத்தில் வரும் சிறுகதைகள் ஒரே தன்மையும் ஒரே அமைப்பும் கொண்டவை அல்ல. ஒவ்வொரு கதையும் தலம், தீர்த்தம், மூர்த்தி பெருமைபேசி நிற்பனவாகும். சமய நம்பிக்கைகளை ஊட்டுவது, தத்துவக் கருத்துக்களைச் சொல்வது, நீதி போதனைகளை நினைவூட்டுவது முதலியனவும் தலபுராணத்தின் பண்புகளாம்.

தலபுராணத்தில் வரும் வரலாறுகள் கற்பனை கலந்தவைகளாகும். பெரும்பான்மையான தலபுராணங்கள் வரலாற்றைக் கூறவேண்டுமென்ற நோக்கத்தில் எழவில்லை. தலப் பெருமை பாடும் நிலையிலே, சமயத்தோடு தொடர்புடையதாகப் பல்வேறு மட்டங்களிலே வழங்கிய கதைகளையும் நூலுள் அமைத்துக்கொண்டனர். இருப்பினும் திருவிளையாடற் புராணம் தரும் பாண்டிய வம்ச வரலாறும் தஞ்சைப் புராணம் தரும் சோழவம்ச வரலாறும் ஓரளவு உண்மை வரலாற்றை அடியொற்றியே செல்கின்றன.

தலபுராணங்கள் தலபுராணம் என்ற பெயரில் மட்டுமன்றி வேறுபல பெயர்களிலும் வழங்கப்படுகின்றன. புராணம், மான்மியம், மகாத்மியம், மகத்துவம், வைபவம், வரலாறு, வசனம் என்பன தலபுராணத்துக்கு வழங்கும் முக்கியமான பெயர்களாம். 'தமிழில் தலபுராண இலக்கியம்' என்ற பெயரிலே வே. கிருஷ்ணசாமி 1974இல் வெளியிட்ட நூலிலே, தலபுராண இலக்கியம் பற்றிச் சில முக்கியமான தகவல்களை வெளியிட்டுள்ளார். தலபுராணங்களிலிருந்து 275 ஆசிரியர் பெயர்கள் தெரிய வருகின்றன. மீனாட்சிசுந்தரம்பிள்ளை 22 புராணங்கள் எழுதியுள்ளார். பூவைக் கல்யாணசுந்தரமுதலியார் 9 புராணங்களையும் மூன்று புலவர்களுள் ஒவ்வொருவரும் 8 புராணங்களையும் செய்துள்ளனர்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எல்லாப்பகுதிகளிலும் தலபுராணங்கள் எழுந்தன. நாட்டுவாரியாகப் பார்த்தால், சோழநாட்டுத் தலங்களே அதிகப்புராணங்கள் பெற்றுள்ளன. தமிழ்நாடு மட்டுமன்றி, அண்டைய மாநிலங்களான கேரளம், ஆந்திரப்பிரதேசம், புதுச்சேரி ஆகியவற்றில் உள்ள தலங்களுக்கும் தமிழிலே புராணம் எழுதினர். இலங்கையிலும் திருகோணமலை தொடர்பான தலபுராணங்கள் எழுந்துள்ளன.

சமயரீதியாகப் பார்க்க, தலபுராணங்கள் சைவம், வைணவம், சமணம், இஸ்லாம் ஆகிய நான்கு சமயங்கள் தொடர்பாகவும் தோன்றியுள்ளன. சைவ சமயக் கடவுளர் களுள், சிவனைப்பற்றி நானூறு தலபுராணங்களும் முருகனைப் பற்றி முப்பது தலபுராணங்களும் தோன்றின. சைவப் பெண்பாற் தெய்வங்களுக்கு ஐந்து தலபுராணங்கள் காணப் படுகின்றன. சமணம் நான்கு புராணங்களையும் இஸ்லாம் இரண்டு புராணங்களையும் பெற்றுள்ளன. வைணவம் அறுபது புராணங்கள் வரை பெற்றுள்ளது.

ஒரே ஊருக்குப் பல தலபுராணங்கள் எழுவதுண்டு. மதுரை 15 தலபுராணங்கள் பெற்று முதலிடம் வகிக்கின்றது. திருவண்ணுமலை 12 புராணங்கள் பெற்று இரண்டாமிடமும் காஞ்சி 11 புராணங்கள் பெற்று மூன்றுமிடமும் சிதம்பரம் 10 புராணங்கள் பெற்று நாலிகாமிடமும் வகிக்கின்றன. வைணவசமயந் தொடர்பான புராணங்களை நோக்கும்போது திருவரங்கத்துக்கு ஆறும் திருப்பதிக்கு ஐந்தும் கிடைத்துள் ளன. தலபுராணங்களுள் மிகப்பெரிய திருநெல்வேலித் தல புராணம் ஏழாயிரம் செய்யுள்வரை கொண்டதாயிருக்க மிகச்சிறிய கௌசைப் புராணம் இருநூறுக்கும் குறைவான செய்யுள்களைக் கொண்டது.

தமிழ்நாட்டிலே தலபுராணம் பாடும் மரபு அற்றுப் போய்விட்டதென்பது வே. கிருஷ்ணசாமியின் ஆராய்ச்சி முடிபு. அவருடைய நூல் வெளிவந்தபின்பும் ஈழத்திலே தலபுராணங்கள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. யாழ்ப் பாண மாவட்டத்தின் மேற்குத் திசையிலுள்ள காரை நகரைச் சேர்ந்த 'ஈழத்துச் சிதம்பரம்' எனப் போற்றப் படும் திண்ணபுரம் சிவபிரானைத் தலைவனுகக் கொண்டு பண்டிதர் சோ. இளமுருகனுர் பாடிய திண்ணபுரத் தல புராணம் சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்தது. இப் பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தின் கிழக்குத் திசையி லுள்ள வல்லிபுரத்து மாயவனைத் தலைவனுகக் கொண்டு கு. பெரியதம்பியும் முருக வே. பரமநாதனும் பாடிய வல்லி புரத்தான் தலபுராணம் வெளிவருகிறது.

வல்லிபுரத்தான் தலபுராணம் பதினொரு சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டு 655 செய்யுள்களாற் பாடப்பட்டுள்ளது. பதினேழு செய்யுள்களைக் கொண்ட பாயிரம் வாழ்த்து,

கடவுள் வணக்கம், அவையடக்கம் என்ற மூன்றையும் உள்ளடக்கியிருக்கிறது. நூல் நன்கு நிறைவேற உதவும்படி, வல்லிபுர மாயவன் கோவிலுக்கு அண்மையிலுள்ள குருக்கட்டு விநாயகர் வணக்கம் இடம்பெற்றுள்ளது. வல்லிபுரத்தானுக்கு ஆழ்வார் என்ற சிறப்புப் பெயரும் வழங்குகிறது. நூற்பாயிரமும் பன்னிரண்டு ஆழ்வார்களுக்கும் வணக்கம் கூறியுள்ளது.

நாட்டு வருணனையைப் பாடுவதிலே வல்லிபுரத்தான் தலபுராணம் புதிய பாதையிலே செல்கிறது. நாடு என்பதைத் தலபுராணங்கள் பொதுவாகக் குறுகிய நோக்கிலேயே கொண்டுள்ளன. தமிழ்நாடு என்று ஒன்றைக்கூட அந்நூல்கள் கொள்ளவில்லை. தொண்டைமண்டலம், சோழமண்டலம், பாண்டியமண்டலம், கொங்குமண்டலம் என்ற முறையிலேயே நாட்டு வருணனை கூறப்படுவது வழக்கம். இவ்வாறு நோக்கும்போது, வல்லிபுரத்தான் தலபுராணத்தில் உள்ள பாரதநாட்டுச் சருக்கம், இலங்கைநலச் சருக்கம், யாழ்ப்பாணச் சருக்கம் என்ற மூன்றிலே ஒவ்வொன்றும் நாட்டு வருணனை கூறுகிறதென ஒவ்வொரு நோக்கிலே கூறலாம். இலங்கை சேய்நாடாகப் பாரதநாடு அதன் தாய் நாடென்ற கோட்பாட்டின் அடிப்படையிலே, பாரதநாட்டு வருணனையை அமைத்துள்ள நூலாசிரியர்கள் இலவல்லியின் பழம் பிறப்பினைப் பாரதநாட்டிலே அமைத்துள்ளார்கள்.

புத்திரப்பேறு வேண்டி, இலவல்லி பழம்பிறப்பிலே சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்ததையும் சிவபெருமான் இலங்கையிலே வல்லிபுரத்திலே போய் மறுபிறப்புப் பிறந்து திருமால் குழந்தையாக வந்து ஆட்கொள்ளப்பெறும்படி அருளியதையும் இலவல்லிக்கு வட இலங்கையிலே சிறப்புப் பெற்றிருந்த நாகதம்பிரான் வழிபாடுபற்றிப் பிருகு முனிவர் கூறியதையும் கூறும் தவம்புரி சருக்கம் பாரதநாட்டுச் சருக்கத்தையும் இலங்கைநலச் சருக்கத்தையும் தொடுத்து நிற்கிறது.

நகர வருணனை சிங்கைநகர்ச் சருக்கமாக அமைந்துள்ளது. சிங்கைநகர் என்ற யாழ்ப்பாண அரசின் பழைய தலைநகர் எவ்விடத்தில் அமைந்திருந்ததென்பதைப்பற்றி நிச்சயப்படுத்திக் கூறத்தக்க சான்று இதுவரை கிடைக்கவில்லை. நல்லூரிலேயே சிங்கைநகர் இருந்திருக்கவேண்டுமென்று வாதிக்கும் பண்டிதர்

புலவர் ஜெகநாதன் அவர்கள் அண்மையில் வெளியாக இருக்கும் 'யாழ்ப்பாண மன்னர் காலமும் வரலாறும்' என்ற தம்முடைய நூலிலே, வல்லிபுரத்திலேயிருந்த நகர் செங்கடகநகர் என்ற தலைநகர் என்ற கருத்தை வெளியிடு கிறார். வல்லிபுரப் பதியிலே பழைய தலைநகரொன்று இருந்ததென்பதை அவர் மறுக்கவில்லை. வல்லிபுரப் பகுதியில் இருந்தது சிங்கைநகரா அல்லது செங்கடகநகரா என்பது மேலும் ஆராயப்பட வேண்டியது.

வல்லிபுரச் சருக்கமும் ஒரு வகையில் நகர வருணனையே. அதனைக் கிராம வருணனை என்பது இன்னும் பொருத்த மானது. தலபுராணத்திலே, கிராம வருணனையென ஒரு பகுதி யிடம்பெறுவதில்லை. சிங்கைநகர்ச் சருக்கம் பழம் பெருமையாக நகர வருணனையைப் பாடுவதாலே, வல்லி புரச் சருக்கம் வல்லிபுரத்தின் இக்கால நிலையைச் சித்திரிக் கும் கிராம வருணனையாகக் கவிஞர்களால் அமைக்கப் பட்டிருக்கக்கூடும். வல்லிபுரம் தலத்தின் பெயருமாகும். வல்லிபுரத்தின் பெருமைகூறும் பகுதிகள் தலத்தின் பெருமை யையே கூறுகின்றன என்று விளக்குவதற்கு இடமுண்டு.

இலவல்லிச் சருக்கம் எனப்படும் எட்டாவது சருக்கமே இத்தலபுராணத்தின் இதயப்பகுதியெனலாம். வடமொழி நூலான தட்சிண கைலாயபுராணத்தின் வல்லிபுர மான் மியம் என்றகூறு இலவல்லிச் சருக்கமாக 118 செய்யுள்களிலே விரிவாக்கிப் பாடப்பட்டுள்ளது. மூலச் சிறுகதையிலே மாற்றம் எதுவும் செய்யாது இயற்கையிகந்த புதிய நிகழ்ச்சி களையோ அற்புத சம்பவங்களையோ புகுத்தாது விரிவாக்கம் செய்திருப்பது பாராட்டத்தக்கது. தமிழ்நாட்டிலும் தல புராணங்களுள் ஒரு பகுதி வடமொழி நூல்களின் மொழி பெயர்ப்புகளாகவும் தழுவல்களாகவுமே அமைந்துள்ளன. வடஇந்தியாவிலே, தலபுரணம் என்ற இலக்கிய வகை எழ வில்லை. பிரபலமான வடஇந்தியத் தலங்களுக்குப் புராணம் தோன்றவில்லை. வடமொழி வல்லுநர்களாகத் தென்னிந்தி யாவிலும் இலங்கையிலுமிருந்த அந்தணர்களே வடமொழியி லுள்ள தென்பிராந்தியத் தலபுராணமூலங்களைத் தோற்று வித்தவர்களாக இருக்க வேண்டும்.

ஆலயச் சருக்கம் வல்லிபுரக்கோவில் வரலாற்றைக் கூறுவதை நோக்கமாகக் கொண்டது. வல்லிபுரத்திலே

பிறந்து வளர்ந்தவரான முருகவே. பரமநாதன் வல்லிபுரக் கோவில் சம்பந்தமான செய்திகளைத் தேடித் தொகுப்பதிலே பேரார்வமுள்ளவர். வல்லிபுரம் இன்று ஒரு குக்கிராமம் மட்டுமே. கோவில் பிரபலமடைந்து வளர்ந்துவர நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்பட்டு, நீதிமன்றத்துக்குப் போகவேண்டிய நிலை ஏற்பட்டது. நீதிமன்றத்தின் தீர்ப்பினாலே, கோவில் நிர்வாகம் வல்லிபுரக்குறிச்சிக்கு வெளியே போய்விட்டது. தனிப்பட்ட வெளியார் நிர்வாகத்திலும் குறை காணப்பட்டதால், கோவில் நிர்வாகம் ஒரு மகாசபையிடம் ஒப்புவிக்கப் பட்டுள்ளது. அண்மைக்காலத்திலே தென்புலோலியைச் சேர்ந்த நாகலிங்கம், கணபதிப்பிள்ளை, சிவபாதம் முதலியோர் கோவில் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளையும் தல புராண ஆசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

மூர்த்தியினுடைய பெருமை இலவல்லிச் சருக்கம், ஆலயச் சருக்கம், விழாவயர் சருக்கம் என்பனவற்றிலே பயின்று காணப்படுகின்றது. வாராந்தம், ஞாயிற்றுக்கிழமைகளிலே நடைபெறும் விழா, வல்லிபுரக் கோவிலுக்கு மட்டுமுரிய தனிச்சிறப்பு. ஆண்டாண்டு பதினேழு நாட்களுக்கு நடைபெறும் சிறப்பு உற்சவம் விரிவாகப் பாடப்பட்டுள்ளது. மாயவன் மீன்வடிவிலே கடலிலே தோன்றினானெனவும் இலவல்லிக்கு சக்கரவடிவத்திலே அவன் கிடைத்ததும் கற்கோவள மக்களே சிவிகையிலே சக்கரத்தை இன்றுள்ள கோவில் காணப்படுமிடத்திலே கொண்டுவந்து சேர்த்தனரெனவும் கூறப்படுவதால், கற்கோவளத்தாருக்கும் கோவிலிலே சில சிறப்பிடங்கள் உண்டு. வருடாந்த உற்சவத்திலே வெண்ணெய் உறிதிருடல், கஞ்சன்போர், துகில் கவர்தல், பாம்பு நடனம், வேட்டை என்பன நடைபெறும் நாட்களிலே அவ்வூர்ச் சிறுவர்கள் மேற்படி நிகழ்ச்சிகளை நடித்துக் காட்டுவது வழக்காகும். தேர்த் திருவிழாவும் விரிவாக வருணிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலத்திலேயே புகுத்தப்பட்ட தேர்த்திருவிழா இன்று மிகவும் முக்கியமான விழாக்களுள் ஒன்றாக மாறியுள்ளது.

கடற்றீர்த்தமும் அதேயளவு முக்கியத்துவம் வாய்ந்த திருவிழா என்று கூறலாம். மாயவன் மீனாக உருவெடுத்து இலவல்லியிடம் அற்புதம் நிகழ்த்திக்காட்டிய கடற்கரைக்குப் போய்வருவதாகக் கூறப்படுவதால் அன்றையதினம் மக்கள் வெள்ளம் வெள்ளமாகக் கடற்கரையை நோக்கிச் செல்லுவதும் மறுபடி கடற்கரையிலிருந்து திரும்பி வருவதும் கண்கொள்ளாக் காட்சியாகும். விழாவயர் சருக்கத்தின் ஒரு பகுதி தீர்த்த மகிமை கூறுவதாக அமைந்துள்ளது. ஆசிரியர்கள் கடல்தீர்த்த விழாச் சிறப்பினை நன்கு சித்திரித்துள்ளனர்.

சீரடியார் திருச்சருக்கம் அளவிலே சிறியது. அடியாருக்கும் சருக்கத்துக்கும் அடைமொழிகள் வழங்கப்பட்டுள்ளமை கவனிக்கப்பட வேண்டியது. மகாத்மாகாந்தி யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது வல்லிபுரத்து ஆழ்வாரைத் தரிசனஞ் செய்ததற்கு நூலாசிரியர்கள் அதீத முக்கியத்துவம் வழங்கியுள்ளார்கள். இங்கும் இவர்கள் அற்புதக்கதைகளைப் படைத்துக் கூறுமை பாராட்டப்பட வேண்டியது.

தலபுராணங்களிலே இயற்கையிகந்த நிகழ்ச்சிகளும் இல்லது புணர்த்தலும் இடம்பெறுவதால், அவை இக்காலத்திலே பொதுவாகப் போற்றப்படுவதில்லை. வல்லிபுரத்தான் தலபுராணத்திலே இந்தக் குறைகள் இடம்பெறவில்லை.

யாழ்ப்பாணத்திலே 'வைணவம்' என்ற தனிச்சமயப் பிரிவு இல்லை. சைவசமயிகளே வல்லிபுரத்து மாயவனை ஆதரிக்கின்றனர். சைவாகம முறைப்படியே வல்லிபுரக் கோவிலிலே பூசை நிகழ்கின்றது. ஒருவகைச் சைவ—வைணவ சமரசம் அப்பகுதியிலே நிலவுகிறது. பாரதநாட்டுச் சருக்கத்திலே, நூலாசிரியர்கள் இச் சமரசத்தைச் சித்திரித்துள்ள முறை பொருத்தமாகவும் சிறப்பாகவும் அமைந்துள்ளது.

மாயவன் துணை.

**பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை,**
தமிழ்த்துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

17-7-87

வல்லிபுரத்தான் துணை

# நுழைவாயில்

*0 . 0.* பொன்னித்திட்டி லமைந்திருப்பது பொன்னரங்கம், வல்லிபுரமணற்றிட்டி லமைந்திருப்பது ஆழ்வார் சுவாமி ஆலயம். விஷ்ணு சகஸ்ரநாமங்களில் வல்லிபுரம் என்ற பெயரில்லை. வல்லிபுரம் ஒரு ஊர். ஊரின் பெயர் க்ஷேத் திரத்துக்காயிற்று. ஸ்ரீரங்கம், திருப்பதி, சிதம்பரம் போன்ற புனிததலப் பெயர்களை மக்களுக்கு வைப்பது வழக்கம். நமது நாட்டில் மாவிட்டபுரம், முன்னேஸ்வரம், கதிர்காமம் எனக் குழந்தைகட்குப் பெயர் சூட்டுவதில்லை. ஆனால் வல்லிபுரம் என்ற பெயர் நிறைய உண்டு. இங்குள்ள மூலவர் ஆழ்வார் சுவாமி. எறும்பூர், திருக்கோவலூர், பர்மா கல்வெட்டுகள் பகவானை ஆழ்வார் சுவாமியெனக் குறிப்பிடுகின்றன. வல்லிபுரத்து மூத்த குடியினரே இக் கோயிலைக் கட்டி எழுப்பினர். அவர்கள் திருமாலுக்கிட்ட பெயருமதுவே. இஃது ஞானதீட்சண்யமான செயற் பாடாகும். இத்திருநாமத்தை, விலாசத்தை மாற்றுவது ஏற்புடைத்தன்று.

*1 . 0.* வல்லிபுரம் கொடிகாமம் மந்திகை நெடுஞ் சாலைக்குக் கிழக்கே வங்கக்கடல் வரை பரந்திருக்கிறது. கடலில் அம்பெறிந்த தூரம்வரை இதனெல்லை என்பர். வல்லிபுரக் குறிச்சி யென்ற வழக்காறும் பயின்றுவரக் காண லாம். இங்கேயோர் உப அஞ்சலகம் உண்டு. இக் கிராமத் தின் தபால், தந்தி, தொலைபேசித் தொடர்பு புலோலி அஞ்சலகத்துடன் நடைபெறும். தேர்தல் இடாப்பில் வல்லி புரம் தனிப்பிரிவு. பருத்தித்துறைத் தொகுதியைச் சேர்ந்தது. உணவு, உப உணவு விநியோகம் புலோலி ப. நோ. கூ. சங்கமூலம் வழங்கப்படும். இங்கு இரு கிளைச்சங்கங்களுண்டு, பூகோள, புவியியல் வரலாற்று இறைமை இயற்கை

யமைவு ரீதியிலும் தனிக்கிராமம் இது. இங்கே குருக்கட்டுப் பிள்ளையார் கோயில், ஆழ்வார் சுவாமி கோயில் என்னும் இரு கற்றளிகள் உள. தென்புலோலி மேற்கு வடக்கெல்லை, கடல் கிழக்கெல்லை, மாவடிவீதி வலிக்கண்டி தெற்கெல்லை. நெய்தலும் மருதமும் விரவிய ஊர் வல்லிபுரம்.

2.0. வல்லிபுரம் முன் வடமராட்சி மேற்கின் கீழ்பால் அமைந்திருந்தது. இப்போ வடமராட்சி வடக்கு – கிழக்கு உப அரசாங்க அதிபரின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. தோம்பு வல்லிபுரக் குறிச்சி இறை என அமைந்துள்ளது. சிங்கைநகரே வல்லிபுரம் என ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. பொற்சாசனம், முதுமக்கட்டாழி, பழைய காசுகள் முதலிய தடையங்கள் இதை உருசுப்படுத்துகின்றன.

பரணவிதான - போல் பீரிஸ், பெக்லி, கலாநிதிகள் கணபதிப்பிள்ளை, வேலுப்பிள்ளை, வித்தியானந்தன், சிற்றம்பலம், இந்திரபாலா, முதலியார் முத்துத்தம்பி, குல. சபாநாதன், கலைப்புலவர், குலரத்தினம், சுவாமி ஞானப்பிரகாசர், ஆ. தேவராசன், செங்கைஆழியான் என்னும் மேதாவிகள் இதைப் பற்றி எழுதியுள்ளனர். கலாநிதி பாலசுந்தரம் எழுதிய யாழ் மாவட்ட இடப்பெயராய்வு என்னும் நூல் வல்லிபுர இடப்பெயர் விளக்கத்தைத் தருகிறது.

3.0. தட்சிண கைலாயபுராணம், ஸ்காந்த புராணம், கோகுல சந்தேஸ, யாழ்ப்பாண வைபவ கௌமுதி, வைபவ மாலை, இலங்கை புராதன இந்து ஆலயங்கள், வல்லிபுரத் திருவந்தாதி, குருக்கட்டுத் திருவந்தாதி, பள்ளியெழுச்சி, கருடன்விடுதூது, திருவடிப் புகழ்ச்சி, ஆழ்கடலான், மும்மணி மாலை, வல்லிபுரநாதர் பதிகம், கொன்றைப்பத்து, சிங்கைநகர்ப் பதிகம் என்னும் பனுவல்கள், வல்லிபுர மான்மியம் பேசுகின்றன. புரம் என்னும் சொல்லால் முடியும் பெயரைக்கொண்ட ஊர் மண்டலம், கோட்டம், கூற்றம் என்பவற்றின் தலைநகர். எனவே வல்லிபுரமும்

தொல்பெருந் தலைநகராகும். தானம் என்றூற் கோயில். தானத்தார் கோயிலதிகாரிகள். வல்லிபுரக்கோயிலின் ஆதி கர்த்தாக்கள் அவர்களே.

4.0. துன்னாலை, வடக்கு தெற்கு என இரு பிரிவுகளை உடையது. கொடிகாமம் வீதிக்கு மேற்கே கோயில் கடவை வரை பரந்துள்ளது. துன்னாலை தெற்கிலோர் உப அஞ்சலகம் உண்டு. துன்னாலை வடக்கிற்குரிய அஞ்சலகம் கரவெட்டி. தபால் தந்தி தொலைபேசித் தொடர்புகளும் விநியோகமும் இவ்வஞ்சலகத்தின் நிர்வாகத்துக்குட்பட்டது. இங்கே புளியங் கியான், வல்லியானந்தம், வெல்லிக்கந்தோட்டம் என்னும் மூன்று விநாயகர் ஆலயங்களுண்டு. வல்லிபுரக் கோயிலுடன் துன்னாலை வடக்கைச் சேர்த்து தபால் முகவரி எழுதுவது இலைச் சோற்றிற் பூசினிக்காய்க் கதைதான். துன்னாலை வடக்கிற்கு புலோலி அஞ்சலகத்திலிருந்து தபால் பட்டு வாடா செய்யப்படுவதில்லை. ஒரே ஊரிலமைந்த குருக்கட்டுப் பிள்ளையார் கோயிலுக்குரிய முகவரியே வல்லிபுரக் கோயி லுக்கும், வழமையான முகவரி ஆழ்வார் சுவாமி ஆலயம், வல்லிபுரம், புலோலி, சிறீலங்கா ஆகும்.

5.0. புத்தடிசங்கிலயடி ஆலயக் காணியின் பெயர். நாக தம்பிரான் நாச்சியார் கோயில்கள் அமைந்த இடம் பொடிக் காய்ச்சியடி. வல்லிபுரநாதர் ஆலயமொன்று கோண்டாவிலில் கடந்த தலைமுறையிலமைக்கப்பட்டு, வைணவ சம்பிரதாயப் படி நிர்வகிக்கப்படுகிறது. வல்லிபுரத்து மக்களாலமைக்கப் பட்ட இன்னோர் கிருஷ்ணன் கோயில் மல்வில். இதற்கும் குற வஞ்சி பாடப்பட்டிருக்கிறது. கீழ்கரவை செங்குந்தாமரபினரே வல்லிபுரக் கோயிலுக்குக் கொடிச்சீலை வழங்கிவருகிறூர்கள். வல்லிபுரத்தார் கட்டிவைத்த மரபுகள், பாரம்பரியங்கள், வழமைகள், சம்பிரதாயங்கள் இன்றுமுள்ளன. 19ஆம் நூற் ருண்டின் இறுதி வாக்கில் கோயிலை நிர்வகித்துப் பூஜைசெய்த தாமர், நினைவர் என்னும் சகோதரர் இருவருக்கு மேற்பட்ட தகராறு நீதிமன்றம் போனபோது மத்தியஸ்தர் ஒருவரின்

தலைமையில் இவ்விருவரின் வழிநடத்துகையின்கீழ் கோயில் நிர்வகிக்கப்பட்டதாகச் சான்றுகள் பகர்கின்றன.

*6.0.* ஸ்ரீமந் நாராயணனை முழுமுதற் பெருமானாக, மூலவராகக் கொண்டு வணங்கும் ஆலயம் வல்லிபுரக்கோயில். அங்கே பூசையும் ஆராதனையும் அர்ச்சனையும் விழாவும் அவனுக்கே நடைபெறுகின்றன. ஆனால் உற்சவாதியின்போது பஞ்சபுராணங்களை ஒழுங்கின்றி ஓதுவது திருமாலை இரண்டாவது மூன்றாவது இடத்தில் வைப்பதுமட்டுமன்றி—பகவானை அபசாரம் செய்வதுமாகும். திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி சேவிப்பதுபோல, திருநாலாயிரம் ஓதுவதே எல்லா விஷ்ணு ஆலயங்களுக்குமுரியது. ஏகாதசிபுராணம் படிப்பதும் பகவானுடைய விபூதியை விளக்கவே. பன்னிரு ஆழ்வாருக்கும் கோயில் எடுக்கவிருக்கும் இந்த க்ஷேத்திரத்தில் இனியாதல் திருநாலாயிரம் இடம்பெறுமென எதிர்பார்க்கிறார்கள் விஷ்ணு அடியார்கள். வைணவ தத்துவ தரிசனங்களை மறுப்பதுமோர் அறியாமையே. அத்துடன் கோயில்பற்றி எழுந்த பிரபந்தங்களை அழியாமற் பாதுகாப்பதும் முக்கியமாகும்.

கண்ணன்காப்பாக.

Aum

# Sri Vallipura Alvar Swamy Kovil
# Vallipuram, Puloly, Pt. Pedro

**" The oldest temple in Jaffna, dedicated to Rama and Krishna, were at Vaillipuram and Punnalai respectively and they are mentioned in the Kohila Sandessa ", writes Mudaliyar C. Rasanayagam.**

About four miles from Pt. Pedro on the road to Chempian Pattu is the ancient Vallipuram Temple, dedicated to the worship of Maha Vishnu. Situated amidst a vast expanse of sand dunes, it little reminds us of the area that was once the capital city of the Jaffna Kingdom.

The origin of this ancient Vishnu Sthalam is legendary, alike all ancient temples. References can be found in the Dakshana Kailasa Puranam and in the Dakshana Kailasa Manmiam under the caption Vallipura Vaipavam. It would appear that the locality was associated from hoary antiquity, with a Vishnuvite environment. Thither came Lavalli Ammaiyar, a pious lady. She had been afflicted with a nagathosham curse and was therefore deprived of having any progeny. She had been advised to seek this place, sacred to Vishnu, and perform thapas beseeching Him for the remission of her sins. She thus performed thapas daily

with arms spread out facing the sea, in the hope that one day Lord Vishnu would appear before her, arising from the ocean (Vishnu Loham).

It was a fishing village, and one day when the fisherfolks cast their nets an unusually large fish was landed in their boat which started jumping about here and there and finally landed straight into the arms of Lavalli Ammaiyar. As she fondled it, the fish assumed the shape of an infant and to the amazement of everyone had all the appearances of Lord Vishnu himself. The village folks were overjoyed and congratulated themselves on this visitation by the Lord. When the infant vanished an old seer who was present gave to the people a Vishnu Sakkaram, which they decided to install at the spot and venerate it in commemoration of the event. To this day **a sakkaram is the chief object of veneration at Vallipuram** and is to be found in the sanctum moolasthanam of Vallipuram Alwar Swamy Kovil.

This city (puram) of Lavalli (valli) Ammaiyar is soon to figure in history, as Síngai Nagar.

The site figures in several early historical references A. Mootootamby Pillay in his "Jaffna History" writes (p. 13) that among those who were brought to settle in Jaffna were some from the North of Thondai Nadu; the place they settled down assumed the name of Vadamar Achchi (now Vadamarachchi), meaning occupied by the Northerners. That region where Vallia Thevan was the Chief settler, became known as Vallipuram. They were Telugu people and were Vaishnavaties. So

a temple for the worship of Sri Vishnu got built at Vallipuram. Mudaliyar Rasanayagam refers to it as the oldest temple in Jaffna, dedicated to Sri Rama Bhagavan.

The area becomes prominent in mediaeval history when the Kalinga Singai Ariyan, Who ruled from 1215-1240 A. C., as the first Ariya Chakravarti King of Jaffna, built his capital there, Singai Nagar, as it was named, continued to be the capital city of the Ariya Chakravarti Kings. Kulasekara Para Rajasekeram (1240-1256), Kulottungo (1256-1279), Vikkrama (1279-1302), Varothaya (1302-1325) and Martanee Perum Alan (1325-1348) and so on until it was broken down by Bhuvanega Bahu who preferred to build a new capital at Nallur, during the years 1440-1467 A. C.

Vallipuram is one of the oldest temples in Jaffna. In the sanctum is Vishnu's Sakkaram, as mentioned earlier and a venerated Sakkaram occupies the place of the utsava moorthy or the deity that is taken out in processions. In the adjoining shrine, facing south of the moolasthanam is found Lord Vishnu Himself, entrancingly divine. In the praharam is found the Vinayaka shrine in the usual south west corner and next to it is a Nagathambiran shrine; Nachchiar-shrine is found at the north west corner, facing south and Hanuman occupies the shrine where usually Vairavar is located in Sivan Temples. The navagraham in the usual place completes the prahara shrines.

The temple attracts large crowds of worshippers daily and on Sundays in particular. A very efficient

management which took charge in 1976 deserves the gratitude of every devotee for the systematic arrangement of the function of this Devasthanam. Pujas and other rituals are held sharp to time and every thing moves in an orderly manner.

The atmosphere reminds one of the celebrated temple at Tirupathy in South India. The annual festival is usually held in August-September, culminating with the ratham festival, a day before the theertham, besides which there are several special festivals.

Pulavar Peethamparam (1819) has composed a garland of verses entitled Vallipuram Pathiham (Tamil) later Sivasampoo Pulavar (1852-1910) also has offered to the Lord a Pathiham of verses. The 1977 Kumba-Abishega Malar published by the new Trustee Board provides useful reading matter.

**EDITED & PUBLISHED BY**
**AZHKADALAN**

**Thiruppalli Eluchchi**

**Kerudan Vidu Thuthu**

**Thiruvadip Pukalchchi**

**Konraippaththu**

**Singai Nagarp Pathikam**

**Vallipurath Thiruvanthathi**

**Kurukkadduth Thiruvanthathi**

**Azhkadalan** (History of Vallipuram Temple)

ஶ்ரீ

ஶ்ரீமதே ராமாநுஜாய நம

# கணபுரத்தொளிர் காகுத்தன் தாலாட்டு

மன்னுபுகழ்க் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னிநன்மா மதில்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே,
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ. 1

புண்டரிக மலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே,
திண்டிறலாள் தாடகைதன் உரமுருவச் சிலைவளைத்தாய்,
கண்டவர்தம் மனம்வழங்கும் கணபுரத்தென் கருமணியே,
எண்டிசையு மாளுடையாய்! இராகவனே! தாலேலோ. 2

கொங்குமலி கருங்குழலாள் கோசலைதன் குலமதலாய்,
தங்குபெரும் புகழ்ச்சனகன் திருமருகா! தாசரதீ!
கங்கையிலும் தீர்த்தமலி கணபுரத்தென் கருமணியே,
எங்கள்குலத் தின்னமுதே! இராகவனே! தாலேலோ. 3

தாமரைமே லயனவனைப் படைத்தவனே, தசரதன்றன்
மாமதலாய்! மைதிலிதன் மணவாளா, வண்டினங்கள்
காமரங்க ளிசைபாடும் கணபுரத்தென் கருமணியே
ஏமருவும் சிலைவலவா! இராகவனே! தாலேலோ. 4

பாராளும் படர்செல்வம் பரதநம்பிக் கேயருளி,
ஆராவன் பிளையவனோ டருங்கான மடைந்தவனே,
சீராளும் வரைமார்பா! திருக்கண்ண புரத்தரசே,
தாராளும் நீண்முடியென் தாசரதி! தாலேலோ. 5

சுற்றமெல்லாம் பின்தொடரத் தொல்கான மடைந்தவனே,
அற்றவர்கட் கருமருந்தே! அயோத்திநகர்க் கதிபதியே,
கற்றவர்கள் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே,
சிற்றவைதன் சொல்கொண்ட சீராமா! தாலேலோ. 6

ஆலினிலைப் பாலகனா யன்றுல முண்டவனே,
வாலியைக்கொன் றரசிளைய வானரத்துக் களித்தவனே,
காலின்மணி கரையலைக்கும் கணபுரத்தென் கருமணியே,
ஆலிநகர்க் கதிபதியே! அயோத்திமனே! தாலேலோ. 7

மலையதனா லணைகட்டி மதிளிலங்கை யழித்தவனே,
அலைகடலைக் கடைந்தமரர்க் கமுதருளிச் செய்தவனே,
கலைவலவர் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே,
சிலைவலவா! சேவகனே! சீராமா! தாலேலோ. 8

தளையவிழும் நறுங்குஞ்சித் தயரதன்றன் குலமதலாய்,
வளையவொரு சிலையதனால் மதிளிலங்கை யழித்தவனே,
களைகழுநீர் மருங்கலரும் கணபுரத்தென் கருமணியே,
இளையவர்கட் கருளுடையாய்! இராகவனே! தாலேலோ. 9

தேவரையு மசுரரையும் திசைகளையும் படைத்தவனே,
யாவரும்வந் தடிவணங்க அரங்கநகர்த் துயின்றவனே,
காவிரிநல் நதிபாயும் கணபுரத்தென் கருமணியே,
ஏவரிவெஞ் சிலைவலவா! இராகவனே! தாலேலோ. 10

கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் காகுத்தன்,
தன்னடிமேல், 'தாலேலோ' என்றுரைத்த தமிழ்மாலை,
கொல்நவிலும் வேல்வலவன் குடைக்குலசே கரன்சொன்ன,
பன்னியநூல் பத்தும்வல்லார் பாங்காய பத்தர்களே. 11

— பெருமாள் திருமொழி

(தவத்திரு முருகேசு சுவாமிகளின் விருப்பத்துக்கமைய வெளியிடப்படுகிறது.)

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| ஆசியுரை | ... | ... | iv |
| பதிப்புரை | ... | ... | v |
| புராணம் மலர்ந்த கதை | ... | ... | viii |
| முன்னுரை | ... | ... | ix |
| நுழைவாயில் | ... | ... | xvii |
| Sri Vallipura Alvar Swamy Kovil | ... | ... | xxi |
| கணபுரத்தொளிர் காகுத்தன் தாலாட்டு | | ... | xxv |
| 1. பாயிரச் சருக்கம் | ... | ... | 1 |
| 2. பாரதநாட்டுச் சருக்கம் | ... | ... | 4 |
| 3. தவம்புரி சருக்கம் | ... | ... | 12 |
| 4. இலங்கைநலச் சருக்கம் | ... | ... | 19 |
| 5. யாழ்ப்பாணச் சருக்கம் | ... | ... | 25 |
| 6. சிங்கைநகர்ச் சருக்கம் | ... | ... | 29 |
| 7. வல்லிபுரச் சருக்கம் | ... | ... | 38 |
| 8. இலவல்லிச் சருக்கம் | ... | ... | 56 |
| 9. ஆலயச் சருக்கம் | ... | ... | 76 |
| 10. விழாவயர் சருக்கம் | ... | ... | 89 |
| 11. சீரடியார் திருச்சருக்கம் | ... | ... | 109 |

# ஸர்வம் கோவிந்தமயம்

பிருந்தாவன ஸாரங்க — ஆதி

பல்லவி

பிருந்தாவன ஸாரங்கன் — ரங்கன்
மருந்தான கோவிந்தன்
மாதவன் அரவிந்தன்.

அனுபல்லவி

ஸ்ருங்கார மஹாலக்ஷ்மி
அலங்கார நாயகன்
பெருங்கான லோலனும்
பெருமாள் பதம்பணிவாய்.

சரணம்

அல்லியும் ஆம்பலும்
அழகு மலர்பொலியும்
வல்லி புரத்தலத்தில்
வாழும் பெருமானை
அல்லும் பகலும்துதி
அவன்திரு நாமம்பாடு
அல்லல் அகன்றிடுமே
ஆனந்தம் பொங்கிடுமே

—" கவிமாமணி "

உ

ஸ்ரீராமஜெயம்

# வல்லிபுரத்தான் தலபுராணம்

## 1. பாயிரச் சருக்கம்

வல்லி புரத்துறை வாழ்வுடை நாயகன்
அல்லல் கெடுத்தெமை ஆண்டருள் செய்பவன்
புல்லிவந் தித்தலம் பொருந்திய மாக்கதை
சொல்லிட வைங்கரன் தாளிணை போற்றுதும். 1

ஏத்துங் குருக்கட் டெழிற்றல மேவிய
மாத்துணை யாகிய மாதவன் ஐங்கரன்
பூத்துணை யாகிய பொற்புயர் நற்பதம்
ஏத்துதும் வல்லிதன் இன்கதை கூறவே. 2

எக்கண மேனு மேதிடர் நேரினும்
மிக்க வருணலம் மேவிவந் தவ்விடர்
தக்க வுயர்நெறி தாங்கித் தவிர்த்திடும்
சக்கர மூர்த்தி தாளிணை போற்றுதும். 3

மாயனுக் குற்ற மகிமைகொள் பள்ளியிங்
காயவன் தூய அடியிணை போற்றுதும்
நேய முடனுயர் நிர்மல னன்னவற்
காய புராண மன்புட னேதநாம். 4

வல்வினை மாய வலிகெடுத் திங்குநம்
அல்ல லகற்றி யருள்நல மீந்திடு
செல்வத் திருவருள் சேருயர் நற்பதி
கல்வளை ஆச்சி கழலிணை போற்றுதும். 5

பக்தி மிகுந்துநற் பண்பி னுயர்ந்துயர்
உத்தம தூதி னுயருரு நாயகன்
சித்தி மிகுதிறல் சேரனு மானவன்
உத்தம நற்பத முளமுவந் தேத்துதும். 6

வெள்ளைத் திருமலர் வேண்டுநன் நாயகி
உள்ளக் கமல முறைந்துயர் அன்பர்தம்
கள்ள மகற்றிக் கலைநல மீபவள்
தெள்ளத் தெளியுநற் திருவடி போற்றுதும். 7

முன்னைத் தவநலம் மூண்டிடு தன்மையின்
என்னை விளித்தீங் கின்னல மெய்திட
நன்னர் உசாவி நாயகன் தாளிணைக்
கென்னை வழிசெய்த வென்குரு வாழிய. 8

வானம் வழங்குக வையக மோங்குக
ஆனுயர் தேவனுக் கைந்தளித் தோங்குக
தானஞ் சிறந்து தவந்தழைத் தெங்கணும்
ஞானமும் பக்தியும் நற்பய னீயவே. 9

வேத மோடுயர் ஆகம நன்னெறி
பேத மிலாது பேணி யுலகினில்
ஆதியெம் தேவ னருட்பதம் போற்றிநல்
நீதி நிறைவொடு நீணில மோங்குக. 10

நீல மாமணி வண்ண னருண்மிகு
மாலய மாமணி இன்னிசை யோங்குக
நாளு மெமக்கவன் நல்லரு ளீகுக
சீலமிங் கெய்திநம் சிந்தை திருந்தவே. 11

வேறு

வாழ்வினை தூய மாயன் வணக்கத்திற் குரிய தாக்கித்
தாழ்வினை நீத்து வாழ்ந்த தகுந்தசீர் நலத்தி னாலே
ஊழ்வினை நீக்கி யுய்ந்த உயர்வுடைப் பக்த ராய
ஆழ்வார்பன் னிருவ ரவர் அடியிணை போற்றி வாழ்வாம். 12

## வேறு

வல்லிபுரத் திருத்தலத்தில் வந்துறையும் பேரடியார்
எல்லார்க்கும் நாமடியேன் எம்பிரான் அருள்நலஞ்சேர்
நல்லோராம் அவர்கூட்டம் நயந்தினிது போற்றுகிறேம்
வெல்லுகநல் அடிமைநலம் விளங்குகபே ரருட்திறமே. 13

நல்லருளின் திறமுரைக்கும் தக்கிணநற் கைலாய
சொல்லருள்சீர்ச் சுவையுடைய தூயவுயர் புராணமிங்கு
சொல்லியவும் பிறவுளவும் கொண்டினிது கூறுகிறேம்
வல்லிபுர வைபவநற் புராணமெனு மிந்நூலே. 14

ஆற்றலெமக் கில்லையென மறுத்துமன்பர் தொடர்ந்திதனை
ஏற்றருளப் பணிக்கின்றார் எம்பெருமா னாணையெனப்
போற்றியிதை யேற்றுநாம் புகல்கின்றேம் பிழைகளுறின்
மாற்றவெமக் குரைத்தருளி மன்னிக்க வேண்டுகிறேம். 15

இலவல்லி எனும்மாதே இத்தலமிங் காவதற்காம்
தலவல்லி ஆகின்றாள் தகுதிபெறு வைசிகர்தம்
குலவல்லி ஆகிமுன்னாள் குறித்ததவப் பெருமையிந்தத்
தலவல்லி யாக்கிடவே தாங்குகிறா ளுயர்பெருமை. 16

வல்லிபுர மகிமையொடு வரமுயர்சீர் இலவல்லி
சொல்லுமுயர் மகிமையுமே தொடர்ந்திங்கே இணைந்துவர
நல்லவா றிவ்வுயர்நூல் நாடியினி திங்குநாம்
சொல்லலியல் பிணைந்துளது சோர்வுளவேற் பொறுத்தருள்க.

# 2. பாரத நாட்டுச் சருக்கம்

சீர்மிகு வளத்தி னோடு சிந்தையும் தூய தாகி
ஏர்மிக விளைவி னோங்க இணையிலா முயற்சி மேவி
பேர்மிகு தெய்வ வாழ்வைப் பேணுநற் தன்மை யாலே
பார்மிகு நாடு தன்னிற் பாரதம் சிறந்த தாகும். 1

ஆவினைப் பேணிக் காத்தே அதன்பய னரனுக் காக்கி
நாவினில் நாம முன்னி நற்கரம் சிரமேற் தாங்கி
பூவினோ டினிய நன்னீர் பொருந்தவிங் கிட்டு நாளும்
மேவரன் பாதம் போற்றும் மேன்மையா லுயர்ந்த நாடு. 2

வாழ்வைநற் செம்மை யாக்கி வரமருள் பேணி யுற்ற
ஊழ்வினை புறங்கண் டுய்யும் உயர்வுடை மக்கட் கூட்டம்
சூழ்வதிவ் வுயர்ந்த நாடு சுதந்திர வான்ம லாப
வாழ்வினை நாடும் நாடு வளமாரிப் பரத நாடு. 3

மதம்பல தோற்று வித்து மற்றுள நாட்டுக் கீந்தே
இதம்பல நாடும் நாடு இணைவுடைத் தேவன் தூய
பதம்பெற வருளும் நாடு பகையினை வெறுக்கும் நாடிவ்
விதம்பெறு தன்மை மேவி வீறுறும் பரத நாடு. 4

தோன்றிய மதங்க ளுக்கோர் தொகைசொல முடியா தேனும்
ஆன்றறிந் துணர்ந்த தூயோர் அருணெறி மார்க்க மேதான்
ஊன்றிகழ் வாழ்வுக் குற்ற உறுதியென் றுண்மை தேர்ந்த
வான்திகழ் வுடைய நாடு வளமிகு பரத நாடு. 5

வேதமோர் பொதுநூ லாக வேறுவே றுாக மங்கள்
போதமார் கிரியை ஞானம் புகட்டுநன் நூல்க ளாக
பாதபங் கயங்கள் போற்றிப் பரமனைப் பணியுந் தூய
சாதனை மிக்க நாடு சால்புறு பரத நாடு. 6

சூழ்வுறு முயிரைக் கொன்று கொல்லுமப் பாத கத்தால்
ஊழ்வினை மறுமைக் காகும் ஓர்நெறி மேவி யாற்றும்
வேள்வியை வெறுத்துப் புத்தர் விளக்கிய மார்க்கம் நன்றே
சூழ்வுறு நாட்டுக் கீந்தநித் தொழுதகு பரத நாடு. 7

உற்றநற் சைவம் தூய உயர்வுறு வைண வம்சீர்
பெற்றநற் புத்த மார்க்கம் பேணியிங் குதவி யீந்த
நற்றவ நலம்கொள் நாடு நலங்கிள ரிலங்கைக் காய
குற்றமில் தாய்நா டாகும் குலவுமிப் பரத நாடு. 8

இந்திய நாட்டி னின்றும் இலங்கையை நாடி மிக்கோர்
வந்துளார் அவர்க ளோடு வணங்குநன் மூர்த்தி கொள்கை
உந்துநற் கலைகலாச் சார உயர்வுறு மார்க்க மெல்லாம்
தந்துள தாத லாலே தாயிதற் கந்த நாடு. 9

## வேறு

தாயெனவே நாம்நிதமும் தழுவிவாழும்
  தகைமையுறு பார தத்தின்
நேயமொடு தூயபக்தர் வாழ்வினுயர்
  நிலைமையினை நினைந்து நோக்கி
மாயநெறி கலந்துய்ந்து மருவிநீங்கி
  மலரடிகள் போற்றி அன்பிற்
காயநெறி போற்றியருள் பேணிவாழ்வார்
  அவர்மகிமை சிறப்ப நன்றே. 10

எம்பெருமான் பிறவியெமக் கீந்ததெலாம்
  ஏதுக்கென் றெண்ணா தென்றும்
ஐம்பொறியின் வசப்பட்டிங் கதுவேதான்
  ஆயவொரு தஞ்ச மென்று
வெம்பிறவிப் பெரும்பிணியை யின்னுமிங்கே
  விளைந்துமிக வாடு கின்றோம்
ஐம்புலனை வென்றடியா ரல்லவின்றி
  அருள்நெறியிற் றழைக்கின் றாரே. 11

## வேறு

வேதநெறி வாழ்கவுயர் ஆகமங்கள் வாழ்க
வேதாந்தம் வாழ்கவுயர் சித்தாந்தம் வாழ்க
போதமுறு வியாசமுனி நாமம் வாழ்க
போற்றுமவர் பணிவாழ்க புராணம் வாழ்க
சூதமுனி வாழ்கவுயர் நைமிசா ரணியச்
சூழலுறு மாமுனிவர் மகிமை வாழ்க
ஏதமிலாத் திருமாதிங் கிலங்கி வாழ்க
எம்பிரான் வல்லிபுரம் இனிது வாழ்க. 12

கற்றுணர்ந்த சூதமுனி கூறு கின்றார்
கருத்துடனே மற்றவரும் கேட்கின் றார்கள்
குற்றமிலா முனிவர்களே எனவி ளித்து
கோதிலா வல்லிபுர வைப வத்தை
உற்றணைந்து பிரியாதே யுடனி ருக்கும்
உத்தமியாள் மலர்மாது வாழு கின்ற
நற்றலமாம் மகிமையுறு தன்மை யாலே
நாடினுன் மாயனந்த மாத வத்தை. 13

பத்தியிலே மிகவுயர்ந்து துலங்கும் நாடு
பண்புடனே இராவணனுர் தமத கந்தை
புத்திவழி நின்றிலங்கி சிரம கற்ற
பொருந்திப்பின் பக்தியினு லதனை மீட்ட
சித்தியிலே சிறந்ததுயர் இலங்கை நாடு
திருக்கோணேஸ் வரம்கேதீஸ் வரமி வைகள்
உத்தமநல் அருளீயு மிந்த நாடு
உத்தமநல் வளமிகுந்திங் கிலங்கு நாடு. 14

போற்றுமுயர் நலம்படைத்த ஈழ நாட்டிற்
பொருந்தியுறு வடதிசைக்கண் ஈசன் வாழும்
ஏற்றமுறு தலம்படைத்த யாழ்ப்பா ணத்தே
யினியவொரு பகுதியின்மிக் கூக்க மோடங்
காற்றிடுசீ ருழுதொழிலும் மந்தை பேணி
ஆக்கமுறும் பணியுமுற்ற மக்கள் வாழும்
தோற்றமுறு வல்லிபுர மாய நல்லூர்
தூயவருள் இலக்குமியாள் துலங்கும் சீரூர். 15

விலங்குகளிற் பசுமிகவும் சிறந்த தாகும்
வினைவுகளிற் செந்நெல்லிற் கீடே யில்லை
இலங்குகின்ற விருட்சத்திற் பனையைப் போல
எவையுமே பயனீயா கற்ப கத்தின்
துலங்குநல மிதற்குண்டு நூல்க ளெல்லாம்
தொலையாதே பேணநாம் எழுது மேட்டின்
நலங்கிடைப்ப திப்பனையின் நலத்தி னாலே
நாமகளும் இதைநயப்பாள் வியந்து நன்றே. 16

பூமியிலே பொருந்திவிளைந் துற்ற தன்மை
போற்றுதே வறுமையிலே உழல்ப வர்க்கிங்
காமுதவி யார்செய்வார் இங்குள் ளோர்கள்
அப்பனையின் பயன்பேணி உணவு தேடி
தாமுண்டு பிறர்க்குமீவார் மனைவ குக்க
மாடாடு வளர்க்கமிக வின்னு மின்னும்
ஆமுரிய பணிகளுக்கும் நலம ளிக்கும்
ஆதலினுல் இலக்குமியும் வியக்கு மன்றே. 17

ஏர்நலமிங் குண்டுநிதம் பசுவைப் பேணி
இனிதுநல மீந்திடுவார் தாம ரைப்பூ
சேர்நலமும் நிலவளமும் சிறப்ப வுண்டு
சிதையாத முயற்சிநல மகிமை யுண்டு
நேர்நலமார் இந்நிலைமை இலக்கு மிக்காம்
நிறைநிலைமை யாதலினு லித்த லத்திற்
சேர்நிலைமை மாயனுற்றுன் ஒரில வல்லி
சிறப்புடனே பிறப்பதற்கு மாய தன்றே. 18

வங்கவுயர் கடல்சூழும் வளமு டைத்து
வளர்கரையில் மலைகள்தனை நினைவு றுத்தும்
பொங்குமணற் கும்பியுண்டு பசுக்கள் மேயும்
புனிதமிகு மறுகுண்டு சாணி மீது
மங்கலமாய் யறுகுபுனை ந் தேத்தும் தூய
மாமுதல்வன் ஐங்கரனுர் உறைந்து நித்தம்
இங்கிடர்கள் தீர்க்கின்றுர் இன்ன லில்லை
இனிதாய மாரிதரு மாறு முண்டு. 19

ஓடுகின்ற பேராறிங் கில்லை யேனும்
உற்றமழை வெள்ளமுயர் ஆறு போல
கூடிவரும் குளம்நிறையும் விலங்கி னங்கள்
குடிப்பதற்கும் மூழ்குதற்கும் வசதி யுண்டு
நாடுகின்ற கமத்தொழிலின் நலன் சிறக்க
நன்றாய மும்மாரி நலனு முண்டு
தேடுகின்ற வூதியங்கொண் டறம்வ ளர்க்கும்
சீருண்டு நயந்துறைவாள் திருமா திங்கே. 20

உண்ணுமுயர் காய்கறிகள் பலவு முண்டு
உவந்தவற்றைப் பயிராக்கக் கிணற கழ்ந்து
நண்ணிவரும் நீர்நலத்தைப் பேணு கின்றார்
நாடெல்லாம் போற்றுமுய ராற்ற லுற்றார்
புண்ணியத்தின் நலமோங்கு மீழ நாட்டிற்
பொருந்துமிந்த வல்லிபுரக் குறிச்சி போல
அண்ணலருண் மாயனுக்குத் தக்கதல மேதோ
ஆதலினா லிலக்குமியிங் குறைகின் றாளே. 21

இலக்குமிமா துற்றுறைய விடங்க ளெல்லாம்
எம்பெருமா னாலயமா மியல்பு டைத்து
துலக்கமுறு மணியுடனே உற்ற சோதித்
தொடர்பினையார் பிரிக்கவல்லார் நிறைவு மிக்க
நிலக்கருணை நீர்க்கருணை யருட்சீர்க் கருணை
நிலவுகின்ற வல்லிபுர மாய னிந்த
தலக்கருணை யோங்கவுயர் திருமா திங்கே
தரிக்கின்றாள் மாயனுமிங் குறுவ னன்றே. 22

மணியோசை முன்வரப்பின் பதனோ டுற்றே
மருவியுயர் யானைவரு மெனவு ணர்வோம்
அணியோங்கு மிலக்குமிமா துறையக் கண்டோம்
ஆதலினால் மாயனுமிங் கணைத லுண்மை
பிணியோங்கு மாபிறவி தவிர்த்தாண் டென்றும்
பெருமைபெற வருளீயும் பெருமா னந்தத்
தணியாப்பே ரன்புநலம் சேரில வல்லி
தன்னையதன் முன்பிங்கே யனுப்பி னானே. 23

இலவல்லி யாயவருண் மிகுமிம் மாது
ஏற்றமிகு பாரதத்தின் மூவ ராய
நலவல்லி துர்க்கையொடு சேர்ந் திணைந்த
நாமகளும் திருமகளும் நலம ளிக்கும்
தலவல்லி தமிழணங்கின் மகிமை யோங்க
தருநெறியில் வாணிபத்தைப் பேணு கின்ற
குலவல்லி இவருடைய குணந லத்தைக்
குறித்துவியந் துரையாதா ரெவரு மில்லை. 24

அழகுடையாள் அன்புடையாள் வாழும் மார்க்க
வறிவுடையாள் சுற்றத்தோ ரயலா ரோடு
பழகுகின்ற முறைமையிலே இனிமை யுற்றாள்
பண்புடையாள் பிறர்துயர்கண் டிரங்கு கின்ற
இளகுமன வியல்புடையாள் மகிழ்வி னோடிங்
கிரப்பவர்க் கீகின்ற இயல்பு முற்றாள்
உளகுணங்க ளிவைகண்டு பெற்றோ ரோடிவ்
வுலகிலுள்ள பலருந்தான் நயப்பா ரன்றே. 25

போற்றுமுயர் குணநலமும் அழகின் சீரும்
பொருந்துமுயர் மங்கையிவள் வந்து தித்த
ஏற்றமுறு குலநலனு மினிது நோக்கி
இன்னவள்பால் மணம்நாடி வந்தோ ருள்ளே
தோற்றமுறு நல்வனப்பும் தூய பண்பும்
தொடரவளர் தேவதத்தன் மரபு தங்கள்
ஏற்றமுறு மரபிற்கிங் கிணைவ தாக
இருவருக்கும் மணவினைமற் றியற்றி னாரே. 26

நல்லறஞ்சேர் நெறிபேணி நாளு மன்பாய்
நம்பெருமா னடியிணையும் போற்றி யின்ப
இல்லறத்தின் வழிநின்றார் இயங்கு கின்ற
ஈருடலுக் கோருயிர்போ லெண்ண மொத்தார்
தொல்லறத்திற் தொடர்ந்துவரும் புண்ணி யத்தாற்
துய்த்தின்ப முறுகின்றார் எனினு முற்ற
இல்லறத்தின் பூப்பாய இனிய செல்வம்
எய்தாதே இன்னுமெதிர் பார்த்தா ரன்றே. 27

தேவதத்தன் சுற்றமிவர் நிலைமை நோக்கி
திகழுகின்ற மரபுநெறி தொடர்வ தற்கிங்
காவதொரு மகவிலாத் தன்மை யாலே
அன்னவனைத் தூண்டுகின்றார் மீண்டு மிங்கே
மேவுமண மொன்றுகொள அதுவு மன்றி
மேலாமோர் மணம்பேசிப் பெண்ணும் பார்த்திங்
காவனவும் பலசெய்தார் அவனோ மிக்க
அவலநிலைக் காளானான் என்செய் வானே. 28

சோர்ந்துவரும் நாயகனைத் துணைவி கண்டாள்
துடிதுடித்தாள் தானேதும் பிழைகள் செய்ய
நேர்ந்ததுவோ எனவெண்ணி நிலை தளர்ந்தாள்
நின்றவன்பால் மிகமிகவே உசாவு கின்றாள்
தேர்ந்துணர்ந்த அறிவிருந்தும் பிரிவுத் துன்பம்
சேர்ந்துவிட வதைச்சகிக்க யாரு மாற்றார்
ஓர்ந்துணர்ந்த நல்வணிக னிவனிங் குற்ற
உண்மைநிலை கூறாது மயங்கி னானே. 29

நோக்கியவன் நிலைமைதனை நன்கா ராய்ந்து
நொடிக்கின்ற மாதருரை யதுவும் கொண்டு
தாக்கமிவர்க் கீதேதா னெனத்து ணிந்து
தன்னலத்திற் காகவிவன் ஏது மிங்கே
தாக்கமுறத் தான்விடுதல் தகுதி யல்ல
தவந்தழுவா தருங்குழந்தை நலமி ழந்தேன்
ஆக்கமுற வின்னவர்க்கம் நலம் கிடைப்ப
அடியவள்நான் தடுக்கவொணா தெனத்து ணிந்தாள்.

பேறற்றேன் பேதைநான் பிள்ளை யில்லாப்
பெரும்பாவி ஆகிவிட்டேன் நீங்க ளுந்தான்
பேறற்ற பெரும்பழிப்பீ தெய்த வேண்டாம்
பெருமானார் அடியிணைகள் நாடி யன்பின்
மாறுற்ற வினைமாசைத் துடைத்த ழிப்ப
மாதவம்நான் மேற்கொள்ள விரும்பு கின்றேன்
பேறுற்று வரமுயல்வேன் பிரிவ தற்கு
பேணியுயர் விடைதருக எனப்ப ணிந்தாள். 31

நீர்மல்கு கண்களுடன் வெதும்பிச் சோர்ந்து
நிகரொருவ ரில்லாநற் குணம்ப டைத்த
சீர்மல்கு நாயகியை யாரும் கூறும்
சிறுமொழிக்காய்ப் பிரிவுநிலை நேர்ந்த தென்றே
ஏர்மல்கு நலம்படைத்த தேவ தத்தன்
ஏகாதீர் மறுமணமிங் கேற்க மாட்டேன்
நேர்மல்கு நினதன்பிற் பிள்ளைப் பேற்றின்
நிலையெனக்குப் பெரிதல்ல எனத்த டுத்தான். 32

நன்றிவனும் தடுத்திடினும் சுற்றம் கூறும்
நலமிலா மொழிகேட்க நாடா ளாகி
அன்றியும்தன் மனச்சாட்சி தன்ன லத்திற்
கன்னியர்கள் துயரடைதல் மறுப்ப தாலும்
நின்றுநிதம் விடைகேட்ப இவன் மறுப்ப
நிலைகலங்கி இருவருமே உள முடைந்தார்
என்றாலும் மறுமணமும் பிரிவு மன்னூர்க்
கியல்பாய விதியாக இருந்த தன்றே. 33

இவ்வாறு பலநாளாய் இருவர் தம்முள்
இயல்புமொழி எதிர்மொழிகள் பலவும் கூறி
ஒவ்வாது நாமினிமேல் ஒத்து வாழ்தல்
உற்றபெரும் சுற்றத்தார் விடவே மாட்டார்
எவ்வாறு பொறுத்திதனை இங்கி ருப்போம்
இடர்மிகுந்த வாழ்வினிலும் பிரிவு மேலாம்
செவ்வையுற இவ்வாறு தேர்ந்து தம்முட்
செய்தவமும் மறுமணமு மொப்ப நின்றார். 34

# 3. தவம்புரி சருக்கம்

தந்தைதாய் உற்றவுயர் மாமன் மாமி
தயவான சுற்றத்தார் அவர்கட் கெல்லாம்
சிந்தைமிகு பிரிவுணர்த்தி வணக்கம் கூறி
சீருடையா ளிலவல்லி தவத்தை நாடி
சந்ததமும் தூயவருட் பட்டி யங்கும்
சால்வுடைய பிருகுமுனி தம்பாற் சென்று
நொந்துதன துளநிலைமை யனைத்தும் கூறி
நோவகலற் காயநெறி வியந்து கேட்டாள். 1

சுற்றுயர்சீ ருணர்வுடைய முனிவ ரேறே
கருதிவரு முக்கால நிலைமை யெல்லாம்
உற்றறிந்திங் குரைக்கின்ற வருண்மி குந்த
உத்தமரே குழந்தையிலாப் பாவி யாகி
பெற்றவுயர் கணவனையும் பிரிவ தற்காம்
பேதலிப்பிங் குற்றேனென் துயரம் தீர
உற்றநெறி யோதுகவென் றுவந்து கேட்டாள்
உயர்வாய பாதமலர் போற்றி நின்றே. 2

நடப்பதற்கிங் குரியவிதி நடந்தே தீரும்
நாம்நினைக்கும் படியெதுவும் நடப்ப தில்லை
மடப்பமுடை நன்மொழிசேர் மாதே கேளாய்
மாகொடிய சாபமொன்று மற்று னக்கன்
றிடப்படநீ ஆளானாய் நாக மொன்றை
எண்ணாதே முற்பிறப்பிற் கொன்று விட்டாய்
திடப்படுசீர்த் தவத்தாலே பாவ தோஷம்
தீர்ப்பதற்கிங் கிடமுண்டு தீர்ப்பா யென்றார். 3

தூயசிவன் ஆபரணம் சர்ப்ப மாகும்
துயில்கின்றான் மாயனுமற் றதன்மீ தன்றோ
ஆயவிஷ மிருந்தாலும் நாக மெம்மை
அண்டிவந்து கொல்வ தில்லைப் படமெ டுத்து
நேயமுடன் தன்னுடைய தகுதி காட்டி
நின்றெம்மை வழிவிடவே வேண்டிக் கேட்கும்
நியதனை நினையாதே கொன்று விட்டாய்
நிமலன்பால் வரம்வேண்டித் தீர்க வென்றார். 4

என்றுரைப்ப முனிவரிவை ஏந்தி ழைக்கிங்
கிருந்ததுயர் நீங்கியது குருவின் தூய
நன்றாய வுரைகேட்ட சீடர் கள்தம்
நலம்போல அவளுந்தான் நாடி நின்றாள்
ஒன்றியவம் முனிவருரை பருவ முற்ற
ஓருயிருக் காயகுரு வார்த்தை போல
நின்றுநிலை செய்ததவள் தவத்தின் மிக்கு
நெடுநாளா யிருந்துநலம் மேவி னாளே. 5

ஊணின்றி யுறக்கமின்றி மழைவெ யில்கள்
ஒன்றுமே நோக்காது யோகி மாரும்
நாணவுயர் தவம்பேணி மாது தன்வாழ்
நாள்பலவும் கழிக்கின்றாள் பொருள்க ளோடு
பேணுமுயிர் உடலிவைக ளர்ப்ப ணித்து
பெயராத பேரன்பின் நின்று நேரிற்
காணுகின்ற நிலையுற்றாள் கருணை கூர்ந்து
காட்சிதந்தார் சிவனவளும் பணிந்து நின்றாள். 6

பத்தியினாற் சிறந்துவிட்டாய் யாரும் போற்றப்
பன்னெடுநாட் தவமிருந்தாய் மனங்க டந்து
புத்தியையும் தாம்கடந்து பொருந்து மான்ம
போதத்தோ டுயர்ஞானம் பொருந்த நிற்கும்
சித்திநிலை யடைந்தவர்தம் நிலைமை யுற்றாய்
திருந்துமுன துளம்வாழ்க எனவு ரைத்து
உத்தமியே ஏதுவரம் நாடி வந்தாய்
உரையென்ன வவளுமுவந் துரைக்கின் றாளே. 7

மற்றுள்ளோர் எனைநோக்கி மலடி யென்று
மாசுபடக் கூறுகின்ற நிலைமை யுன்னி
உற்றவுயர் கணவனைநான் பிரிந்து வந்தேன்
உறுதிபெற நாம்வாழ முடிய வில்லை
சுற்றத்தார் எனைவிலக்கத் தூண்டு கின்றார்
சோர்கின்றா ரென்கணவர் நானு மிங்கே
நற்றவத்தை மேற்கொண்டு வந்தே னானால்
நாடுமன நிலையின்று வேறாச் சன்றே. 8

வாழ்ந்தாலும் உளஞ்சகியா துழறு கின்றார்
　　வாழ்வினிலே ஏதேனு மல்ல லுற்றுத்
தாழ்ந்தாலும் எண்ணுதிங் கிகழு கின்றார்
　　தாழ்ந்தாலும் வாழ்ந்தாலும் தகுதி யொன்றே
ஆழ்ந்ததவ நிலைமையிலே அருளி னாலே
　　ஆண்டவனே நான்மேவி அறிந்து ணர்ந்தேன்
சூழ்ந்ததுயர் இன்றில்லை சுதந்தி ரத்தின்
　　சூழ்நிலையே நாடுகிறேன் பிரபு வென்றாள். 9

காந்தத்தின் முன்னிற்கு மிரும்பு போல
　　கருணையின்நல் வசப்பட்ட மாது முன்னர்
ஆந்துணையும் பிள்ளைப்பே றதுவே வேட்டாள்
　　ஆனாலோ அருணலத்தால் மனது மாறி
சாந்தமுற நாடுகிறாள் முத்தி மார்க்கம்
　　தழுவுமுளம் தானடைந்தாள் அதை யிவட்கிங்
கீந்தருள இடமில்லை பிள்ளை நாடி
　　இவளுற்ற விருப்பமிட ராய தன்றோ. 10

இத்தலத்தில் இன்னும்நான் வாழ்ந் திருந்து
　　இடரெய்தி மாளாதே இன்றே நீங்கி
உத்தமரே யுங்களடிக் கன்பு மேவி
　　ஓர்கணமும் நீங்காதே யுறையு மந்தச்
சித்திநிலை நாடுகின்றே னெனவு ரைப்ப
　　சீருடைய நின்தவமிங் கதற்கு ரித்தே
உத்தமியே பிள்ளைப்பே றுணர்வு ளத்தில்
　　உறுதியாய்ப் பதிந்ததால் அதை யிழந்தாய். 11

இன்னுமொரு பிறப்பருளி யுளத் துதித்த
　　இனியமகப் பேறுணர்வு வடுவை நீக்கி
நன்னயமாய் ஆளுவதே நியதி யாகும்
　　நலம்பலவு மோங்குகின்ற வீழ நாட்டில்
மன்னுமருள் வடதிசைக்கண் மருவி யுற்ற
　　மாநலமார் வல்லிபுரத் தலத்தின் மேவும்
உன்னதநற் பிறப்புனக்கிங் கருளு கின்றோம்
　　உத்தமநன் மாயனினு லாள்வோ மங்கே. 12

வேறுவே ருயவிரு தெய்வ மாக
விட்டுணுவோ டுற்றசிவன் இவரை நாமும்
தேறுமுயர் நிலையிருப்ப இவர்மற் றின்று
திருமாலால் ஆள்விப்போ மென்ப தென்னே
தேருதே இந்நிலைமை அவள் திகைப்ப
சிவபெருமா னவள்நிலைமை யுணர்ந்து சொல்வார்
மாறுபட நினையாதே மாலும் நானும்
மருவுமுயர் சக்திசிவ மாகி யுற்றேம். 13

என்றுரைப்ப விவளிதனைத் தேரா ளேனும்
இதைவிடுத்து வேண்டுகிருள் பார தத்தில்
ஒன்றியசீர் வாழ்வுநீத் தீழம் மேவி
உறுபிறவி தருவதைநான் நாட வில்லை
நன்ருய பாரதத்தை விட்டு விட்டு
நம்பெருமான் நானகல வருந்து கின்றேன்
என்றுரைப்ப ஈழம்நன் ருகு மேகி
எல்லாமப் பிருகுமுனி பாற்கே ளென்ருர். 14

கூறியவை யெம்பெருமா னுருக்க ரந்தார்
குவித்திருகை சிரமேலே விதிர் விதிர்த்து
மாறிலா வம்மங்கை மனது தேறி
மாமுனிவன் பிருகுவிடம் சென்று நன்றே
பேறுபெற வழிசெய்த பிரானே யுங்கள்
பெருங்கருணைத் திறத்தாலே யுய்தி யுற்றே
வேறுமொரு பிறப்பெனக்கவ் வீழ நாட்டில்
விருப்பமொடு மெம்பெருமா னீந்தா ரென்றே. 15

பிள்ளைப்பே றிங்கடைய வேண்டு மென்ற
பெருவிருப்பின் துடிப்பற்றேன் ஆயினும் நான்
உள்ளத்தில் முன்னுளிற் கொண்டி ருந்த
உறுதியினுல் அதுவினைபோற் பதிந்த தாலே
தெள்ளியசீர் நிலையடைந்து திருவ டிக்கண்
சேர்தவம்தான் கொண்டிருந்து மாக வில்லை
வள்ளலிந்த நிலைகூறி இன்னெ ருக்கால்
வாழ்வளித்து மாற்றுதற்கு நியதி யிட்டார். 16

போதமிகு மித்தூய பரத கண்டம்
    பொருந்தாதே விட்டேகி யீழ நாட்டில்
ஏதமுறு பிறப்படைய விதித்த பான்மை
    எண்ணிமிக வாடுகிறேன் எம்பி ரான்தன்
பாதமலர் பணிந்தேத்தி இதனைக் கூற
    பண்புமிகு பிருகுமுனி தன்னி டம்போய்
நீதகவே யீழநிலை கேட்ட நிந்தால்
    நீங்குமுள தையமென நிகழ்த்தி ஞரே. 17

மிக்கதவப் பெருமையுடை முனிவர் தம்பால்
    மேலான முறைமையிலே இவைகள் கூறி
தக்கவருண் முனிவவெனை மன்னித் திங்கே
    தருமீழ நிலைமைகளும் மாய னுக்கும்
மிக்கவுயர் சிவனுக்கும் முறுதொ டர்பும்
    மேலாக விளக்கிடநான் வேண்டு கிறேன்
தக்கபடி வந்தாள்வான் மாய னென்ற
    தன்மையும்நான் தேர்ந்திலன்மற் றெனவு ரைத்தாள்.

நாகத்தா லுறுசாபம் நீங்கு தற்கு
    நல்லதுய ரீழநா டதுவே யாகும்
நாகத்தைத் தெய்வமெனப் போற்று கின்ற
    நடைமுறைகள் மிகவுண்டு இன்று மங்கே
நாகத்தைப் பேணிடுவார் யாரும் கொல்லார்
    நன்றாய அத்தலத்தில் வாழ்ந்து சாப
வேகத்தை நீக்கிவாழ்ந் துயர்த வத்தால்
    விட்டுணுவா லானவிதி வகுத்தா ரென்றார். 19

சாபமொடு பிரமகத்தித் தோஷம் நீக்கி
    சாந்திபெற வைக்குமுயர் தலமிவ் வீழம்
கோபமொடு வில்வளைத்தங் கம்பு தூவி
    கொலைசெய்தோர் பிரமகத்தித் தோஷம் நீங்கி
சோபனமாய் வாழநிலை வகுத்த செய்தி
    சொல்லமிக வங்குண்டு நீயு முற்ற
தாபமெல்லாம் தீர்வதற்குத் தகுதி வாய்ந்த
    தலமிதுவே யாதலினால் நேர்ந்த தீதே. 20

நீயுற்றாய் பெருமகிமை உயர்த வத்தில்
    நிறைவுடையா யாருந்தான் எய்தா வன்பு
நேயநிலை அடைந்திட்டாய் அதனு லெங்கள்
    நிருமலனார் தன்பணிகட் குனைவி தித்தார்
தாயுறுசீர்த் தன்மைநிலை யடைய வந்தே
    தகுந்தவுயர் அழகுடைய குழந்தை யாகி
மாயவனுன் மடிமேவி மகிமை செய்து
    மாசுமெலா மறத்துடைத்தங் காளும்கொள்வான். 21

மலைவளமும் நதிவளமும் அற்ற சிற்றூர்
    மண்ணிறைவே யுடைத்தாமவ் வூரை யின்றோர்
நிலைவளமிங் குடைத்தாக்கி நீங்கா தன்பின்
    நித்தியமும் முயல்வோர்தான் அங்கு வாழ்வார்
கலைவளமார் பக்திவழி கருத்தி ருத்தி
    கவலைதவிர்ந் துய்வதற்கோர் ஆல யத்தை
அலைவளமார் கடலோர முற்று யர்ந்த
    அந்நாட்டி லமைத்துதவப் பிரான் நினைத்தார். 22

தூயசிவன் தனக்கிங்கே மாய னுற்ற
    துணையாய அருட்சத்தித் தோற்ற மாவான்
நேயசிவ மகிமையுறு நித்தி யர்கள்
    நிர்மலமார் உமையுடனே மாலுக் கிங்கே
ஆயசிறு பேதமுமே காண்ப தில்லை
    ஆகுமுயர் திருவிளையாட் டவைக ளெல்லாம்
மாயனுல் ஆக்குவித்து மகிமை செய்தல்
    மகிமையுறு சிவபிரான் மேவு மார்க்கம். 23

சித்தமிகு மடியவர்கள் தூய வன்பிற்
    சிவனையே வழிபடுவார் ஆனு லிங்கே
சக்தியருள் வழிபாடே சகல ருக்கும்
    சார்புடைய இலகுநெறி யுடைய தாகும்
இத்திறத்தால் வல்லிபுர மாம்த லத்தில்
    எழிலுடைய மாமாயன் மேவி நன்றே
உத்தமதல் அருளுதவப் பணிப்ப தற்கிங்
    குளங்கொண்டார் சிவபிரா னுவந்து நன்றே. 24

தேவர்தமை வருத்துகின்ற துயரம் தீர
திருவுடைய கங்கணத்தை மீட்ப தற்கிங்
காவதொரு மீன்வடிவம் மாய னேற்பான்
அவ்வடிவோ டங்கேவந் துனையு மாள்வான்
மேவியுயர் சக்கரமும் உன்பாற் தந்து
மேலவர்கள் மூலமங்கு தாபித் தன்பாய்
மாவியலின் வழிபடவும் மார்க்கம் செய்வான்
மாண்புநிலை நீயுற்றாய் வாழ்க நன்றே. 25

உத்தமநன் மாமுனிவன் இவை யுரைப்ப
உளங்கொண்டே யவர்பாதம் தொழுது வாழ்த்தி
இத்தரையி லின்னுமுள நாட்கள் தன்னை
எம்பெருமான் நினைவுடனே கழித்து வாழும்
சித்தமுடன் விடைபெற்றுச் சென்ற டைந்தாள்
சிராய கணவன்பா லாத ரித்தே
உத்தமனும் அவளுடைய தெய்வ மாண்பை
யுளங்கொண்டு தக்கபடி யுபச ரித்தான். 26

காலமிக மெல்லநகர்ந் தேகிச் செல்ல
காரிகையாள் இப்பிறப்பை நீத்த கன்றாள்
சீலமொடு மறுபிறப்பிங் குற்ற வாறும்
சேர்ந்தவளங் குற்றிருந்த சிறப்பும் சீரும்
மாலுயர்வார் மீனமாகி அங்க டைந்து
மகிமைசெய்த மாண்புமுயர் ஆல யத்தை
கோலமுற வாக்கியது மாய வெல்லாம்
குறித்திங்கே போற்றிமிக வினிது ரைப்பாம். 27

# 4. இலங்கைநலச் சருக்கம்

திருக்கோண மலைத்தலமும் திருக்கேதீச் சரத்தலமும்
உருக்கமொடு மடியர்தொழு உயர்முனீஸ் வரத்தலமும்
திருக்கிளர்சீர் நகுலேஸ் வரமும்பசு பதீஸ்வரமும்
இருக்கின்ற திருநாடிவ் வீழமெனும் திருநாடு. 1

ஐந்தெழுத்தி னுயர்நாம மதுவொலிக்க நாடிநிதம்
வந்தவரை ஆதரித்து வழுவாதே உதவுவதும்
சந்ததமும் அடியவரைத் தாம்போற்று முயர்நிலையும்
விந்தையுற வோங்குகின்ற விளைவுமிகு திருநாடு. 2

மூர்த்திகர வருளோங்கும் முருகதலம் பலவுண்டு
கீர்த்திமிகு கதிர்காமம் கேடிலாச் சித்தாண்டி
நேர்த்திமிகு மாவைநல்லூர் மண்டூர் வெருகலருட்
சீர்த்திமிகு கந்தவனம் சந்நிதியு முண்டிங்கே. 3

விக்கினங்கள் தீர்க்கின்ற விநாயகரைப் போற்றுதிங்
கெக்கரும மெவர்செய்வார் எங்கெங்கு மவன்கோயில்
தக்கபடி மற்றவுயர் மூர்த்திகட்கு மாலயங்கள்
மிக்கபடி யுண்டிங்கே மிதக்குமருட் கிருபையிங்கே. 4

எம்மதமும் சம்மதமாய் எவருமிங்கே தாமுற்ற
அம்மதத்தைத் தழுவுவதோ டனுதினமு மன்னியர்கள்
தம்மதத்தைக் கௌரவிக்கும் தகுதிநலப் பண்புமுயர்
சம்மதமா யுற்றநலம் தகுதிசேர் ஈழநலம். 5

புத்தமத மிங்கொளிரும் பொருந்துமுயர் நலமிலங்கும்
பத்திமிகு நல்லிஸ்லாம் பண்புடைய யேசுமதம்
இத்தனையோ டின்னுமின்னு மியன்றபல பிரிவுடைய
வெத்தனையோ மதமிருந்தும் இணங்கியன்பின் வாழ்கின்றார். 6

கிருபைமிகுந் தொளிருமிந்தக் கேடறியா நன்னாட்டில்
மருவுமுயர் வானோங்கு மாமலையும் நதிவளமும்
தருவினொடு பயிர்வகைகள் தழைத்தோங்கும் நிலவளமும்
உருவாய நன்முயற்சி உயர்வளமும் மிகவுண்டே. 7

சிவனெளிநற் பாதமலே சீராரும் கதிரைமலே
தவநலநற் பண்புயரும் திருகோண மலேயுயர்ந்த
நவநலமார் பேதுறுதா லகாலமா நன்மலேகள்
பவநலமார் மக்கட்குப் பலநலன்க ளீயுமன்றே. 8

வங்கமுறு பேராழி வளமுறவே சூழ்ந்துளது
அங்கெல்லாம் அழகுநிறை ஆதவனின் வெம்மைமிகு
பொங்கிவரு கதிர்படியப் பொலிந்துவரு மாமுகில்கள்
இங்கணேந்து மிதந்தேறி இனியவுயர் மழையீயும். 9

காடுகளும் மாமலேயும் கருமுகிலேத் தடுத்துயர்த்தி
கூடுகின்ற குளிர்நிலேயிற் குறைவிலுயர் துளியாக்கி
நாடுமுயர் மழையீய நலமுடனே வருமருவி
கூடியுயர் நதியாகும் குளமுடனே பிறவுமாகும். 10

காடுகளிற் பொழியுமழை காடிறந்து மிகப்பரந்து
நாடுசிறப் பெய்துதற்காம் நலமீயாத் தன்மைகண்டு
கூடியுயர் நீரணேயக் குளம்வகுத்தார் அணேகட்டி
நாடியிவை செய்தமன்னர் நலமகிமை வாழியவே. 11

ஆற்றுநீர் கடலடைந்தே அவமாகப் போவதனுல்
மாற்றியதைத் திசைதிருப்ப மாவணேகள் கட்டிவளம்
போற்றவுயர் மிக்கநலம் புரிகின்று ரரசினர்கள்
ஆற்றுமவர் பணிவாழ்க அரும்விளேவு நிறைகநன்றே. 12

மருவுமுயர் அருளுடைய மாணிக்க கங்கையொடு
திருவுருவார் மாவலிநற் திகழுநல முயர்கங்கை
உருவுடைய களனியொடு உயர்வாய காலுகங்கை
மருவுபல கங்கையின்னும் மாண்புடனே இங்கோடும், 13

ஓடிவரும் கங்கையிலே உற்றிருக்கும் தேன்துளிகள்
நாடுமுயர் தெங்கின்காய் நன்ருய கமுகின்காய்
கூடுமுயர் தீங்கதலி குலவுமுயர் றப்பரிலே
கூடியிவை நிறைந்திருக்கும் குதுகலித்தே யதுவோடும். 14

கொக்கோவின் பழமிருக்கும் கொடிமிளகின் காயிருக்கும்
மிக்குயரும் கறுவாவும் மேலாய வேலமுந்தான்
தொக்கிருக்கும் எண்ணெய்தரு தூயபுல்லின் துளிரிருக்கும்
எக்கணமு மிங்கோடு மினியவூ ராற்றினிலே. 15

கன்னிறைந்த மாமலையும் கடுகிவரு நன்னதியும்
நென்னிறைந்த களனிகளும் நீர்நிறைந்த பெருங்குளமும்
புன்னிறைந்த புன்னிலமும் பொருந்துமுயர் பெருங்காடும்
நன்னிறைவார் இந்நாட்டில் நற்சுரங்கப் பேறுமுண்டே. 16

இரத்தினங்கள் அகழ்ந்தெடுப்பார் எத்தலத்து வயிரமுமே
தரத்தினிலே இதற்கொவ்வா தாரணிசேர் மாந்தர்பலர்
சிரத்தையுடன் இதைவாங்கச் சேர்வரிங்கே பல்வளமார்
வரத்தினிலே யோங்குமுயர் வளமுடைய திந்நாடு. 17

எழுதுகின்ற பென்சிலுக் கேற்றவுயர் காரீயம்
பழுதறவே இங்குண்டு பலவாய இந்நலத்தோ
டுழுதுண்டு வாழுகின்ற உத்தமர்கள் தெய்வத்தை
தொழுதன்பின் வாழுகின்ற தூய்மையுடைத் திந்நாடு. 18

மலையில்லாச் சமதரையாய் மருவியவூர் யாழ்ப்பாணம்
நிலைவேறே யாயிடினும் நிலவுமுயர் மாரியிலே
நிலைமாறும் காற்றினுடை நிலைமையினால் முகில்மேவி
மலையில்லா நிலைமையினு மழைவளத்தை மிகவீயும். 19

மிக்கவுயர் மாமழையும் மேலாய ஆதவனும்
எக்கணமு மெமக்குதவ விங்குவைத்தா னெம்பெருமான்
தக்கபடி யாமிவற்றிற் தேவனருள் கண்டுதொழும்
மிக்கநல முடையதுயர் மேன்மையுறு மிவ்விலங்கை. 20

இந்நலங்க ளனைத்துமிந்த இலங்கையின்கண் இருந்தாலும்
நன்னலமார் பாரதமே நாடுமருள் உயர்மதங்க
ளன்னபல வுளவாக்கி ஆக்கமுற விங்கனுப்பும்
தன்மைநிலை யொன்றுண்டு தரும்புத்த மதமுமீதே. 21

நிலமோங்க வளமோங்கும் வளமோங்க நிமலனருட்
தலமோங்கு மாயினந்தத் தலமோங்கும் தன்மைகெடின்
நிலமோங்க முடியாது நிர்மலனார்க் கிடரில்லை
தலமோங்க நாம்வாழ்ந்து தவமேவ லெங்கடமை. 22

மக்கள்மன நிலைக்கேற்ப மாதேவ னுருப்பெறுவன்
மிக்கசிவ பதமேதான் மேலாய தென்பர்சிலர்
இக்கருத்தோ டுற்றவர்கள் ஏற்றமதம் சிலர்க்கிங்கே
தக்கதல வெனுமுணர்வைத் தாங்குகின்ற நிலைமையுண்டு. 23

குழந்தைநலம் தீங்கறியா தாதலினா லதன்தாயே
குழந்தைநலம் தீங்குணர்ந்து கொண்டுநல மாற்றிடுவாள்
குழந்தையரே நாமெல்லாம் கோமான்தன் முன்னிலையில்
குழந்தையுடை விளையாட்டே கோமகனுக் கெங்கருமம். 24

உற்றவருட் பெருங்கருணை உயர்வுடைய நம்பெருமான்
உற்றவுயிர் மதமிணைய வோரொருபேர் பெற்றிடுவான்
மற்றிவற்றின் மேலாய மாண்பொருளே யன்னவனும்
குற்றமுறு வாறுமக்கள் குணம்மேவி மதம்வகுப்பான். 25

உத்தமநல் லீழத்திற் குவந்தமதம் முன்பீந்தான்
சித்தநலம் அதன்மீது செல்லாதோ ரவர்கள்மன
மொத்தநல மதமீயு முயர்கடனென் றவருடையார்
இத்தாலே ஓர்மதமிங் கெய்துநிலை யுளங்கொண்டார். 26

பல்வளமும் கொண்டவுயர் பகுதியெலாம் விடுத்தருளின்
நல்வளமே நிதம்வியக்கும் வடதிசையின் வடதிசையில்
நெல்வளமும் பெருமுயர்வின் நிறைவுமுடைப் பகுதியிலே
நல்வளத்தைத் தன்னருளால் நலமாக்க வுளம்கொண்டார். 27

சீருற்ற சிவமதமும் பிறமதமும் இங்கிருந்தும்
ஏருற்ற பிரபத்திக் கேற்புடைய வைணவத்தின்
நேருற்ற வழிபாட்டு நிலையிங்கே நிகழவில்லை
ஓருற்ற உபாயத்தால் உதிக்கவைத்தா ரதையும்தான். 28

தான்தானிங் குற்றமதம் தத்தமக்குப் பெரிதாகும்
ஏன்தானும் மற்றமதம் இழிவாகக் கூறவொணு
ஊன்தாவு முளத்தினிலே உணர்வுநிலை பலவாகும்
வான்தாங்கி யுலகுநிறை வள்ளலருள் யார்க்குமுண்டே. 29

முன்னுளிவ் விலங்கைநிறை முழுநிலம்சேர் மாந்தர்களும்
நன்னுக வழிபாட்டை நாடிநலம் கண்டுறைந்தார்
இந்நாளில் அவ்வழிபா டருகிவரும் தன்மையினுல்
உன்னுதே யதையடித்திங் குறுசாப மடைகின்றுர். 30

நஞ்சுடைய திந்நாகம் நாடிவந்து கடிப்பதில்லை
அஞ்சுவது நாம்செய்தால் அவதியுற்று நமைத்தீண்டும்
நஞ்சுடையான் நீலகண்டன் நம்மாயன் நீலநிறன்
நஞ்சுடனே இணையாது நானிலமும் விலகாது. 31

ஆயத்திற் கொட்டுவதற் கரியநஞ்சை அரன்கொடுத்தார்
ஆயத்தை நாம்விளைத்தால் அந்நஞ்சு நமைச்சாரும்
ஆபத்தை விளையாமல் அதுகாட்டும் படம்கண்டே
ஆபத்திங் கெமையணுகா ஆயநெறி எய்திடலாம். 32

தேவனருட் சக்தியெனத் திகழுகின்ற வந்நாகம்
மேவிவரக் கண்டோடி மிக்கவுர மாயடிப்ப
ஆவிபிரிந் தேகுகையில் அந்நாகம் சாபமிட்டே
போவதுண்டிங் காதலினுல் பொறுக்கவொணுத்துயரமுறும். 33

ஆந்துணையு மாமல்ல லவற்றையெலாம் வணக்கத்தாற்
சாந்தியுறச் செய்திடலாம் சாபத்தின் வலிமைகெட
நாம்தினமும் வழிபடவும் நற்கடன்க ளாற்றிடவும்
ஆந்திருமா லாலயத்தோ டரனிணைக்க நினைவுற்றுர். 34

நங்கைநல்லா ளிலவல்லி நாகத்தாற் சாபமுற்றுள்
அங்கதனுல் மகவின்றி அருந்துயர மடைந்திட்டாள்
மங்கலமார் தவநெறியே மருவியுந்தான் தீரவில்லை
இங்கிதனை உணர்ந்திடுவார் எவருமதைக் கொல்லார்கள். 25

சீருடைய நாகத்தைச் சினந்தடித்துக் கொல்லாதே
ஏருடைய புதுப்பானை எடுத்ததனை அகப்படுத்தி
நேருடைய புறம்போக்கில் நீத்துவர லதுவேதான்
பாருடையார் சாபமுறுப் பண்புநிலை மேவவழி. 36

காடுமிகு வன்னியிலே கணக்கில்லா நாகமுண்டு
நாடுகிறுர் அன்னவரும் நாகவுயர் வழிபாட்டை
கேடதனுல் எய்தாமல் கிருபைநல மெய்துகிறுர்
தேடுமருட் திருமாலின் திருப்பதமும் போற்றுகிறுர். 37

வல்லியருள் இலவல்லி வந்தடைய வுற்றவுயர்
வல்லிபுரத் தலமிருக்கும் வளமிகுந்த யாழ்ப்பாண
நல்லியல்பிங் கினியுரைப்பாம் நற்பெருமான் திருக்கோயில்
வல்லவருள் மாயவனை வணங்கிடநா மங்குணடே. 38

# 5. யாழ்ப்பாணச் சருக்கம்

ஆறில்லா நாட்டிற்கிங் கழகுபா ழாமெனவே
கூறுகின்ற வாசகத்தின் கோட்பாட்டைப் பிழையாக்கி
மாறுபடச் செய்ததுயர் மதிப்புடைய யாழ்ப்பாணம்
ஏறுநிலைப் பட்டவுயர் எழிலுடனே திகழ்ந்தினிதே. 1

ஏழிசையின் திறமுணர்ந்த இயல்புயர்சீர் நற்பாணன்
யாழிசைக்குப் பரிசாக ஏற்றவுயர் மணற்பரப்பு
சூழுமுயர் வளநிலமாய்ச் சோலையழ கெழிலொழுக
வாழுமுயர் மக்களுடை வளநிலமாய்த் திகழுதன்றே. 2

மண்ணிலத்துப் பயிரான மாபனைநற் சவுக்குமுள்ளி
நண்ணிவிளைந் தறியாத நாடிதனைப் பயிர்விளையும்
பண்படையச் செய்தமக்கள் பலமகிமை யின்றிருந்தால்
விண்ணடைந்த பாணனுந்தான் வியந்துமிகப் போற்றுவனே. 3

சிறந்தவுயர் யாழ்ப்பாணன் திரும்பியவன் வரநேரின்
அறந்தழுவி வாழுகின்ற அரியநிலை நோக்கிமுன்நான்
இறந்தபொழு திருந்தநில மீதல்ல அதுமணல்நற்
சிறந்தவுயர் செம்பாடாய்த் திகழுதுமற் றின்றென்பான். 4

அம்பலவி செம்பாட்டான் ஆங்கொழும்புப் பிரிவினங்கள்
தின்பதற்குச் சுவையான தெவிட்டாத மாங்கனிகள்
இன்பமுறு வாழைபலா இனியவுயர் கனிவகைகள்
முன்பிவைக ளேதுமில்லை முற்றுமே மாற்றமென்பான். 5

பங்குனிநாள் வெய்யிலிலே பதைத்தலறி நடந்தகளை
பொங்கிடவே தாகமுற பொருந்தியுண நீரின்றி
இங்குழன்ற நாட்டினிலே எத்தனையோ ஆழ்கிணறு
தங்கவள நாடாச்சே எனவுரைப்பான் தருக்கினொடு. 6

மூவரொன்றாய்த் துலாவோடி முன்பின்னாய்த் தவறாது
மேவுதுலா தாழ்ந்துயர மேலான தாளமொடு
பாவியலூக் கொப்பநடம் பயிலுகின்ற வாறொப்ப
பூவியலைப் பேணியருள் பொலியநீ ரிறைக்கின்றார். 7

ஆறில்லை மலையில்லை ஆயநிறை குளமில்லை
ஊறுகின்ற வற்பநீர் உதவியினுல் நீரிறைத்து
பேறுமிகு காய்கறிகள் பேணுநலம் கண்டிங்கே
தேறிடுவான் இவர்நிலைமை தீதிலா மகிழ்வுடனே. 8

பரந்துயர்சீர் ஆலமரம் பண்புமிகு மரசமரம்
தரந்திகழும் நல்வயிரத் தகவுடைய வேப்பமரம்
நிரந்தரமார் புளியமரம் நிற்குமியல் கண்டுமிக
வரந்தருபேர் நிலையுன்னி வாழ்த்திடுவா னிங்கிவரை. 9

அலையடிக்கும் பெருங்கடலி லஞ்சாதே மிதந்தோடி
நிலையுடைய கலங்களிலே நிகரிலாத் திறமையொடு
தலையாய பணிபுரிந்து தருமநெறிக் கொத்தபடி
மலையாகப் பொருள்குவிக்கும் மாண்புடையார் இந்நாட்டார்.

ஆற்றினுயர் வளநலனு ஆங்குளத்தின் நிறைவளனு
ஏற்றமுற வுறுநாட்டோர் ஏழைகளாய் அந்நியரைப்
போற்றியுண்டே தாமிருப்ப புத்தியொடு நன்முயல்வின்
ஏற்றத்தா லிவருய்ந்தார் இருநிதியம் தேடுகிருர். 11

மாளிகையே யில்லமெலாம் மருவியுயர் சுற்றுமதில்
சூழவுற அமைத்துள்ளார் சுந்தரமார் கோலமொடு
வாழமிகு வசதிபல வளமாக ஆக்குகிருர்
தாளிதத்தின் நீங்காத தகுதிபெறும் மடைப்பள்ளி. 12

எம்மரமு முளவேனு மேற்றமுடைப் பனையென்னும்
செம்மரமே இந்நாட்டின் சீருடைய நன்மரமாய்
எம்மையிங்கு வாழ்விக்கும் எவருந்தான் வாழ்விக்க
தம்மையிவை ஈயாகாண் தம்பாட்டி லேவளரும். 13

தம்பாட்டில் வளர்ந்தாலும் தகுதியுடை மடற்பனைகள்
செம்பாட்டு விளைவுநலச் செல்வத்திற் சீருடைத்தாய்
நம்பாட்டில் நாமிருப்ப நலம்பலவு மீந்தருளும்
பண்பாய கற்பகத்தின் பண்புநல மீதுடைத்தே. 14

மண்ணாட்டுக் கற்பகமாம் மடப்பனையின் கனியையின்று
உண்ணாது விட்டுவிட்டிங் குலைகின்றோ முயர்வென்றே
பண்ணாடை நிலையொத்தோம் பழுதுநலம் நாம்தேரோம்
என்னவொரு வறுமையுந்தான் எய்திலர்முன் புள்ளோர்கள்.

நுங்குதரும் சிறுவருக்கு நூராதே நெருப்பெரிக்க
கங்குதரும் காரிகைக்கு கள்ளுதவும் முதியவர்க்கு
மங்கலமாய் மனைவகுக்க மரமுதவும் மேய்வதற்கும்
பங்குமிலா நல்லோலை பலவுதவு மிப்பனையே. 16

பெட்டியொடு நன்மூடல் பெருமைமிகு சுழகுபுடை
தட்டுவகை யிவையிழைப்பத் தலையின்மேற் குடைபிடிக்க
மட்டில்லா நற்சுவையின் மாண்புடைய பதநீர்கொண்டு
இட்டுநல்ல பனைவெல்லம் எடுக்கவெலா மீதுதவும். 17

மாட்டுக்கு உணவுதரும் மாண்பாக வேலியிட்டு
வீட்டுக் கறுக்கைசெய வேண்டியன தாமுதவும்
பாட்டுக்கே தான்வளரும் பண்பான கற்பகத்தை
மீட்டுமிக வளர்ப்பதற்கு மேலவர்கள் முயல்கின்றார். 18

வேண்டுகின்ற நல்வளத்தின் விளைவுடைய இந்நாட்டிற்
பூண்டவுயர் நற்கருணை போற்றிடநா முரித்தாகும்
தூண்டியெமை மிகவூக்கி சூழலுக்குத் தக்கபடி
ஆண்டவனார் எமக்கீயு மருண்நலமிங் கேதென்போம். 19

வாழைபலா மாவினொடு வளர்ந்துயர்சீர் தென்னைமரம்
பாளைகமழ் கமுகமரம் பயனுதவும் வைரமரம்
சூழவயல் காய்கறிகள் சுற்றிவரப் பூஞ்செடிகள்
ஆழவுயர் கிணற்றுநீர் அள்ளிமுயன் றிவைவளர்ப்பார். 20

எவ்வகையில் நோக்கிடினு மெம்பெருமா னருளாலே
செவ்வையுற யாழ்ப்பாணம் திகழ்வதற்கு வாய்த்தவுயர்
திவ்வியநற் றிருவருள்சேர்ந் திலங்குவதே காரணமாம்
எவ்வாறிங் கவ்வருட்சீர் இயைவதெனை நோக்கிடுவாம். 21

ஆதிசிவ னாலயமும் அடியவர்க ளுவக்கின்ற
பூதிநலம் பொலிவுமுயர் புனிதமுடை நன்மனமும்
ஓதியுணர்ந் துற்றநெறி ஒழுக்கமுடை நல்லியல்பு
சீதவள நலம்பெருகு சிறப்புக்காம் காரணங்கள். 22

விக்கினங்கள் வாராதே விநாயகரிங் கருளுகின்றார்
தக்கபடி ஞானமுமே தருதிகண் டீகின்றார்
மக்கள்மன மகிழ்வுறவே மற்றிவரைத் தோத்தரித்திங்
கெக்கரும முஞ்செய்வார் இனியவரு ளிலங்குமித்தால். 23

நல்லூரரோ டுற்றவுயர் நலமார்மா விட்டபுரம்
தொல்லூராம் கந்தவனம் தொழுஞ்செல்வச் சந்நிதிநற்
பல்லூரும் போற்றுமுயர் பண்புடைய முருகதலம்
வல்லமையைத் தந்திடுவான் வடிவேல னெமக்கிங்கே. 24

வல்லமையோ டரசாண்ட வளமிகுந்த சிங்கைநகர்
செல்வருயர் நல்லூரைச் சிறப்புறவே தலைநகராம்
வல்லவகைப் படுத்தியுயர் வாழ்வோங்க அரசாட்சி
நல்லபடி செய்தார்கள் நாடுநல முற்றிடவே. 25

சங்கிலியன் தோப்புஞ்சட் டநாதசி வாலயமும்
மங்கலமார் நற்தீர்த்த மகிமைசேர் யமுனையாம்
கங்கைநலம் பொதிந்துவளர் கவினுடைய வாவியுமாய்
இங்குபல மகிமைகள்நாம் எடுத்தியம்ப இனிதுண்டே. 26

இங்கிவர்கள் வருமுன்னே இனிதாக வீற்றிருந்த
பொங்கொலிநீர் மாகடல்சூழ் புனிதநலத் தலமாகி
மங்கலமார் மாமாயன் மருவிநித மருள்சுரக்கும்
சிங்கைநகர் சிறப்புநலம் செழுமையுற வினியுரைப்பாம். 27

# 6. சிங்கைநகர்ச் சருக்கம்

வங்கநலப் பெருங்கடலோர் வளமுடைய தலமாகச்
சிங்கைநகர் செல்வர்களும் திருமாலும் தேர்ந்தெடுத்த
மங்கலமார் நலமுடைத்து மாமாயன் திருவரங்க
மிங்கிதுவே யாகவுயர் எழில்நடன மாடியுற்ருன். 1

பொங்கொலிநீ ரலைமிகவே பொருந்துபரந் தாழ்ந்தகடல்
இங்கிதுவே யாழ்ப்பாண மிசையவளைந் துற்றகடல்
எங்குமிக ஆராய்ந்து இனிதிவர்கள் தேர்ந்துணர்ந்து
சிங்கைநகர் தனையரச தலைநகராய் அமைத்திருந்தார். 2

வங்கவுயர் கடற்பரப்பே வருகின்ற கப்பலெலாம்
இங்குமிக லாவகமாய் என்றென்றும் நடமாடித்
தங்கியிருந் திடம்பெயர்ந்து தகுமுறையிற் திரும்புதற்கு
சிங்கைநக ராட்சியினர் சிறந்ததெனக் கண்டார்கள். 3

அந்நியநன் ஞட்டினர்கள் அடைந்துகடல் மார்க்கவழி
இந்நிலத்தைத் தாக்கவரின் எதிர்ப்பதற்காம் திறமையுற்ற
தன்னிகரி லுயர்கப்பற் தகும்படைகள் சிங்கைநகர்
மன்னவர்கள் வைத்திருந்தார் மற்றதனு லிதைவகுத்தார். 4

பரந்துபட்ட யாழ்ப்பாணப் பரப்பெங்கும் சிங்கைமன்னர்
நிரந்தரநல் லாட்சிக்கீழ் நிலைத்திங்கே இருந்ததுநல்
வரந்திகழும் ஊராய வடமராட்சிப் பிரிவுமிவர்
புரந்திடுமிவ் வாட்சியின்கீழ்ப் பொருந்தியதே யாகும். 5

ஓடுதிங்கே யினிதயலே உயர்தொண்டை மாஞறு
கூடிமிகு கடலடைந்து கொண்டுசென்ற நன்னீரை
நாடியதன் பாற்கலந்து நன்றேதன் தகவிழந்து
கூடுமிகு முப்புநீர் கொண்டுவரும் மீண்டிங்கே. 6

உற்றவுயர் நடுநாடி ஒத்திதுநல் யாழ்ப்பிரிவில்
உற்றுநித மமைந்திருந்திங் கோருறுதி நமக்குணர்த்தும்
நற்றவத்தால் ஞானநெறி நாயகன்தா ஞற்றணேவோர்
மற்றிங்கே மீளினும்தாம் மாண்புடனே யேமீள்வர். 7

உற்றதச காரியத்தால் உயர்குருவின் வார்த்தைவழி
குற்றமறத் தத்துவத்தைக் குறித்தகன்று தமைநாடி
நற்றவத்தால் ஞானமொடு சென்றணைந்து மீள்பவர்கள்
பெற்றிடுவார் சிவகரணம் பிரிந்திடுவா ருலகியலை. 8

முற்பிறவித் தொடர்பாலே மூழுகின்ற பிரபத்தி
யுற்பவித்த பேரடியார் உலகியலை மற்றிங்கே
அற்பமுமே காணார்கள் ஆயனார் திருவருளின்
விற்பனமே கண்டிருப்பார் வேறாகா தொத்துணர்வர். 9

உள்ளத்தே யுற்றுறைந்தே உண்மைநெறிப் படுத்தியவர்
தெள்ளத் தெளிந்தநிலை சேருகின்ற போதடியார்
உள்ளத்தே நின்றுந்தி யுயர்குருவாய் வந்துறுதல்
வெள்ளத்தே கரைந்தவுப்பு விளைவாகித் தேரவைக்கும். 10

பண்டங்கள் பாராதே பரமனருள் நலமேதான்
கண்டிருக்கும் நன்னிலையும் கண்காணக் குருவாகி
அண்டிவரும் நிலைமையினை அறிவுறுத்து முருநிலையும்
தொண்டைமா ளுறுணர்த்தும் தொழுதகைமைக் குரியதுகாண்.

நற்செல்வச் சந்நிதியிந் நதியோர முற்றதலம்
பொற்செல்வி நாயகனார் பொருந்தியுறை வல்லிபுரம்
சொற்செல்வச் சோர்வறியா வடமராட்சிக் கிங்குயர்வாம்
நற்செல்வத் தலங்கள்இவை நற்கிழக்கு மேற்கெல்லை. 12

கந்தவனம் வடக்கெல்லை காணுகின்ற உப்பாறே
பந்தமுறு தெற்கெல்லை பசுபதீஸ் வரம்வடக்கு
எந்தவிதம் நோக்கிடினும் இப்பிரிவு நித்தியமும்
அந்தமிலாக் கருணைநல மாயவுயர் பிரிவன்றே. 13

தொண்டைமா னாற்றூரும் வல்வெட்டித் துறையூரும்
அண்டிவரும் கந்தவனம் பொலிகண்டி திக்கமொடு
பண்டையுயர் துறையான பருத்தித்துறை முனையூரும்
கண்டேகிற் கற்கோ வளநகர்நாம் சென்றடைவோம். 14

ஓதுகடல் ஓரமெல்லாம் உற்றுறையு முத்தமர்கள்
பேதமிலா தூயவருட் பிரபத்தி மார்க்கநலம்
ஆதரிக்கு மியல்புடையர் அவர்நலமும் பேணுதற்கே
மாதவனார் கோமளவல் லிபுரத்தை யுற்றடைந்தார். 15

கோவளநற் றுறைநலங்கள் குறித்துணர்ந்தே சிங்கைநகர்
மாவளமார் பட்டினத்தை மாநகர மாகவிங்கே
பூவளமார் நாயகியும் பொன்பூக்க மகிழ்ந்துறைந்தார்
நாவளமார் நற்றமிழின் நலமுணர்சி ராரியர்கள். 16

ஆரியநற் பேரரசர் ஆயஅடை மொழியுடனே
சீரியநற் செல்வமுறு சிங்கைநகர்ச் செல்வருயர்
வீரியமிக் கிங்கிருந்தார் வியந்திடுநம் செந்தமிழைக்
கூரியநற் புத்தியொடு குறைவறவே தாம்வளர்த்தார். 17

அரசருணர் வெவ்வாறே வவ்வுணர்வே மக்களுளம்
விரவிநிற்கும் முயிற்சியிலே வீரமுற்றார் பழகுதமிழ்
பரவிமிளிர் நன்னயங்கள் பயின்றுணர்ந்தார் காவியங்கள்
இரவுபக லென்றின்றி இனிதுபணி செய்துறுவார். 18

## வேறு

செந்தமி ழாரியர் தங்கள்நகர்
    செல்வ நலம்சிறந் தோங்குநகர்
அந்தமி லின்பம் அளிக்குநகர்
    அன்பின் நிறையுயர் சிங்கைநகர். 19

இப்புவி மன்னவர் பற்பலரும்
    இன்பத் திறைகொடுத் தேத்துமுயர்
கப்பற் படைநலம் கொண்டநகர்
    கற்றவர் போற்றுமிச் சிங்கைநகர். 20

எங்கு முயர்ந்துயர் மாளிகைகள்
    ஏழைக ளற்றிங் கியங்குநகர்
வங்கக் கடலுடை வண்ணநகர்
    வாழும் வளமுடைச் சிங்கைநகர். 21

ஆதி நெறிமுறை பேணியுயர்
அறநெறி காக்கு மரியநகர்
நீதி சிறந்து நிலவுநகர்
நிறையு நலன்மிகு சிங்கைநகர். 22

மன்னரும் மக்களு மேத்துமுயர்
மாதவ ஞலய முற்றநகர்
கன்னலும் செந்நெலு மோங்குநகர்
காணும் கவினுடைச் சிங்கைநகர். 23

வீரிய மிக்க படையுடனே
வேத்தியல் நீதி விளங்கவுயர்
சீரிய பண்பிற் றிகழுநகர்
செப்பு நலமுயர் சிங்கைநகர். 24

பொங்கி வருமலை மிக்கநகர்
புண்ணிய வாழ்வு பொலியுநகர்
வங்கம் பொலியு முயர்வுமிகு
வண்ணக் கடலுடைச் சிங்கைநகர். 25

எங்கு மெழின்மிகு சோலைவளம்
ஏருடைச் சீர்நல மேத்துநகர்
பொங்கு மழகு பூப்பநிதம்
பொன்மகள் போற்றுமிச் சிங்கைநகர். 26

சங்கும் அருளுடைச் சக்கரமும்
சார்புகொள் மாயனைப் போற்றுநகர்
மங்கல நல்லியல் வல்லிவளர்
மாதவம் செய்ததிச் சிங்கைநகர். 27

நந்திக் கொடியுடை மன்னவர்கள்
நாளு மருளுடை மாயவனை
வந்தித் திடுமுயர் இயல்புநகர்
வரத்தின் மிகுந்துயர் சிங்கைநகர். 28

வங்கக் கடலி னலையோசை
வாணிப வோசைக் கொவ்வா திங்
கெங்கும் மிருக்கும் வணிககுலம்
ஏற்றுப் பொருளொடு மேகுசனம். 29

உற்ற விளைவினை விற்றுமிக
உதவு வாழ்க்கைக் குறும்பொருள்கள்
பெற்றிங் ககல்வர் பிறநாட்டின்
பெருமைக் குறுபொருள் இங்குமிக. 30

எங்கும் அழகுயர் மாளிகைகள்
எழில்மிக வோங்கு மினியகொடி
மங்கள மிக்க மணியோசை
மருவிடு மக்கள் பணியோசை. 31

நிரைநிரை யாக வீதியயல்
நிலவிடு மின்னவர் இல்லமெலாம்
கரையின் உயர்வுடை நற்குடிசை
கடவுள ருண்ணலம் காண்குடிசை. 32

கப்பல் வருந்திசை காட்டிமிகு
கலங்கரை சேர விளங்குமொளி
செப்பும் பீதுறு பாய்ங்குழுனை
சேர நின்றிங் கொளிசுடரும். 33

தூய மணலின் மிக்கவரி
தொடரரும் வீதி யுற்றநகரி
ஏயும் குதிரைப் படைவரிசை
எங்கும் காலாட் படைவரிசை. 34

அந்நிய மன்னர் போற்றுமுயர்
ஆரிய மன்னர் அழகுநகர்
சென்னியிற் கங்கை சேருமருட்
சிவனும் மாலும் உறையுநகர். 35

கலையும் கவினு மிலங்குநகர்
　　கவிதை புனைந்திடு மன்னர்நகர்
நிலையு முளமும் உண்டுறுதி
　　நீதி சிறக்கும் நிலையுறுதி. 36

பரதம் பயிலும் மாணவிகள்
　　பாட்டுப் பயிலும் பண்புடையார்
சரத மாக வீணையிசை
　　சாதனை செய்பவர் மிக்கபலர். 37

அரனைத் தொழுவார் பேதமிலா
　　தரியைத் தொழுநல் லன்புடையார்
விரதம் பேணு மியல்பினர்கள்
　　விதிமுறை மாறு வித்தகர்கள். 38

### வேறு

சிங்கைநகர் ஆரியர்கள் சேவித்தார் மாயவனைப்
பொங்கவெழில் பூத்தலரும் பொற்புடைய தாமரைப்பூ
எங்கெங்கு மிலங்கிடவே இனியகுளம் பலசமைத்தார்
துங்கமுறு மர்ச்சனைக்காம் துளசிகளும் தாம்வளர்த்தார். 39

தூயவருட் திருநாமம் தோன்றுகின்ற குளத்திற்கு
ஏயபடி காவலிட்டிங் கெங்கெங்கும் பசியுடனே
மேயவரும் பசுவினங்கள் மேவாத வாறகன்று
நேயமொடு நீர்பருக நிறைகுளமு மிவர்வகுத்தார். 40

ஆயனுக்குப் பசுவன்றி ஆவதிங்கே ஏதுமில்லை
நேயமொடு கனவிலுமே நீங்காதிங் கவைநலன்கள்
மேயவிங்கே அழைத்துவரும் மேய்ப்பாள ராயவரும்
ஆயனைப்போல் வேய்ங்குழலை அழகாக வூதிடுவார். 41

ஊர்வரண்டு போனாலும் உயர்தழையங் கற்றாலும்
நீர்வரண்டு போகாத நிலைமைபெறு நற்குளமும்
வேர்வரண்டு மாளாத வெள்ளறுகம் புல்லுமிங்கே
ஏர்வரண்டு மாளாதே எழிற்பசுவைக் காப்பனகாண். 42

### வேறு

சிங்கைநகர்ச் சூழலிலே சேர்ந்திருந்த பெருவெளியில்
எங்கெங்கும் பசுமந்தை எழிலாகக் காட்சிதரும்
இங்கிதுவோ ரிடைச்சேரி எனவறியார் எண்ணவரும்
மங்கலமார் மாமாயன் மந்தையைவிட் டகல்வானே. 43

பொன்மகளு மிங்கிருந்தாள் பொருந்துமருள் பெற்றவல்லி
நன்மகளு மிங்கிருந்தாள் நாடுகின்ற மந்தைவளர்
தன்மநல மதுவுமுண்டு தாமரைநற் துளசியொடு
நன்மணல்சேர் திருக்களியாம் நாமமுமே யிங்குண்டு. 44

இன்னபெரும் தன்மையிலே எப்படியோ கோபாலன்
தன்னைநிதம் வேருக்கித் தழுவாதே அகன்றிடுவான்
முன்னமுயர் இலவல்லி மூழ்துயரை மாற்றிவிட்டிங்
கெந்நாளும் தான்மிளிர இங்குவந்தான் மாகடலே. 45

மாதவத்து நங்கைநிலை மாகடலில் வந்தநிலை
மோதவலை வைத்தநிலை மூட்டியுயர் வள்ளமெலாம்
பேதமுறச் செய்தநிலை பெருவலைக ளறுத்தநிலை
ஆதரவாய் இலவல்லிக் கருள்செய்த நிலைமையெலாம். 46

மாதவனார் கழல்போற்றி மற்றிங்கே நாமினிதே
ஓதவுளம் கொண்டனமால் ஓதுமுன்னர் வளம்நல்கும்
ஆதவனார் வந்துமுதல் ஆராதித் தருள்சிங்கை
பேதமிலா வரலாறு பேசுதுமோர் சிறிதிங்கே. 47

### வேறு

இன்றும்நாம் காண்கின்றோம் சிங்கை மன்னர்
இருந்தாண்ட வல்லிபுரப் பெரும் பரப்பில்
நன்றகன்ற தெருவீதி உடைந்த சின்னம்
நாகரிக வாழ்விற்கா மாதா ரங்கள்
நின்றிலங்கும் ஊரோட்டின் உடைவுச் சின்னம்
நிறைவாய பாத்திரங்க ளுடைந்த வோடு
துன்றிநிறைந் தெங்கெங்கும் பரந்து பட்டுத்
துகள் துகளாய் இருத்தலிவை ஆராயின். 48

எட்டாம்நூற் ருண்டின்முன் கந்த ரோடை
ஏற்றமுறு யாழ்ப்பாண மன்ன வர்தம்
இட்டமிகு தலைநகராய்த் திகழ்ந்தி ருந்த
திதன்பின் பதின் நான்காம் நூற்ருண்டு
கிட்டிடுமோ ரெல்லைவரை இச்சிங்கை நகர்
கீர்த்திமிகு துறைமுகமு மாய தலைப்
பட்டினமாய்த் திகழ்ந்ததெனக் கூறு கின்ருர்
பண்டுதொட் டிதன்முன்னும் மக்கள் வாழ்ந்தார்.

யேசுவின் முன்இரண்டாம் நூற்ருண் டிற்காம்
இயைபுடைய முதுமக்கட் தாழி கண்டார்
மாசிலாத் திராவிடர்தம் மாண்புச் சின்னம்
மற்றிதெனப் போற்றுகிருர் நன்வல் லிபுர
தேசுமிகு பொற்சாசனம் ஒன்று கண்டார்
திகழ்நீலக் கல்ஆமை காலிற் சூடும்
மாசிலா வெண்டய மோடுநற் கோளவுரு
மூன்றுமுடைப் பொற்ரு மரையும் பெற்ருர். 50

நாச்சிறப்ப நாமங்கள் கூறி யன்பர்
நாளெல்லாம் தோத்தரிக்கு மித்த லத்தில்
பூச்சுமிகு மாளிகைகட் கத்தி வாரம்
பொன்னழகு நாணயங்கள் இரும்புத் தூள்
கீச்சுக்கண் டம்கல்லோடு நடை பயின்ற
கீர்த்திமிகு பெரும்பாதை யுடனி ணைந்தே
ஆச்சரியப் பாட்டுடன் கண்டாய்ந் தார்கள்
ஆதார மின்னுந்தான் பலவுண் டங்கே. 51

சிங்கைநகர் ஆரியர்கள் சேது காவற்
சிறப்புற்ற மன்ன வர்கள் என்றென்றே
மங்காது புகழமக்கள் செந்தமிழ்ச் சீர்
மகிமைபெறு திராவிட நற்சின் னங்கள்
இங்குநாம்காணு மிப்பரப்பில் தமிழ்பேணி நன்கு
இனிதாண்ட இலக்கியச்சீர் கண்ட மன்னர்
எங்ஙனமாய் ஆரியராய் மாறி ஞர்கள்
ஈதிங்கோர் புதுமைமற் றதுவா ராயின். 52

இராமேஸ் வரப்பதியில் இருந் தரசங்
கினிதுசெய்த இராசகுலம் கீர்த்தி மிக்க
பிராமணநன் மரபே யாகுமம் மரபிற்
பெண்கொண்டார் இன்னவொரு கார ணத்தால்
இராவணனூர் பூமியிதில் மரபி ரண்டிற்
கிணைவாக மக்கட்பே றுயர் வோங்கப்
பராபரித் திருமரபின் நாம மொன்றப்
பண்பாய பட்டமிட் டரசாண் டாரே. 53

சேதுநகர் ஆட்சியையு மின்னு ரேற்றுச்
சீராக ஆண்டுநித மூலகு வப்ப
பாதுகாத் தாரியநற் சேது காவற்
பட்டமிவர் பெற்றூர்மற் றுயர்வு மிக்க
சேதுலாஞ் சனையொடுநல் இடபக் கொடியும்
சேரப்பெற் றூர்பர ராச சேகரனே
டோதுபுகழ்ச் செகராச சேகர வரச
உயர்நாமம் மாறிமாறி யுறவே பெற்றூர். 54

# 7. வல்லிபுரச் சருக்கம்

பூவியல் அழகின் சீரும் பொலியுநல் வளத்தின் சீரும்
ஆவியல் பேணும் சீரு மருமுயல் வுடைய சீரும்
மேவிய ஏரின் சீரும் மிகுமுயர் வல்லி யூரின்
நாவியல் தப்பா வாழ்வின் நலமினி திங்கு ரைப்பாம். 1

சிங்கைநல் லூரென் றோதும் சேர்வுடை வல்லி யூரில்
எங்குமே நீர்கொள் வாவி எழிலுறு தீப மென்னப்
பங்கயம் பூத்து நிற்கும் பண்புடை மலர்வாழ் தூய
மங்கையு மிங்கி ருப்பாள் மலிவளம் பொலியு மன்றே. 2

மாரிநல் வளத்தி னாலே மருவுநீர் வெள்ள மெல்லாம்
சீரிய வாறு போலச் சேர்ந்துயர் வழிவ குத்தே
ஏரியல் போற்று மிந்த எழிற்தலம் மருவி யோடி
பேரியல் வாவி மிக்குப் பெருகிடச் செய்து நீங்கும். 3

வேறு

மருவுஞ் சீரார் மருதநிலம்
மாண்பா ரழகு நிறைவுகுளம்
அருவி போல மருவிநிறை
யாறு யோடும் பெருவெள்ளம். 4

தாமரை யோங்கி மேவுமுயர்
தண்ணீர் மறையும் பசுமையிலே
ஆமப் பசுமை இலேமேலே
அழகி னோங்கி யலருமலர். 5

குங்கும வண்ணம் போலொளிரும்
குதுகல மாகி வாசமணப்
பங்கய மாதின் வாசநலம்
பதியு மழகு நேசநிலம். 6

ஒற்றை நற்கா லுயரநிதம்
உறுமீ னோடி வருமளவும்
மற்றைக் காலில் நின்றுமிகு
மாண்பு தவம்கொள் கொக்குவகை. 7

நீர்மேல் நிலைத்த கண்ணோடு
நீந்தும் மீனை எதிர்பார்த்து
நாரையு மங்கே யோர்சாரல்
நண்டு மிருக்கு மயலயலே. 8

குவளை பூக்கும் பொய்கையிலே
குறிவைத் தங்கே மீன்கொத்தி
தவளை மேவி நிலமெங்கும்
தாவிப் பாயு மரவமுறின். 9

சேவற் கோழி துயில்நீத்து
சிறகை யடித்துக் கூவவுயர்
தேவன் கோவில் மணியோசை
சேர வருமங் கினிதாக. 10

மேவும் சீரா ரடிவானம்
மேதினி யோங்க வாதவனும்
பூவும் மலரப் புதுமணமும்
பொலியு மிரையும் வண்டினமும். 11

பூசைக் காய மலர்கொய்ய
புனிதம் மேவிய தொண்டர்பலர்
நேச மோடு வருவார்கள்
நிறைய வுளத்தில் மிகவன்பு. 12

பொய்கை யெங்கும் நீரழகு
பொருந்தும் சோலை சீரழகு
தெய்வ நலம்தரும் மேரழகு
திருமா லழகோ பேரழகு. 13

கண்ணுக் குண்டு பூவழகு
காதுக் குண்டு ரீங்காரம்
நண்ணும் மென்மை மிகுவாசம்
நாசி நாமெய் தேனமுதம். 14

ஐந்து பொறிக்கு மைந்துபுவன்
அமைய மலரும் வாசமலர்
எந்தை பிரானின் பூசைக்கிங்
கேற்ற தாகு மென்றென்றும். 15

ஐந்து புலன்கொள் உள்ளமலர்
ஐந்து மொப்ப நன்கிசைய
வந்து பொருந்தி வாசமலர்
வைத்து வணங்குவர் வல்விபுரர். 16

### வேறு

பருவங்க ளாறும் தூய பண்பினில் நோக்கி மக்கள்
கருமங்க ளாற்று வார்கள் காணுநல் வேனில் நாளில்
ஒருமையோ டொத்து யாரும் உயர்கொடி வகைகள் நாட்டி
பெருமைசேர் துரவ மைத்து பேணிநல் நீரி றைப்பார். 17

### வேறு

உத்தமநற் பயனீயும் உயர்வாய வெள்ளரியும்
வத்தகையும் கெக்கரியும் பயிற்றங் கொடிவகையும்
சித்திமிக இன்னுமின்னும் செடிவகையும் சிலநாட்டி
ஒத்துயரப் பயனீவார் உலகமுயர் வெய்தநிதம். 18

### வேறு

நாடுநற் பலன்க ளீயும் நலமுறு பதநீர் காய்ச்சி
கோடையி லிடுவார் வெல்லம் கூடிமற் றந்நாள் நீங்கி
ஆடிவந் தணையும் போது அரியநற் களிக றந்து
நாடியே பனாட்டுச் செய்வர் நன்றிவை மாரிக் காகும். 19

கோடைநாள் மற்று மிங்கே குறித்துயர் தோட்ட மெங்கும்
நாடியே சாமை யோடு நறுந்தினை குரக்க னாதி
கூடிநன் னீரி றைத்து குலவுசீர்ப் பலன்கள் துய்ப்பார்
மேடுயர் நிலத்துப் பின்னாள் மிகுமுயர் வரகும் செய்வார். 20

மாரிவந் துற்ற நாளில் மாண்புறு பனையின் வித்தை
சீரியல் பாத்தி கோலி செப்பமாய் அடுக்கி மூடி
தூரநன் மணலைப் போட்டுத் தொடர்புற விட்டுச் செல்வர்
நேரியல் தையின் பின்னுள் நிறைவுடைக் கிழங்கு கொள்வார்.

கிழங்குகள் காய்ந்திங் கேதும் கேடிலா ஒடிய லாகி
வழங்கிடு மாவைக் கொண்டு வளமுறப் பிட்ட வித்து
பழங்குடி மரபு பேணிப் பசியினை யாற்று வார்கள்
கிழங்கினை அவித்து நன்றே கீறியும் காய வைப்பர். 22

தானிய வகைக ளோடு தருகனி காய்க ளுண்டிங்
கூனியல் வாழ்வு போற்றற் குரியன பலவு முண்டே
ஆனியல் பாலி னோடோர் அருந்தயிர் நெய்மோ ருண்டுற்
றேனிவர் வருந்த நேரும் என்றுமே யின்ப மன்றே. 23

ஆனிமீண் டாடி யாகில் அருங்கொடு வெய்யில் நீங்கி
வேனிலின் தன்மை மாற விளங்கவந் தெய்து கின்ற
வானுறை முகில்க ளோங்க வந்திடு மழைகொள் நாளில்
தூநிறை வுடைய செந்நெல் தொழுதிவர் விதைப்பா ரன்றே.

கார்மிகு பருவ மீதில் கனமழை யின்னு மின்னு
மேர்மிகு வளங்க ளோங்க இனிதுமிக் கிய நன்றே
நீர்மிகும் பயிர்க ளோங்கும் நிலவுபேர் வெள்ள மெங்கும்
சீர்மிகப் பரந்து மேவிச் செல்லும்தாழ் நிலத்தை நோக்கி.

வெள்ளமோர் மாரி யாகும் விதத்திலே வேக மாகத்
துள்ளிறல் நுரைகள் மேவ சுழித்துயர் அலைகள் மோதிப்
பள்ளமெங் குளதோ வங்கே பண்புற வோடிச் செல்லும்
உள்ளநற் குளங்க ளெல்லாம் உயர்வுற நிரப்பி நன்றே. 26

வரம்புமிக் குயர்ந்தி ருக்கும் வருவெள்ள முடையா வாறு
திரம்பெறக் கட்டி யுள்ளார் தீங்குமற் றேது மாகில்
வரம்பினைக் கட்டி வெள்ளம் வழிந்திடா வாறு செய்வார்
உரம்பெற வாழ்வு பெற்றார் உறுமழைத் துளியை நோக்கார்.

தெங்கிளங் காய்கள் மிக்க தீஞ்சுவைப் பனையின் காய்கள்
இங்குயர் கமுகின் காய்கள் இனியநற் கதலி யின்னும்
மங்கல பூசைக் காய மாபலா சினைக ளோடு
தங்கிடா திங்கு வந்து தரிப்பவிட் டோடும் வெள்ளம். 28

கரும்பென வளரும் செந்நெல் காவலிட் டினிது பேணி
வரும்விலங் கழியா வாறு வளமுறப் பேணிக் காப்பர்
பெரும்பணி யுடையா ரின்னூர் பிரிவிலா முயற்சி யோடிங்
கரும்பசி யதுவும் பேணூர் அனுதின முழைத்து நிற்பார். 29

வைகறைப் போதி லென்றும் வளமுறு கோழி கூவ
உய்வகை மார்க்கம் பேணி உயர்கடன் அனைத்து மாற்றி
பொய்கையின் மூழ்கிச் சென்று புலருமுன் வணங்கி மீண்டு
செய்வகைக் கரும மாற்றத் தீரமோ டுவந்து செல்வார். 30

மாலையும் காலை போல மருவிய கடமை முற்ற
வேலையுற் றிளைத்த சோர்வு வியர்வையும் அழுக்கும் நீங்க
சாலநற் குளத்தின் மூழ்கி சால்புயர் நெறியிற் தப்பா
தாலயம் மேவி யாயன் அடியிணை போற்று வாரே. 31

முயற்சியாற் தொழுகை நீக்கார் முறையுறு தொழுகைக் காக
முயற்சியின் மாற மாட்டார் முயற்சியைத் தொழுகை யோடிங்
கயர்ச்சியற் றினிது பேணு மாற்றலா லிவர்கள் மிக்க
உயர்ச்சியிங் கடைந்து ளார்க ளுழவினைப் பேணிக் காத்தே. 32

ஆலய மணியி னோசை அழகுற ஒலிக்கும் தூய
சீலமார் வைக றைக்கண் சிறப்புடை மாத ரெல்லாம்
சாலவே எழுந்து மிக்க சால்புறு கடமை யாற்றி
நீலமால் தன்னைப் போற்றி நித்திய பணிகள் செய்வர். 33

உயர்வொடு பாத்தி ரங்கள் உறுமழுக் ககலச் செய்வார்
அயர்விலா வாறு சாணி அள்ளிநீத் ததன்பின் புற்ற
தயிர்கடை வார்கள் வெண்ணெய் தகவுறப் பெயர நன்றே
பயிர்வினை தொழிலை நாடும் பண்புளார்க் குணவும் செய்வார்.

அணிகிளர் புள்ளி னோசை அருந்தயிர் கடையு மோசை
மணிகிள ரொலியி னோசை மாண்புயர் சங்கி னோசை
பணிகிளர் மாந்த ரோசை பயில்பவர் கீத வோசை
தணிகிளர் விளைகொள் ஓசை தொடர்புற வோங்கு மிங்கே. 35

முல்லைநன் னிலத்தி னின்றும் முடிமிசை விறகு தாங்கிச்
செல்லுநன் மாதர் பாட்டும் சிறுவர்தம் இனிய பாட்டும்
நெல்வயற் கரும மாற்றும் நிலைதொறு மொலிக்கும் பாட்டும்
செல்வியர் பயிலும் பாட்டும் சேர்வுறத் தொடரு மிங்கே. 36

தலைமுறை இனிது பேணித் தகுமுறை யுணர்ந்து நோக்கி
கலையுயர் கலாச் சாரம் கவினுறப் பேணு வார்கள்
நிலையுயர் கூத்தும் பாட்டும் நிகழ்த்துவார் பண்பி னோடே
அலைவுறு கேடு காணில் அதனைமுன் னீக்கு வார்கள். 37

### வேறு

வீடெங்கும் நற்பாட்டு விளைநிலத்தில் நெற்பாட்டு
காடெங்கும் புற்பாட்டு கழகத்தே விற்பாட்டு
ஏடெங்கும் முற்பாட்டு எழிற்கூத்திற் பிற்பாட்டு
கேடெங்கும் நிற்பாட்டு கிளர்ந்தெழுவ திப்பாட்டே. 38

### வேறு

பங்கய வதன மோங்க பவளவாய் இன்சொல் ஈய
அங்கயற் கண்க ளோடு மழருயர் நடைபின் மேவும்
மங்கையர் நெறியிற் தப்பார் மாதவர் உணர்வு தப்பார்
இங்குள மாந்தர் யாரும் இயல்நெறி யெதுவும் தப்பார். 39

பாரிலே உணவு பற்றுக் குறையெனின் வாழு வோரை
நேரிலே தாக்கு மேனும் நிலவுபே ரரசை யேதான்
நேரில்நாம் மிகவும் தாக்கும் திறமுற வுழவு பேணும்
சீரியல் மாந்த ராட்சி செய்பவர்க் கினிய ரன்றே. 40

மக்களுக் குணவின் ருகில் மாவியல் ஆல யத்தின்
தக்கநற் பூசைக் காய தகுதிசேர் அமுது மின்றும்
இக்குறை நேரு மாயின் இரவியும் மாறு முற்ற
மிக்குயர் மழையும் மாறும் மேதினி வாடு மன்றே. 41

வானமும் மாரி யீயும் வயலெலாம் செந்நெ லோங்கும்
கானுயர் புறங்க ளெல்லாம் கவினுறு தருக்க ளோங்கும்
ஆனுறு நலனு மோங்கும் ஆலய மருளி னோங்கும்
ஈனமில் தகுதி மேவி யிலங்குதிவ் வல்லி யூரே. 42

நாமநற் குளமு முண்டு நாயகன் பூசைக் காய
தாமரைக் குளமு முண்டு தகவுற மாய னேற்ப
தாமுயர் துளசி யுண்டோர் ஆவின மதுவு முண்டு
தாமுயர் முயல்வி னோடு தகவுற வாழ்வார் மக்கள். 43

நித்தியம் பேணிக் காத்து நீக்கியே களைக ளெல்லாம்
சித்தியின் மிக்க தூய சேயிழை யார்கள் தங்கள்
உத்தம உழைப்பி னோடு முறுமுறை பிசகா வாறு
வித்தக உழவ ரிங்கே வியந்துதம் கடமை செய்வார். 44

கயலிணை கண்ணி னார்கள் களிப்பொடு வந்து நின்று
வயலிணைந் தெங்கு மேவி வார்த்தையும் சிரிப்பு மோங்க
புயலிணை முகில்கள் பேணி பொருந்திடும் மழையிங் கேனும்
அயலிணைந் தெங்கு மேகார் அதுசகித் தியங்கு வாரே. 45

சீரிய குடலை கட்டி செப்புநற் கதிர்க ளீந்து
ஏரிய லெய்தும் போதில் எறிந்திடு கதிரி னாலே
பேரியல் பெய்தும் செந்நெல் பேணிமற் றிந்த நாளிற்
கூரிய வலகாற் கொத்தும் குருவிகள் துரத்திக் காப்பார். 46

தினைப்புனம் காத்த வள்ளி செயலினை நினைவு கூர
வனைப்பொடு சிறுவர் கூட்டம் வந்துமற் றெங்கு மாகி
நினைப்பொடு மீண்டு மீண்டு நிரைநிரை யாகச் சேரும்
இனப்பல வாய கூட்டம் ஏகிடத் துரத்து வாரே. 47

பறவைகள் கடிந்து நன்றே படர்வரம் புற்ற புல்லை
கறவைகட் காக வேண்டி கருத்துடன் அரிந்து சேர்ப்பார்
நிறைவுடை விளைவு மேவி நிலத்திடைக் கதிர்கள் சாய
அறுவடை பேணிச் செய்வர் அதற்குரி யாரை நாடி. 48

தைபிறக்க வழிபிறக்கும் தானியங்கள் கலகலக்கும்
உய்பிறவிக் குணவுவரும் உறுந்தேவை நிறைவாகும்
மெய்பிறழா தென்றென்றும் மேதினிமே லுதவிமன்ழ
செய்பயிருக் கிந்துவந்த செங்கதிரோன் நினைவுவரும். 49

வானம் பொழிகவென வாழ்த்துகின்ற மாதவனார்
தான மதுவென்றே தகவுடையா ரிங்குரைப்பார்
மோன முதல்வன் முறைமையோடிவ் வுலகுய்ய
ஆனவுயர் அருளுருவே யாதவனார் அரியவுரு. 50

பூப்பதெலா மவனாலே பொருந்துமுயர் நென்மணியின்
மாப்பொலிவ தவனாலே மாதவனார்க் கைந்துதவும்
ஆப்பயனும் அவனாலே அறந்தழைப்ப தவனாலே
காப்புடைய தெய்வநலக் கருணையுந்தா னாதவனே. 51

தேவருயர் வைகறையாய்த் திகழுமருள் மார்கழிநாள்
மேவுதுளி முகிலகல மினுமினுத்து மிதந்துவரும்
மாவியல்சீர் ஆதவனார் மகிமைநலம் நினைவிலுற
ஆவதுவோர் தைமுதல்நாள் ஆதவனைத் தொழுதிடுவார். 52

பொற்கால மெனவுழவர் போற்றுமுயர் விளைவுநிறை
நற்கால மிதுவாகும் நல்லுளத்தி லுவகைமிக
சொற்கான நாயகனார் சொருபநினை வாதவனை
முற்கால வரன்முறையில் முழுவன்பின் பணிந்திடுவார். 53

பொங்கலோ பொங்கல் புதுப்பானை புத்தரிசி
மங்கலமார் பொங்கல் மகிமைமிகு பொங்கல்
எங்குமே இன்ப வெதிரொலிகொள் பொங்கல்
சிங்கைநக ரெம்பெருமான் சீரருளாம் பொங்கல். 54

அருளோங்கும் பொங்கல் அனைத்திடரு மோய
இருள்நீங்கும் பொங்கல் ஏழைகளுக் கீயும்
பொருளோங்கும் பொங்கல் புகலாய ஆதவனின்
அருளோங்கும் பொங்கல் அருண்மிகுதைப் பொங்கல். 55

ஏரின் நலம்பேணி இப்பூசை யாம்மறுநாட்
பாரின் நலம்பேணும் பண்பாய நற்பசுவின்
சீரின் நலம்பேணும் சிறப்புவிழா வினிதியலும்
நேரில் பயனீயும் நிறைவுடைய திப்பசுவே. 56

அன்னத்தைச் சிந்தி அலட்சியமாய் மிதித்தந்த
இன்னமுதைப் பேணாதார் இயல்புநிலை கண்டிவர்கள்
என்னே இதுநம தெம்பிரா னருளன்றோ
உன்னாதே சிந்தி உழக்குகிறீர் எனநோவார். 57

பஞ்சம் பசிபிணிகள் பகைமைநெறி நீக்கியருட்
தஞ்சமென வருமிந்தத் தகுதிமிகு நெல்லைநிதம்
விஞ்சு புகழுடையார் வீடுகொண்டு செல்வதன்முன்
பஞ்சாங்க நாட்பார்த்துப் பக்தியொடு புதிதெடுப்பார். 58

புதிதாக மேவிவரும் பொன்மணிகொள் நற்கதிரை
வதியுமுயர் மனைவாசல் வளமுறவே யுறப்பொருத்தி
புதிதாய செந்நெல்லிற் புத்தரிசி மிகவெடுத்து
பதியுறுசீ ராலயத்திற் படைத்தமுது புதிதீவார். 59

மனைகளிலும் பின்பிவர்கள் மாண்புடனே புத்தமுதம்
இனிதாகச் சமைத்துவரு மேழையர்கள் நற்சுற்றம்
அனைவரையு மழைத்தளிப்பார் ஆண்டவனின் தூயவருள்
நினைவோடு தாமுந்தான் நிலைபெறவிங் குண்டுவப்பார். 60

நற்பதமாய் விளைகின்ற நற்கறுப்பன் நெல்லினுயர்
உற்பவமிங் கிவருறுவார் உறுமதற்கோ ரறுமாதம்
பொற்பாரும் புதிதுக்கோ பொருந்தாதீ தாதலினால்
அற்பநாள் விளைவிலுறும் மந்நெல்லும் விதைத்திடுவார். 61

சம்பாவின் பல்லினமும் சார்பாய நிலந்தேர்ந்து
செம்பாக முறவிதைத்து சீருடனே அதுவிளைய
நம்பெருமான் தாள்போற்றி நன்றே புதிதீந்து
தம்பெருமைக் கிழுக்கின்றி தகைமைநிலை பேணிடுவார். 62

அறுவடை காலம்மேவ ஆதவன் பாதம் போற்றி
மறுவிலா தருளின் மிக்க மாதவன் பதமும் போற்றி
அறுவடை மேற்கொள் வார்கள் அவற்றைமற் றொன்று சேர்த்து
மறுவறு போர்க ளாக்கி மலையெனக் குவிப்பா ரன்றே. 63

அலைவள மதுவு முண்டிங் காற்றல்கொள் உழைப்பாற் பல்சீர்
நிலைவள மதுவு முண்டு நிகரிலா உளத்தின் பண்பாற்
கலைவள மதுவு முண்டு காணுநற் போர்க ளாலே
மலைவள மதுவும் காண்போம் மற்றெது வேண்டு மன்றே. 64

கன்மலை ஈவ திங்கே கடுநதி யதுவே யாகும்
நென்மலை ஈவ துற்ற நிகரிலா உணவிங் காகும்
பன்மலைக் கூட்ட முற்றும் பண்புடை யீழ நாடு
நென்மலைக் கூட்டம் போதா நிலையினால் வாடு தன்றே. 65

வேறு

சோறுதரு மலைசேர்சீர் சோபைமிகு நற்செந்நெற்
பேறுமிக வைக்கோலைப் பேணியுறப் பிரித்தெடுத்து
வேறாக்கிப் போரடிப்பார் வியந்துமிக இம்மாந்தர்
மாறுதிவ் வையகத்தின் மாண்புயர வேயடிப்பார். 66

வானமழை வளம்நோக்கி வயல்விதைத்து விளைந்தவிளை
வானமணி கொண்டிடுநாள் ஆலயம்போற் போர்க்களத்தை
ஈனமிலா தமைத்திவர்கள் எம்பெருமான் விநாயகனை
ஊனமுற வொட்டாதே உவந்தேத்தி யழைப்பாகள். 67

சாணிமிசை நல்லறுகு சார்த்தி விநாயகரைப்
பேணி வரவழைத்து பிரியமுடன் தாம்போற்றி
மாணியல்பிற் தேங்காய் மகிழ்வாக வேயுடைத்து
பூணுமுயர் மரபிற் புகுவார்நற் போரடிக்க. 68

அன்னமுயர் ஆதாரம் அனைத்துயிர்க்கு மதுவுயிராம்
இன்னவொரு தன்மையினால் இதுவுமிவர்க் காண்டவனும்
அன்னம் விளையாதே அகிலமெல்லாம் அதியுயர்வாம்
சொர்ணம் விளைந்தாலும் சுகங்காண முடிந்திடுமோ. 69

சொர்ணமுண வாகாது சோறேதான் பசிதீர்க்கும்
அன்னவுண வமுதுண்டு ஆம்பசியிங் ககன்றபின்னே
சொர்ண வழகுநலம் சுவைப்பாரே யாருமன்றி
அன்னக் களையிருப்பி னதையாரும் கருதார்கள். 70

நாணயத்தின் தகுதியிலே நன்மதிப்பைப் பெற்றாலும்
ஊணளிக்கு முழவர்குலம் உழுதொழிலை உவப்புடனே
பேணுரேல் நாமுணவைப் பெறலாமோ நாணயத்தால்
செந்நெல்லே உயர்சொர்ணச் சிறப்பளிக்கும் செம்பொருளாம்

பொருளுக்கிங் கீடாகப் பொன்பதிலாய் நிற்பதன்றி
பொருளில்லா நிலைமையிலே பொன்மதிப்பிங் கற்றுவிடும்
உருளு முலகினிலே உழைப்பேதான் மதிப்புடைத்திவ்
வருளாளர் நல்லுழவர் ஆக்கமுயல் வுயர்நிதியம். 72

ஊக்கத் திறமுடையார் உதவாத மண்ணமுக்கின்
தேக்கத்தைச் செம்மையுறத் திருத்தி மழைவளத்தால்
ஆக்கமுற வளிக்கின்றார் அவர்முயல்வே உயர்செம்பொன்
ஊக்கமில்லா நாட்டினிலே உளுத்திடுமித் தூயசெம்பொன் 73

ஆக்க முடையார் அருளுடையார் இன்னவர்கள்
ஊக்கமுட னுழையார் உறுதியுறு இவர்முயல்விற்
பூக்கும் கதிர்மணிக்காம் பொலியடிக்கும் வேளையிலே
காக்கும் கடவுளருட் கருத்துடனே களம்புனைவார். 74

அன்னமிவர்க் கருளுருவம் ஆம்செந்நெல் அதுவுந்தான்
இன்னவருக் கருளுருவம் ஏத்துமுயர் களமுமே
தன்னிகரில் அருளுருவாம் தலமாகும் அத்தலத்தில்
எந்நாளும் பக்தியுடன் இனிதுரைப்பார் செம்மொழிகள். 75

சுளகினைக் குல்லமென்பார் சோர்விலா நென்மதிப்புக்
களவான கடகத்தை ஆம்லாச்ச மதுவென்பர்
வளமார் பெரும்பெட்டி வாய்த்தபெரு வாயனென்பர்
பழகுமொழி இவ்வாறே பற்பலவாம் நெற்களத்தில். 76

நாட்டுமரம் களக்கட்டை நடையன்க ளாம்மாடு
போட்டுவரும் சாணி போர்ப்பையென் றேந்திடுவார்
பூட்டுகின்ற கயிறும் புகலுமுயர் கந்தாகும்
தேட்டமுறு செந்நெல்லும் சேர்களத்திற் பொலியாகும்.

கட்டியிணை முதன்மாடு களக்கட்டை யானுகும்
தொட்டிணையும் மற்றவெலாம் சொல்லுமுயர் நடையன்கள்
கட்டுங் கடைமாடு கருதுமுயர் கிளாத்தையென
இட்டமுட னுரைப்பார் இன்னுமுள புதுச்சொற்கள். 78

காரை களக்கட்டை கருதுமுயர் நற்பாலை
சீரார் படவாள் சிறப்புடைய பஞ்சிராய்
ஏருற்ற மேழி எனவெனவே இயைபுடைய
பேரார் மரந்தேடி பேணியெலாம் வகுத்திடுவார். 79

போரடிக்கும் போதுகளை பொருந்தாத வாறிவர்கள்
சீரடியை நோக்காமே செம்மைமிகு மோசையுடன்
ஏரடிகொள் பாடலெலாம் இனிதாகப் பாடிநிற்பர்
நேரடியா மெண்ணமெலாம் நிறைவுபொலி யதன்மீதே. 80

## வேறு

நீரின் வளமும் நிலவளமும்
நிறையும் செந்நெல் விளைநலமும்
ஏரின் வளமும் இன்னருளும்
இனிதே பொலிக பொலிகநிதம். 81

கல்லின் வளமிங் கொருகாலம்
கறவை வளமிங் கொருகாலம்
நெல்லின் வளமின் றிக்காலம்
நிறைந்த வாற்றம் கரைவாசம்
பொலியே பொலியோ ஓ பொலிபொலிக. 82

ஆற்றங் கரையி னுறுவாசம்
　　அமைத்துத் தந்தது விவசாயம்
போற்றி யுற்றது சமுதாயம்
　　பொருந்தி வந்தது ராசாங்கம். 83

உழவி னுதித்த சமுதாயம்
　　உழவை மறப்ப தவமானம்
உழவி லுயர்ந்த ராசாங்கம்
　　உழவை மறப்ப தநியாயம்
பொலியே பொலியோ பொலிபொலிக
　　பொலியே பொலியோ பொலி பொலிக. 84

காட்டில் மந்தை மேய்த்தவர்நாம்
　　கட்டிக் காத்திங் குணவீந்து
வீட்டில் வெய்யில் மழைமாற்றி
　　விதைத்தோ மாற்றம் கரைசேர்ந்து. 85

ஆவின மோடு நலமீயும்
　　அரிய செந்நெல் விளைவுநலம்
பூவியல் வாழ்வு பூசைமுறை
　　பொலி பொலிக பொலிகநிதம்
பொலியே பொலியோ பொலிபொலிக
　　பொலியே பொலியோ பொலி பொலிக. 86

## வேறு

இவ்வாறு கூறிமிகு மின்பமுடன் போரடிப்பார்
ஒவ்வாத வார்த்தையின்றி யுயர்களத்துக் குறும்வார்த்தை
செவ்வையுறப் பேணிடுவார் சேர்நிழலைத் தேடியங்கே
எவ்வுணவே யாகுலும் இளைப்பகல வவருண்பார். 87

ஏற்றமுயர் வெய்யிலிலே இளைப்பெதுவும் பாராதே
ஆற்றலொடு தொழில்புரியு மன்னவர்கள் கூடியொன்ருய்
ஏற்றுணவைக் கையினிலே ஏந்திவைத்தங் குண்பதற்கு
மாற்ருன வுணவுவகை மாநிலத்தி லேதுமில்லை. 88

வெய்யிலிற் கொடுமையினுல் வெந்துவரும் வேளையிலே
உய்யும் முடலுக்கோ உற்றவெறுப் பேதுமில்லை
நெய்யும் சமமாகும் நீருணவு மொத்துவரும்
மெய்யிங் குணர்ந்தவர்கள் மேல்வருமா றியம்பிடுவார். 89

ஆற்முக் கொடுவெயிலில் அருவியென வேர்வைவர
போற்று தனைத்துடைத்துப் போரடித்த களைதீர
தோற்றுமொரு நீழலிலே தொக்கிருந்து பசிமாற
சோற்றுணவை யுண்ணுமிவர் சுவைத்துலக முய்யவுண்பார்.

நீரடித்திங் கோடிவரும் நிலைமாறு விளைவயலில்
ஏரடித்து விளைவுகண்டே இனிதாக அதைப்பேணி
போரடித்த களைநீங்கப் புசிப்பவரே புசிக்கின்றுர்
பேரடியா ருலகுய்யப் பெருஞ்சுவைகண் டுண்ணுகிறுர். 91

விண்பொழிய நிலமுழுது விதைத்துழுதே தாயசெந்நெல்
மண்பொதியும் பேரழுக்கை மாவிளைவாய் மாற்றியவர்
பண்பாகப் போரடித்த பசிதீர வுலகுய்ய
உண்பவரே யுண்ணுகிறுர் உறுசுவைதேர்ந் துண்ணுகிறுர். 92

கொட்டுமழை யோடுவெய்யில் கூடிமிகு பனிகுளிர்கள்
மட்டில்லா திடருறுத்த மதியாதே அலைவயெல்லாம்
பட்டுழன்ற தொழிலாளர் பசியாற உயர்ந்தபனந்
தட்டுவத்தி லுண்டாலும் தகுஞ்சுவையோ டுண்ணுகிறுர். 93

எஞ்சாப் பெருஞ்சோம்பற் கென்றுமிடங் கொடுத்தவர்க்குப்
பஞ்சணையும் துயரியும் பகுத்துண்ணுப் பான்மையினுல்
கஞ்சி புளிப்பாகும் கரும்புமே மிகக்கயரும்
பஞ்சா வமிர்தமுந்தான் பகையாகி நஞ்சாகும். 94

வரண்டவுயர் பாலைவன வன்மையுளப் பான்மையொடு
சுரண்டி நிதம்புசித்து சொகுசாக வாழ்பவர்பால்
திரண்டுவரும் செல்வமெல்லாம் தீவினையாய் மறுபிறப்பிற்
புரண்டோடும் அன்னவர்கள் புசிப்பனவும் நஞ்சாகும். 95

நல்லருவி எனவெள்ளம் நாடமிகு மழைபொழிய
நெல்லையுற விதைத்துழுது நேர்மையுடன் உழைப்பவர்கள்
நல்லபடி உழைக்கின்ருர் நன்ருகு மவருணவு
புல்லுருவி வாழ்வுடையார் புசிப்பதெல்லாம் நஞ்சாகும். 96

அளப்பார்பின் நற்பொதியை ஆலயத்திற் கோர்பகுதி
வழக்கமுற வகுப்பார்கள் வந்திருக்கும் சிறுவருக்கும்
இளக்கமுறு சிந்தையொடு வின்னுமுள்ள ஏழையராம்
உளக்கவலை யுடையார்க்கும் உவந்துவந்தே யீவரிவர். 97

நெல்லின் பயன்பெருகும் நிலையுடைய விந்நாளிற்
சொல்லுகறி காய்வகைகள் சோர்விலா திவர்பெறுவர்
நல்லபடி கூதிருயர் நலஞ்சேரும் பருவத்தே
வல்லவர்கள் இப்பயிர்கள் வகையாக நட்டுள்ளார். 98

### வேறு

கத்தரிச் செடியி னேடு காரமார் மிளகாய் மிக்கிங்
கொத்துயர் வெங்கா யம்சீர் உவப்புடைப் பாகல் வெண்டி
சித்தியின் மிகுபூ சினிபுகை யிலைமர வள்ளி யாதி
இத்திறமாம் பயிர் செய்வார் இவைகள்பய னீயு மின்றே. 99

### வேறு

போரடித்தும் நீங்காது பொருந்தியுறும் நென்மணியை
காரிணையும் கமக்காரர் களக்கட்டை யுறநாட்டி
ஏரிணையும் கந்துகளை இணைவாகப் பொருத்திமிகு
சீரிணையப் பொலிவளைப்பார் சிறுவர்களும் சேர்ந்திடுவார்.

சாணி பொலிமீது சற்றுமே வீழாமல்
பேணி அதையேந்தி பேர்த்துமிகு கவனமுடன்
ஆணிப் புதுப்பொன் அழகுமணி தாமெடுக்க
நாளு திவருழைக்கும் நன்மைதனை என்னென்போம். 101

மாட்டை வளைத்துவரும் மாண்பாய சிறுவரினம்
பாட்டோடு பொலிவளைப்பார் பண்டியா கும்பிமனல்
ஈட்டமுறு முயர்வே இங்குமுயர் பொலிபொலிய
நாட்டமொடு பாடிநலம் நயந்துமிகப் பொலிவளைப்பார்.

பொலியோ பொலி பொலியோ பொலி
ஆத்தத் தூத்த அளக்க முழக்கப்
பண்டியா மணலிற் பெருங்கும்பி போலே
பொலியோ பொலி பொலியோ பொலி. 103

வானம் பேணி விதைத் துவயல்
வாடி யுழைத்தோம் காளைகளே
ஆன மட்டும் ஆயபயன்
அடைய வேண்டும் காளைகளே. (பொலி) 104

வரம்பு கட்டி நிறைவுபெற
வாழ்நா ளனைத்து முழைத்தபயன்
நிரம்ப வேண்டும் காளைகளே
நென்மணி யுதிர்க பொலிபொலிக. (பொலி) 105

காத்துக் களைக ளைவநீக்கி
கண்போற் பயிரை வளர்த்தோம் நாம்
பூத்துப் பொலிக நென்மணிகள்
பொலியே பொலிபொலி காளைகளே. (பொலி) 106

மழையில் நனைந்தோம் வெய்யில் காய்ந்தோம்
மருவும் குளிரை நாம்பேணோம்
விளைவே நமக்கு முக்கியமாம்
விரைவீர் விரைவீர் காளைகளே. (பொலி) 107

உண்ண வுலகுக் குண வூட்ட
உழைப்போம் முயன்று காளைகளே
திண்ண முறவே மிக்கபயன்
சேர வேண்டும் காளைகளே. (பொலி) 108

விரைவீர் பொலிபொலி காளைகளே
வேண்டும் மணிகள் மிகவுதிர
விரைவீர் விரைவீர் காளைகளே
வீர முள்ள காளைகளே. (பொலி) 109

போற்றும் சிறுவரினம் பொருந்துமிந்தப் பாடலுடன்
ஏற்றமுற ஒலிகாட்டி எருதுகளை விரைவாக்க
காற்றை எதிர்பார்த்து களத்துநெல்லை வெளிநாடி
''தூத்தி'' மிக ''வாத்தி'' தொழுதளப்பார் நென்மணிகள்.

புளியம் விதையினிலே பொருந்துமுயர் பெருமரத்தை
தெளியோம்நாம் அப்போது தெரியுமொரு முளையிலுமே
வெளியாகா தையமுறும் விருத்தியுறு வரைபேண
தெளிவாகும் எமக்கதுவும் தேர்ந்ததனுல் நலமுறுவோம். 111

தன்னுருவம் முதற்காட்டிச் சக்கரத்தைப் பின்பிந்து
மன்னுருவம் தனதாய மகிமைநிலை தெளிவாக்கி
வுன்னுமருள் அறிவுருவாம் உற்றநிலை உணர்த்திடவே
மன்னுமருள் வல்லிபுர மாயனிவ னுற்றதுவே. 112

பத்திநெறி நாம்மேவப் பரங்கருணை யுளம்மேவ
புத்திநெறி உலகியலைப் போற்ருதே அப்பாலே
சித்திமிக நல்லான்ம ஞானமுடன் ஒத்தியலும்
உத்தமனுர் பாதம் உற்றிடலா மந்நிலையில். 113

மாயனுயர் எண்ணமெலாம் மாந்தர்தமை யுய்வித்தல்
ஆயகுறி காட்டா தருளுருவை யார்தேர்வார்
நேயமொடு பக்திதனை நிலைநாட்ட அற்புதங்கள்
ஆயபடி மேவிடுவான் அந்நிலையே யிங்குமுற்ருன். 114

அண்ணலருட் கண்ணனுயர் ஆதரவா ரிம்மாந்தர்
மெண்ணமுயர் கண்ணகைக்கு மிணைவாக வீந்துள்ளார்
அண்ணலுமிக் கண்ணகைபோல் அருணலத்தால் வானுயர்ந்த
திண்ணமுறு பத்தனெனும் தீர்வுமுள திங்கென்று. 115

பூமியிலே வாழ்வெடுத்து பொருந்துமுயர் அருட்தவத்தால்
ஆமுயர்விங் கடைந்துய்து அரியவொரு மலர்குறைய
நேமிபெறக் கண்மலரை நீத்த தியாகநல
மாமியலு மிங்குண்டே அதையின்னுர் மிகவியப்பார். 116

உற்ற தியாகவுணர் வோங்காதே யாருந்தான்
பெற்றடைய முடியாது பெருமான் திருவடியை
மற்றிவர்கள் இருபேரும் மாசிலாத் தியாகத்தால்
உற்றடைந்த தெய்வநிலை உவப்பார்கள் இங்குள்ளார். 117

வானத்தே நின்றிறங்கி வருகின்ற தேவரினம்
ஊன வுணர்வுடையார் உபாதிநிலை யுணரார்கள்
ஊனப் பிறவியிலே உற்றுழந்தோர் தியாகத்தால்
வானடைந்த நாயகரெம் வருத்தமெலா மினிதுணர்வார்.

என்பதோர் கொள்கையினுல் இணையொப்ப விருவர்களும்
நன்பதமார் கண்ணகையை நாடிநிதம் போற்றிடுவார்
வன்பகையாம் தீமையற வைகாசி விசாகமுற
அன்புடனே நல்விரதம் ஆத்தரித்திங் கேத்திடுவார். 119

காவடியும் பாற்செம்பும் கண்ணகைபாற் பேரன்பு
மேவியுறத் தாம்தாங்கி மேலாய பக்தியுடன்
பாவவினை அற்றுநிதம் பண்புமிக வாழவுயர்
தேவிபதம் போற்றிடுவார் தேர்ந்திங் கிவைவியந்தே. 120

வேறு

வானின் றினிதே தூயவருள்
வழங்கிக் காக்கு மருள்மாதே
வாரா நிலைபெற் றுயர்ந்தவுயர்
வணிக ரருட்சீர் வானமுதே
தேனிற் சிறந்த நினதருளாம்
திருநல மீந்து துலங்குமுயர்
தெய்வ மாதே கண்ணகையே
தீதிங் கெய்தா நலமருளே. 121

வேறு

என்றிவ் வாருக ஏத்துகின்ற வல்லிபுரத்
தென்றுமே தேவனரு ளியல்பிற் துலங்கியது
நன்றே இலவல்லி நாடிவந் தவதரித்திங்
கொன்றிய சீர்மகிமை உவந்துரைப்பாம் மற்றினிதே. 122

# 8. இலவல்லிச் சருக்கம்

வல்லிபுரக் குறிச்சியிலே வாழுகின்ற உழவர்களில்
நல்லோனும் நரசிங்க நாதனெனும் நல்லுழவன்
எல்லோர்க்கும் தன்தலைமை எய்துமுயர் இயல்புடையான்
பல்லோரும் பணிந்துதவப் பண்புடனே பணிபுரிந்தான். 1

திட்டமுற நன்கெண்ணித் தீமையொடு நலந்தேர்ந்திங்
கிட்டமுறச் சீர்தூக்கி ஏற்றதெனக் கண்டாலே
தொட்டிடுவா னக்கருமம் தோல்வியினு லேதேனும்
நட்டமிங்கே எய்தினும்பின் நாடாதான் கழிவிரக்கம். 2

கழிந்ததற்கிங் கிரங்குதலிற் காரியங்க ளேதுமில்லை
தெளிந்தமன முடையவிவன் தெய்வத்தின் பணியென்றே
தெளிந்ததையே யுறச்செய்வான் தீர்பயனை யுறநோக்கான்
அழிந்தாலும் சிறந்தாலும் ஆண்டவனுக் கேயதுவாம். 3

முன்னுளின் இவன்மரபு முதியவர்கள் முயன்றசொத்திங்
கின்னுளிங் கின்னவர்க்கே யினிதுடைமை ஆயதிது
தன்னாலே அழிந்ததெனும் தன்மைநெறி மேவாதே
யின்னுமின்னும் சிறப்புமிக இவற்றையிவன் பேணிநின்றான்.

சொத்தினையும் தன்மையினுற் சோம்பலுறு வார்பலபேர்
அத்துடனே செருக்குமிகு மாணவமும் தலைகாட்டும்
புத்திதடு மாறிவிடும் புகுநெறியும் மயங்கவரும்
இத்தகைமை இவர்க்கில்லை இவருழைப்பை இவருண்டார். 5

வைக்கோலைக் காப்பதற்கு வைத்துவிட்ட நாய்போல
தக்கபடி உண்ணாது தவிப்பவர்க்கும் கொடுக்காது
மிக்குழன்று வாடுநிலை மேவவிவர் இடமீயார்
சிக்கனமாய் வாழ்ந்திருந்தார் சேர்ந்தவர்க்கும் நலம்செய்வார்.

உழைப்பவர்க்குத் தொழிலீவார் ஊதியமும் பிரித்தீவார்
தழைப்பவிவர் குடும்பநலம் தக்கபடி மிகவுழைத்தார்
பிழைப்பறியார் தன்னவரும் பேணிநிதம் தம்பணியா
யுழைப்பார்கள் தொழிலாளர் உவந்தவரை யிவர்வியப்பார்.

தூயவியல் பிவருற்றார் தொழுமியல்பின் மிக்குயர்ந்தார்
ஆயவியல் பலவுற்ற அரியவுயர் வளவுநிலம்
ஏயவியல் இல்லமங்கே எப்புறமும் சோலைவளம்
நேயமுட னடியார்கள் நிதம்நிறைவ தவ்வில்லம். 8

விருந்தாக யார்வரினும் வியந்தோம்பி மிக்கவுண
வருந்தவைப்பர் ஆதரிப்பார் அன்புமொழி புகன்றுநிற்பார்
அருந்தவமிங் குற்றோரும் அடைவரிவர் அரியமனை
திருந்தவுளம் அவரையிரு சிறப்புடனே ஆதரிப்பர். 9

நாற்சார வீடதற்கு நடுவாக வுயர்முற்றம்
கோக்காலி பலசமைத்துக் கூடைவைத்து நெல்லிடுவார்
ஆக்கமுறு மக்கூடை அள்ளினும்தான் குறையாது
நீக்கமறு மறுகூடை நிறைவிதனைச் சமன்செய்யும். 10

முற்றத்தே செவ்வரத்தை முல்லையொடு மல்லிகைப்பூ
சுற்றிவர வாழைமரம் தொடர்ந்தயலே கமுகமரம்
மற்றயலே தென்னையுயர் மாதுளையோ டெலுமிச்சை
குற்றமிலா மாமரங்கள் குலவுபலா நன்மரங்கள். 11

பூவுடைய மென்வாழை பூத்தழகு காட்டிநிற்கும்
மேவுமுயர் கருவேம்பு மேலாய தோடைபல
ஆவுயரும் கொட்டில்நெறி அயலோரம் நின்றிலங்கும்
மாவிலங்கை வேம்புபுளி மற்றின்னும் தூரத்தே. 12

உயரிடப நற்தேவர் உயர்மரபு வழிவருசீர்
அயர்வறியாக் காளையுடன் அரியபசு வினங்களிவை
துயரறியா துற்றுறங்கத் தொழுவம்நன் கமைத்துள்ளார்
தயிரொடுபால் தரும்நெய்மோர் தகுதிக்கோர் குறைவில்லை.

ஆகவேதான் மனிதகுலம் அடைந்தமுத லாயசெல்வம்
ஆவினத்தை மேய்த்தங்கே அடைந்தாற்றம் கரையோரம்
மேவிவந்து பயிர்விளைக்கு மேன்மைதனை அறிந்ததுமற்
றாவினமும் உழவுந்தான் அருஞ்செல்வ மிங்காகும். 14

ஏருழவர்க் கிளங்காளை யீந்தளித்தே நற்பாலும்
சீருறவே ஈந்துசிவ வபிடேக மாவதற்குப்
பேருறுசீ ரைந்துபயன் செவ்வையுற வீவதிது
பாருறுவெண் ணீறுசெய்யப் பசுவேதான் சாணிதரும். 15

மலத்தாலே மலமகற்றும் மாண்புநல முணர்த்துபசு
நலத்தாலே குறையாது நன்கிய இன்னவரும்
நலத்தாலே தாழாது நாளுமுண வுண்டினிதே
பலத்தோடு வாழ்வதற்காம் பலநெறியும் மேற்கொண்டார்.

கன்றுகட்டிப் பால்கறத்தல் கருணைக்கிங் கிழுக்கென்றே
நன்றுகக் கன்றூட்டி நகர்ந்தபின்பே உரியபால்
சென்றிவரும் கறந்திடுவார் தீனிவகை அதற்கேற்ப
என்றுமிவர் ஈந்திடுவார் இரக்கத்திற் குறைவுபடார். 17

வண்டியொடு கலப்பைநுகம் வைப்பதற்கும் மாடாடு
கொண்டுசென்று மேய்ப்பவர்கள் குலவிநித முறைவதற்கும்
தொண்டுசெய்வார் தங்குதற்கும் தோற்றமுற வெவ்வேறாய்
அண்டிமனை வகுத்துமிக வாதரவு மவர்செய்தார். 18

சீர்பலவு முற்றவிந்த செம்மலருள் மகளாகி
ஏர்பலவும் சிறந்தோங்கு மெழிலுடையாள் இலவல்லி
பேர்பலவிங் குரியபிரான் பேரருளா லிங்கடைந்தாள்
ஆர்பலரு மிருந்தென்னே அப்பெருமை இவர்க்கேதான். 19

சீரழகு பூக்கின்ற செல்வமிகு மிவர்மனையில்
ஆரழகு மீடாகா அருளழகு மங்கை வர
பேரழகு மாயவனார் பெருங்கருணை இருந்ததிறன்
நேரழகு நல்லியலின் நிறைவுடையார் இவர்நயந்தார். 20

தக்கவரோ அன்றியிவர் தகவற்ற தன்மையரோ
மிக்கவியல் பீதிரண்டும் மேதினியோர் அறிந்துணர
எக்கணமும் பெற்றவவர் இனிதாய மக்கள்நலப்
பக்கமே மேவிடுவார் பாரிலுறு முறையிதுவே. 21

கண்மணியே உயரழகு கருவூலக் களஞ்சியமே
நண்ணிவந்த நல்லமுதே நாடுமருட் திரவியமே
புண்ணியத்தின் பொற்புருவே புனிதமிகு மணியொளியே
தண்ணியலார் பெருமானுர் தந்தவெம தருளுருவே. 22

சீலமுறு நல்லுருவே சிவனளித்த பேரருளே
மாலருளின் மாதவமே மணிவிளக்கே தாலேலோ
தாலேலோ தாலேலோ தவமணியே தாலேலோ
நீலமணி அழகுருவே நிறையருளே தாலேலோ 23

சீராரும் செந்திருவே செம்பவள நாயகியே
ஏராரு மெங்கள்குலத் தின்னமுதே திரவியமே
பேராரும் நாயகியே பிரிவறியா வுமையவளே
ஆராரோ ஆராரோ ஆரமுதே யாராரோ. 24

கண்மணியே கண்ணுறங்கு கற்கண்டே கண்ணுறங்கு
புண்ணியமே கண்ணுறங்கு பூமிநலம் நாடுமெங்கள்
கண்ணியமே கண்ணுறங்கு காராளர் குலஞ்சிறக்க
நண்ணியசீர் நாயகியே நன்றேநீ கண்ணுறங்கு. 25

என்றன்னை தாலாட்டி யெடுத்தேந்தி யரவணைத்து
நன்றவளை ஆதரித்து நலமுடைய தொட்டிலின்முன்
சென்றுநல்ல மெத்தையிட்டுச் சீராட்டிப் பாராட்டி
குன்று வருள்பெருக குதுகலமாய் உறங்கவைப்பாள். 26

நாள்தோறு மொருவண்ணம் நற்பொழுதுக் கொருவளர்ச்சி
வாழ்வேறு நலமுடைய வல்லிபுரத் தலமடைந்த
ஊழ்வேருய்ப் பிரியவருள் உடன்மேவி வாழுகின்ற
தாழ்வேது மில்லாத தவமுடையாள் இன்னுமின்னும். 27

அன்னையுடன் உயர்தந்தை அவருயிர்போ லாதரிப்ப
என்னகுறை இவளடைவாள் ஏற்றமுற வாழுகிறுள்
சொர்ணநலம் பூமிநலம் சுகநலங்க ளுடையமனை
தன்னையிவள் மிகவின்னும் தகுதிபெற அலங்கரித்தாள். 28

உடம்புபுரண் டுயர்நிலத்தி லூர்வதுபோற் தத்திமிக
திடம்பெறப்பின் தவழ்ந்தெழுந்து தள்ளாடி நடைபயின்று
நடமிடுமிந் நங்கையிவள் நன்றுபின்னர் நடைபயின்று
உடம்பழகு நலங்கூட உற்றடைந்தாள் வயதைந்து. 29

ஐந்துவய தானவுடன் அரியகுரு முன்னிலையில்
வந்தடைந்து புரட்டாதி வளர்விஜய தசமியிலே
எந்தைபிரான் ஐந்துகரத் தேந்தல்மலர்த் தாள்போற்றி
முந்தைநெறிப் படியேடு முறையாகத் தொடக்கிவைத்தார்.

உற்றவுயிர் பன்னிரண்டும் உறுமெய்கள் பதினெட்டும்
மற்றவுயிர் மெய்களிரு நூற்றினொடு பதினாறும்
பெற்றபுள்ளி ஆய்தமும் பேணுகின்ற கணக்கெண்ணும்
கற்றறிந்து வாசித்தாள் கல்விநலம் சிறந்திடவே. 31

ஏட்டிலே வல்லவிரும் பெழுத்தாணி கொண்டெழுதி
நாட்டிலுள சிறுவருடன் நன்றாகப் படித்துயர்நூல்
கேட்டுணர்ந்து முன்னேறக் கேடிலா தில்லத்தில்
வேட்டமைத்தா ருயர்குருவை வியந்துநயந் துயர்தந்தை. 32

பேரறிவும் நயப்புணர்வும் பேரருள்சேர் பக்திமைக்காம்
நேரறிவும் நெறியுணர்வும் நிகழ்த்தவல்ல இலக்கியநூல்
தேரறிவு பெற்றினிதே திருத்தமுறு மிலக்கணநூல்
சேரறிவு மிவளெய்திச் சிறப்புடனே கற்கின்றாள். 33

வீட்டிற்கு வருகின்ற விருந்தினரோ டடியவர்கள்
கூட்டத்தில் அநுபவநற் குறிப்புணர்வும் கேள்விநெறித்
தேட்டமுடை யுத்தமரும் சேர்ந்திருப்ப ரவர்தொடர்பிற்
கேட்டறிந்து சந்தேகம் கேடின்றி நீக்கிநின்றாள். 34

கற்றகல்வி நன்குயரக் காரிகையும் நன்குணர்ந்து
பெற்றுவிட்டாள் நற்பருவம் பேராது விட்டுடனே
உற்றிருந்து நல்லன்னைக் குதவிவரு மோய்வினிலே
கற்றறிந்து நயந்திடுவாள் கவின்மிகுந்த பாரதத்தை. 35

பார்த்தனுக்குச் சாரதியாய் பாரதத்தின் சூத்திரியாய்
நேர்த்தியுற இணையாதும் நீங்குவது மின்றாக
கீர்த்திமிகு நிலைமையிலே கேட்டினையும் நன்மையையும்
தீர்த்தொன்றும் படியருளித் தீர்த்தநிலை நயந்திட்டான். 36

உற்றநீ ஓர்கருவி உணர்த்துபவன் நானேதான்
குற்றமோ நன்றோமோ குறித்ததனை நீசிறிதும்
பற்றாதே பற்றினையேற் பாதகமா யதுமுடியும்
மற்றதனை யெனக்காக்கி மாசின்றிப் பணிநீசெய். 37

மாயை யியங்கிடுமுன் மாசுவினை துயரீயும்
நேயமோ டின்பதுன்ப நிலைமையைநீ பற்றாதே
ஆயவா றொழுகுவையே லாம்பயன்கள் மிகவுண்டு
தோயாதே யுடலோடு தொடர்புறுவா யென்னோடு. 38

என்றெல்லாம் கண்ணன் இயம்புவதை வாசித்து
நன்றாய போதனையே யானாலும் நல்விளக்கம்
குன்றாது பெறவேண்டிக் குருவனைய அடியவரைச்
சென்று வினவுகிறாள் சீர்பெறவே யவருரைப்பார். 39

சதையோடு புளியங்காய் சாருமதன் மேற்றோல்பின்
விதையோடு சதைசேர விளைந்துபழ மாகுகையில்
சதைவேறும் ஓடாகும் சார்புடைய மேற்றோலும்
இதையொப்ப உடலைவிட் டுயிர்பரத்தோ டொன்றிடலாம்.

உண்மையிதை யுணராதங் குறுதிகெட்டுத் தடுமாறி
திண்மைபெறு முடலுடனே சேரநின்று நிலைதளர
வண்மையொடு கூறுகிறார் வகுத்தவுடல் நீயல்ல
உண்மையறி வாயவென்னை உற்றுணர்ந்து பற்றிவிடு. 41

என்னுடனே நீயொத்தால் எதுவுமெந்தன் பொறுப்பாகும்
மன்னுடனே மார்க்கண்டன் மருவிநிற்ப வோரியமன்
பின்னமிலா வெற்றுடலைப் பேராது சிவன்பாதம்
தன்னுடனே சேர்ந்தவனைத் தான்மருவி யிடறுற்றான். 42

என்றெல்லாம் ஞானத்தால் இணைந்துபரம் பொருளுடனே
நின்றுடலைச் சேராது நிகழ்வாழ்வு முத்திநிலை
யொன்றிநீ செய்வதெலாம் உயர்பொருட்கே யுரித்தாகும்
நன்றிதனை யேவிளக்கி நாடுகநீ போரென்றார். 43

என்றெல்லாம் அடியர்மிக இனிதாக விளக்கிடவே
நன்றாகக் காய்ந்தமரம் நன்றுதீ பற்றுதல்போல்
குன்றாத முற்பிறப்பிற் கொண்டதவப் பேற்றினால்
இன்றிதனை நன்குணர்ந்தாள் இளவயது நங்கையிவள். 44

எல்லாமே மாயைசெயல் இன்பதுன்பம் வினைவிளைவு
பொல்லாப்பு மல்லனவும் பொருந்துவதிவ் வுடலாகும்
நல்லானோ டுற்றவன்நான் எதுவுமெனைச் சாராதென்
றல்லுமுயர் நற்பகலும் அகன்றுடலோ டிவள்பயின்றாள்.

தண்ணீரில் வாழ்ந்தாலும் தாமரையின் தூயவிலை
தண்ணீரோ டொட்டாத தன்மையிலே உலகியலின்
நண்ணியிருந் துறைந்தாலும் நயந்ததனோ டொட்டாதிங்
கெண்ணமெலாம் பரம்பொருளோ டியையவிவள் வாழ்கின்றாள்

வாழுகின்ற விந்நாளில் வங்காளக் குடாக்கடலிற்
சூழுகின்ற சிங்கைநகர் துறையாய வரங்கத்தில்
மூளுகின்ற பேரருளின் முறைமையினால் மீளுகி
ஆளுகின்ற மாமாயன் அடைந்தசெய லினியுரைப்பாம். 47

வரக்கிருபை பெற்றுயர்ந்த வல்லமையோ டுற்றுவுயர்
அரக்கரிலே மாகொடிய னவனும் இரணியன்செய்
தரக்குறைவாம் பண்பினாற் றழுவுகின்ற அநீதியினால்
இரக்கமுறற் காம்நிலைமை எய்தினர் தேவரெல்லாம். 48

வான்சுமந்த தேவரிவர் வளமிருந்த கற்பகப்பூந்
தேன்சுமந்த தார்மார்பின் செல்வரிவர் கள்ளுடனே
மீன்சுமக்க இவன் விதித்தான் மேவாரே லடித்துதைத்தான்
ஊன்சுமந்த விவன்செயலால் உறுதுயரம் நீங்குதற்கு. 49

கங்கைமுடி மீதணிந்து கருணைவளர் நாயகியை
பங்கினாற வைத்தபிரான் பதம்பணிந்து தங்கள்குறை
இங்கிதமாய் உரைத்திரந்தார் இதுநீங்க நல்லிரட்சைக்
கங்கணங்க ளவரீந்தார் கவலையற்றார் தேவரெலாம் 50

கங்கணத்தை அணிந்துதங்கள் கவலைநிலை தவிர்ந்தவகை
அங்கறிந்தா னவ்வரக்கன் அவற்றையெல்லாம்கவர்ந்தெடுத்து
பொங்கிவரு மலைகடலிற் போடவவன் பணித்ததனால்
தங்கள்பணி ஏவலரும் தாம்மேவி அதுசெய்தார். 51

மீண்டுமிந்தத் தேவகுலம் மிக்குவரும் வேதனையால்
ஆண்டவன்பாற் சென்றடைந்தங் கடிபரவிக் குறையிரந்து
வேண்டி டவிங்கன்னவரும் விட்டுணுவாம் உருத்தாங்கி
மீண்டதனை எடுப்பதற்கு மீனாகிக் கடல்புகுந்தார். 52

தேவர்நிலை ஈதாக தேவனவர்க் கிரங்கிவரு
மாவதோர் வேளையிலே ஆயனார் தம்மிடத்தின்
மேவுமருட் பத்திகொண்ட மேலாய ஓரடியார்
ஆவுயர்சீர் இலவல்லி அருமனையை வந்தடைந்தார். 53

உத்தமராம் அன்னவர்பால் உளம்மேவ நல்லுணர்வின்
சித்திமிகத் திருவருளின் திறமகிமை யுசாவுகையில்
இத்தலத்தின் நலன்கருதி எழின்மாயன் எடுத்தபிறப்
பத்தனையும் விரிவாக அவருரைத்தார் பக்திமிக. 54

தேவகியின் மைந்தனும் திருநிலைமை மேவியவன்
ஆவியலின் நலன்பேணும் அசோதைமக ளாகியருள்
மேவியசீர் இவள்வியந்தாள் மேன்மேலும் அவளுளத்தை
பூவியலார் அசோதைநிலை பொருந்திமகிழ் வீந்ததன்றே. 55

என்னநிலை எடுத்திங்கே எமையாள வேண்டுமோமற்
றன்னநிலைப் பிறப்பெடுத்தே அருளியெமை ஆளுவதே
தன்னிகரில் பெருமானார் தனிப்பெருமை இங்காகும்
இந்நிலையிற் குழந்தைநிலை இவளைமிக வீர்த்ததுவே. 56

ஞானநிலைப் பட்டாலும் நாடுபிரா ரத்துவத்திற்
கானவுடல் வாழ்வினிலே அலைவதுவும் மீண்டுமிக
ஈனமிலா திணைவதுவு மிங்கியற்கை முன்னுளில்
ஆனவடு தான்புலனுல் ஆகியதிங் கிந்நாளில். 57

ஆயர்குல திலகனுயர் அழகுருவின் நற்குழந்தை
நேயநிறை நிலையெய்தி நிலவுலக முய்யவந்தா
னுயர்குல நன்மாது அசோதைமடி மேற்தவழ்ந்த
தூயநிலை தனையுன்னித் தொழுதுமனம் குளிர்கின்ருள். 58

கண்ணழகும் மூக்கழகும் கன்னத்தின் கவினழகும்
திண்ணமுறு முடலழகும் திருவார்சீர் மார்பழகும்
பண்ணழகு மொழிபேசும் பாவையிவள் சித்திரித்தே
எண்ணியழ கவையெல்லா மெண்ணியெண்ணி மகிழுகிருள்.

காலிரண்டும் மேலுதைத்து கைமலர்கள் பொத்தியுயர்
சீலமுறு வாயிதழைச் சிறப்பாக வேகுவித்து
கோலமுறு முகத்தழகு குலவவவன் குதுகலித்தல்
பாலநிலைப் பண்பிவைகள் பாவைநயந் தின்புற்ருள். 60

எண்ணமெலாம் கோபாலன் எடுத்தவுயர் குழந்தையுரு
வண்ணமே யாயதுயர் வாழ்வி னசோதையுற்ற
புண்ணியமே புண்ணியமாம் புனிதனவன் மாமடிமேல்
நண்ணிவர என்ன தவம் நாடினளோ நாமறியோம். 61

தன்னுயிரைக் கண்ணனுக்கே தரவல்ல தாய்மகிமை
அன்னவளிங் குற்றுவிட்டாள் அவள்பெருமை நிதம் லாழ்க
மன்னுலகுக் கிவனன்னை மற்றவனுக் கவளன்னை
என்னேமற் றவள்பெருமை யென்றென்றே வியக்கின்ருள். 62

என்னவொரு கருமமெல்லாம் எங்கிருந்து செய்தாலும்
தன்னுடைய தாயுளத்தை தகுந்தபடி அவன்பாலே
மன்னுமுயர் நிலைமையிலே மற்றங்கே அவள்செய்வாள்
இந்நிலையிற் தேவனையிங் கிடைவிடா தெவர்நினைப்பார். 63

இத்தகைய எண்ணத்தில் இவள்மூழ்கித் தனையிழந்து
தத்தளித்தாள் கருமத்திற் தடுமாறும் நிலையுற்றாள்
சித்தத்தை உலகியலிற் திருப்பவவட் காகவில்லை
ஒத்துவுணர்விங் குற்றுவிட்டாள் உறும்பருவ மானதிங்கே.

தேவர்களின் கங்கணத்தைத் திருக்கடலின் மீட்டெடுத்து
மேவநிலப் பரப்பிலிட்டு மேலாய மாமாயன்
ஆவுயர்சீர் வல்லிபுர வழகுவல்லி யிலவல்லி
பூவுலகி லன்னைநிலை பொருந்தநட மாடுகின்றான். 65

வானவரின் துயர்தீர்த்த வள்ளலிங்கே மீண்டுமுயர்
மீனமாய் வந்தடைந்தான் மேதினியில் வாழ்வோர்தம்
ஊனத்தை வளர்க்கின்ற உலகுநிறை மீனல்ல
தேனொத்த வருள்வளர்க்கும் திருவுடைய மீனிதுவாம். 66

உற்றபுலால் மணக்கின்ற உலகியலார் மீனல்ல
கற்றவரும் கேட்டவரும் கண்டறியா வுத்தமமீன்
நற்றவத்தாற் பத்திவலை நாளெல்லா முறவிரித்துப்
பற்றவல்ல பண்புமீன் பரங்கருணை யுருவமீன். 67

பொங்கியெழுந் தலைமோதப் பொருந்தியதங் கிந்தமீன்
வங்கமிகு கடலுக்கோர் வளந்தரவிங் குற்றமீன்
தங்கணமாய் வலையுமுளக் கவலையெலாம் தீர்க்குமீன்
துங்கநிற வொளிவீசித் தவத்தழகு காட்டும்மீன். 68

வள்ளத்தை மோதியது வாலாலே தானடித்து
எள்ளவரு நிலைமையிலே எளிதிலதைப் புரட்டியது
கொள்ளமறு மீன்பிடிக்கும் குலவுவலை யறுத்ததது
துள்ளிமேல் எழுந்துவிழும் தொடர்ந்தெங்கும் திரிந்துலவும்.

இத்திறத்தாற் கடல்வினைஞ ரிடரெய்தி யதைப்பிடிக்க
புத்தியொடு தந்திரமும் பொருந்தமிக முயன்றிட்டார்
பத்திவலை யிட்டன்றி பரவுவலை தந்திரங்கொள்
எத்திறத்து வலையிட்டும் இதைப்பிடிக்க முடியாது. 70

சூரியநல் ஒளியினிலே சுந்தரமாய் மினுங்குகின்ற
வீரியமார் பொன்னழகு விளங்குமுயர் அருண்மீனை
காரியத்தின் பயனெல்லாம் கருத்துடனே தமதாக்கும்
சீரியரிங் கல்லாதார் சேரவணைந் துறுவாரோ. 71

அறிவுருவாம் உலகிறந்த அருட்சோதி அருவமொடு
செறிவுடை அருவுருவச் செந்நிலைமை யதுமாறி
பிறிவிலா உருவநிலை பெற்றிங்கு வரக்கண்ட
செறிவுடைய உலகியலிற் சேர்ந்தவிவர் நலம்வாழ்க. 72

பிடிக்கமுடி யாதிதனைப் பேதலித்து நின்றாலும்
அடிக்கவிவர் துணிந்துநிதம் அலைந்தோய்ந்து நின்றாலும்
நடிக்குமிந்த நாடகத்தின் நயமறிய வரும்வேளை
துடிக்குமுளப் பண்புடனே தொழுநிலைமை யிவரடைந்தார்.

ஞானக்கண் கொண்டன்றி நாடரிய வெம்பெருமான்
மீனக்கண் அழகொழுக மேலாய தலம்விளங்க
ஊனக்கண் உடையவிவர் உற்றிங்கே காணவந்த
வானக்கண் வளர்கருணை வல்லிபுர முற்றதன்றே. 74

ஒருநாளிங் கிருநாளோ ஒத்தபடி மூன்றுநாள்
திருநாளாய் இன்னவர்க்குத் தெரியாத வாறுற்ற
பெருமாளாய் நடம்புரியப் பேதலித்தா ரிங்குள்ளார்
வருநாளில் இலவல்லி வரமோங்கும் நிலையறியார். 75

மூன்றும்முன் இரவினிலே முகிழ்த்தவுயர் நித்திரையிற்
தோன்றாத் துணையாகித் தொக்கிருக்கும் எந்தைபிரான்
தோன்றியே நற்கனவிற் தொழுமுளமார் இலவல்லிக்
கான்ற நலமளிக்க அருளுகின்றார் நிலைமையெல்லாம். 76

துள்ளியவள் குதித்தெழுந்தாள் தூயவனைக் காணவில்லை
அள்ளியர வணைக்குமுயர் அசோதைமகன், அங்கில்லை
பள்ளிதுயில் பாம்பணைசேர் பரந்தாமன் அங்கில்லை
உள்ளியுணர்ந் தாள்பின்னர் உற்றதுவோர் கனவென்றே. 77

ஆயவுயர் பருவமிங்கே அணைந்ததுமுன் நாளங்கே
மேயதவப் பயனுலே மேவுமிடர் தீர்த்திவளைத்
தூயவளாம் நிலையருளித் தொடர்ந்துமலர்ப் பதந்தழுவற்
காயபணி மேற்கொண்டான் அவளைவரப் பணித்திட்டான்.

## வேறு

இவ்வகை யாக வந்தங் கெம்பிரா னழைத்த சேதி
கொவ்வைசேர் கனியை யொத்த குலவுசீர் இதழ்கொள் நங்கை
செவ்வையாய் அன்னை தந்தை சீரடி போற்றிக் கூறி
எவ்வகை நிலையி லேனும் என்னையங் கனுப்பீ ரென்ன. 79

நங்கைநற் பருவ மெய்தின் நாட்டிலே யுறும்வ ழக்கம்
எங்குமே போகா தங்கே இருப்பதே யாகு மிங்கே
பங்கய வதனன் அந்தப் பரந்தாம னழைத்த தாலே
சங்கட நிலையுட் பட்டார் தாயொடு தந்தை யன்றே. 80

தந்தைதாய் சொல்லைக் கேட்கும் தகுதியி லிவளின் றில்லை
தந்தைக்கும் தந்தை யாகித் தானேயிங் கனைத்து மாய
தந்தைக்கு மெட்டாத் தூய சேட்சியன் வந்த ழைப்ப
நிந்தைநாம் செய்து மீறி நினைவிழந் துழல லாமோ. 81

ஆவதோர் கரும மெண்ணி யவள்நிலை மாறு னாகப்
போவதற் கனும தித்தார் பொருந்துமூர் மாத ரெல்லாம்
மேவிய சேதி கேட்டு மிகவிழைந் தங்கு சென்றார்
தேவிஇல வல்லி யன்னர் சேரவே யங்கு சென்றாள், 82

வானமாய்க் கடலாய்த் தூய வையமா யகில மெங்கும்
தானுமாய்த் தனியு மாகித் தரிக்கின்ற சோதி நாதன்
மீனமா யின்னு மின்னு மேலெழுந் தார்ப்ப ரித்தங்
கீனமாய் எதிர்ப்போர் தம்மை எதிர்த்துநன் குலாவி னனே

அற்புத மாய மீனய் அங்குளோர் யாரும் காண
விற்பன ஞான மெய்தி விளங்கில வல்லி மாது
சொற்பதம் கடந்து நிற்கும் சூத்திர தாரி யிங்கே
நற்பத மளிக்க வந்த நலந்தெரிந் துணர்ந்து நின்றாள். 84

முந்திய பிறப்பின் சேதி முற்றுமே மறந்து விட்டாள்
புந்தியி லசோதை மாது பொருந்திய மகிமை நன்மை
வந்துவந் தலையாய் மோத வருமலை யதுவும் மோத
சிந்தையின் அன்பு மேவி திருவரு ளணைய நின்ருள். 85

## வேறு

வந்துமிகு மக்களெலா மங்குசூழ
வளமிகுநற் கடலிற் துள்ளி
அந்தமிலா தெழுவதுவும் அணைந்தணைந்து
வீழ்வதுமாய் மாறி மாறி
நந்தனருட் கோபாலன் நாடெல்லாம்
சூழவுறக் காண நன்றே
பந்தமுற வணைவதுவும் பாய்ந்தோடி
வீழ்வதுமாய் நின்ரு னன்றே. 86

எத்தனையோ பலமுறைகள் எழுவதும்பின்
வீழ்வதுமாய் மீண்டு மீண்டு
புத்தழகு காட்டுகின்ற பொன்மயமாய்
நின்றங்கே சோதி வீசி
வித்தைபல செய்கின்ருன் விரைகின்ரு
ரவர்பிடித்துத் தப்பி யின்னுன்
ஒத்தபடி மீண்டும்மீண் டோடுகின்ருன்
என்செய்வார் நாணி நின்ருர். 87

கையிரண்டும் குவித்துமிகு கனவினிலே
உருக்காட்டி நின்று ரைத்த
மெய்யுயிராய் யுயிர்க்குயிராம் மேலவன்தன்
உயர்வாய வார்த்தை யெண்ணி
பொய்யுணர்வு மிக்கவர்கள் போலவன்றி
புனிதமொடு போற்றி நின்றே
ஐயவுந்தன் திருவிளையாட் டழகுகாண
அழைத்தநலம் வாழ்க வென்ருள். 88

மாயவனிம் முறையவனை மருவிவந்து
வீழும்போ திருகை நீட்டி
நேயமுடன் நன்றேந்த நித்தியனும்
நிறைவுடனே மேவி யுற்ற
தாயவளாம் தன்மைபெறத் தானுயர்சீர்க்
குழந்தையுரு வடையக் கண்டிங்
காயவளும் அதிசயித்தக் குழந்தைதனை
இருந்துமடித் தலத்த ணைத்தாள். 89

எல்லாரும் அதிசயித்தார் இன்பமொடு
குழந்தைதனைச் சூழ வந்து
நல்லவன்நீ இங்குபலர் நாமிருக்க
நாடியுனை யடைந்தான் நீசெய்
வல்லதவம் வாழ்கவென வாழ்த்தியந்த
வனிதைபால் மேவு மிந்த
சொல்லவொணு அற்புதத்தைச் சுவைக்கின்றூர்
உண்மைநிலை தேரா ரன்றே. 90

### வேறு

அன்னையிவ ளாகிவிட்டாள் அசோதைநல மிவளடைந்தாள்
தன்னையிவ ளிழந்துவிட்டாள் தழுவிநின்றே குழந்தைதனை
முன்னையிவள் வடுத்தீர்த்தாள் முத்திநிலைக் காயநெறி
தன்னையிவர் மருவிவிட்டாள் தாயாளுள் மாயனுக்கும். 91

மாம்பழம்போற் கன்னமுயர் மலர்விழியிற் சோதியொளி
தேம்பாத திருவுருவம் திகழுமுகத் துயரழகு
பாம்பினுயர் படுக்கைவிட்டு பாவையுயர் சாபமற
பூம்பாவை இவள்மடியிற் பொலிகின்றூன் கோபாலன். 92

மேலெடுத்துக் கரமிரண்டும் மேவியுறப் பிசைந்தழகு
காலெடுத்து மேலுதைத்து கனியதரம் தான்குவித்து
ஆலவிஷ நாகமிட்ட அருஞ்சாபம் நீக்கியிவள்
சீலநல மெய்திடவே சேரவந்தான் கோபாலன். 93

புன்னகையின் சீருடனே பொலிந்திலங்கு முகத்தழகு
நன்னலமார் இலவல்லி நற்றவத்தை வியந்தேத்தி
பன்னகத்தின் பாயலுளான் பாவையிவள் சாபமற
இன்னருளோ டிங்குற்ருன் எழில்மிகுசீர்க் கோபாலன். 94

சங்குடனே சக்கரநற் சார்புகுறி யழகுமிக
மங்கலமாய் மாமாயன் மங்கைதவ நலஞ்சிறப்ப
பொங்கரவை நீத்தின்னோர் பொங்கரவின் சாபமற
வங்கவுயர் கடல்மேவி வந்துற்ருன் கோபாலன். 95

எல்லோரும் வியப்படைய இங்குற்ற கோபாலன்
மெல்லியலின் மடியினிலே மேவித்தன் கைபிசைந்து
நல்லவிரு பதமலரை நன்ருக வேயுதைத்துச்
செல்வச் சிரிப்பொழுகச் சிங்காரக் கோலமிட்டான். 96

இருகண்ணும் நீர்சொரிய எம்பிரான் அதிசயங்கண்
டுருகியுளம் மிகக்குளிர உவகையொடு தன்மடிமேல்
வருகண்ணன் தனதுயர்சீர் வடிவழகை மிகநோக்கி
பெருகுமுயர் ஆனந்தப் பேறுற்றிங் கிருக்கவிவள். 97

மாயவனூர் மீண்டங்கே மருவியே மீனுருவாய்
நேயமுடன் மாறவுடன் நின்றவர்கள் அதிசயித்தார்
ஆயநங்கை அவளுந்தா னதிசயித்தா ளதற்கிடையில்
ஏயமீன் துள்ளிவியந் தேகியதே அவளுமுடன். 98

எழுந்தோடி அதன்பின்பே எம்பெருமா னென்றென்றே
விழுந்தோடி எழுந்துமிக விரைந்தோடு மீன்பின்னே
தொழுந்தகவிற் செல்கின்ருள் துயரடைந்தாள் கடலினுள்ளே
விழுந்தகவங் குறுமென்ற விளப்பமுமற் ருேடுகிருன். 99

## வேறு

கடலென்றும் எண்ணாதே காரிகையாள்
விரைந்துமிக வோட வங்கே
திடமுறவே பின்விரைந்து திருவுடைய
வந்தணனார் முன்ம றித்து
உடன்கொண்ட சக்கரத்தின் ஒளியழகும்
உருநலமும் மங்கை காண
நடனமிதிங் கறியாய்நீ நாயகியுன்
சாபமற வுற்ற தென்றார். 100

தாவுமுயர் மீனுருவம் தனையணைக்க
நாடமிக வந்து முன்னே
மேவுமுயர் அந்தணரை மிகவெறுத்துப்
பின்புணர்ந்து நோக்கு கின்றாள்
ஆவி யனையவுயர் சக்கரத்தின்
அழகுநலம் வியந்து போற்றி
நாவியலில் உயர்நாம நலம்பெறுக
நாரா யணாயநம வென்றாள். 101

காய்ந்தபெரு விறகினிலே கடிதுநற்தீ
பற்றிமிகுந் தெரிந்திடல் போல்
வாய்ந்தபெரும் தவப்பண்பால் இன்னுமிக்க
பருவநல முற்ற நங்கை
தோய்ந்தருளின் மிகமூழ்கி தொக்கிருந்த
நல்லுணர்வாம் நாரா யணச்சீர்
பாய்ந்தெங்கும் பரவிடவே பரமநிலை
பட்டுயர்வி னோங்கி நின்றாள். 102

உண்மைநிலை தேர்ந்துணர்ந்தா ளுளமகிழ்ந்தாள்
உச்சிமிசை இருகை கூப்பி
திண்மையுற வுயர்நாமம் செப்பிமிகு
திருவருளின் மேவி வந்த
புண்ணியராம் முனிவருயர் புனிதமலர்
பதம்போற்றிச் சக்க ரத்தை
நண்பியுற்றங் கவரீய நயந்துபோற்றி
நங்கைமகிழ்ந் தன்போ டேற்றாள். 103

கூறுகின்றார் மாமபிபர் கொடுத்துயர்வார்
சக்கரத்தை மிகவி யந்தே
வேருகா துலகுயிராய் விளங்குமுயர்
வித்தகனிச் சக்க ரத்தின்
பேறுமிகு முருவானுன் பிரியாதே
நின்றருள்வான் துயர மெல்லாம்
மாறிடுநீ திருவிளையாட் டருண்மகிமை
இதுவுனக்காய் நிகழ்ந்த திங்கே 104

உன்னுடைய வுளம்பதிந்தங் குற்றவடு
முற்றுக வகன்ற தின்றே
மன்னுமுயர் முத்திநிலை மரபுவழி
முயல்வதற்காம் தகுதி யுற்ருய்
உன்னுடனே யுற்றவரு முலகினரும்
நலம்பெறவிச் சக்க ரத்தை
இன்னருளோங் கரியதலத் திதனையுயர்
முறையிற்றா பித்துத வென்ருர். 105

சக்கரத்தைப் பெற்றவிவள் சாருமதன்
அழகுநலத் தீடு பட்டே
மிக்கிளைய நோக்கியவள் மீளவருள்
மேலவரைக் காண வில்லை
தக்கபடி நாகமொன்று தகுமேட்டில்
நின்றதுதன் படம் விரித்த
தக்காட்சி பிறர்காட்ட அவளுமதை
நோக்கிமிக வியப்ப டைந்தாள். 106

சிங்கைநகர் துறையிணைந்த திருக்கடலும்
சேர்சிங்கை நிலப்ப ரப்பும்
இங்கடைந்த பெருமைநல மேதென்போம்
எம்பெருமான் நடன மிட்ட
மங்கலமிங் குற்றதவன் மலர்பதமும்
பட்டதிந்த மகிமை யூரார்
தங்களைநன் மாயவனுர் தகும்பணிக்குத்
தகுந்தபடி அர்ப்ப ணித்தார். 107

தேவவருட் பொலிகின்ற சீருடைய
சக்கரமாஞ் சுதர்ச னத்தை
மேவுதன தூர்நாடி மேன்மையுறக்
கொண்டேக நினைந்து வல்லி
நீவிரெல்லா மிக்கவுயர் நிறையன்பின்
இணைந்துமிக வந்து நின்றே
தாபிக்க உதவிடுவீர் தரும்பூசை
செய்யவும்நீர் உதவீ ரென்ன. 108

மாயவனுர் நடம்பயின்ற மகிமைமிகு
மாகடலாம் திருவ ரங்கத்
தாயவருட் கரையோரத் தணைந்துவாழ்ந்
தரும்பேறிங் குற்ற மக்கள்
நேயமுடன் நாடிநலம் நிறையவுயர்
பல்லக்கொன் ருக்கி நன்றே
தூயவுயர் நங்கையொடு தொழுதேந்து
சக்கரமும் சுமந்து சென்ருர். 109

ஆதரவு தந்துலகை யாளவல்ல
அருண்மிகுசீர்ச் சக்க ரத்தை
மாதரசி தாங்கிமிகு மகிழ்வினெடு
மங்கினிது வீற்றி ருப்பப்
போதரவங் குற்ருர்கள் புனிதமுறச்
சுமந்துவரும் வேளை யங்கே
பாதமிகச் சூடேறிப் பதைப்படைந்து
தாகமிக விளைப்பு மோங்க. 110

நீர்பருக வேண்டியுயர் நிறைகொன்றை
மரநிழலி லிறக்கி வைத்தங்
கேர்பரவு வல்லிபுரத் தெல்லையுற்ற
இடத்தேநீர் பருகி மீண்டு
சீர்பரவு சக்கரத்தைத் திருக்கரங்கொள்
நங்கையொடு தூக்கும் போது
பார்பரவு நாயகனுர் கருணைபோலும்
பல்லக்கங் கசைய வில்லை. 111

ஆலயத்திற் குகந்தவிட மதுவேயாக
யாவர்களு மூணர்ந்து கொண்டார்
சீலமொடு பசுக்களெலாம் சேரவந்து
தினமுமிகத் தங்கு கின்ற
சாலைநல முடையவுயர் தலம்வியந்து
சார்புடைய மனைவ குத்தங்
காலயமும் வகுத்தருளித் தாபித்தே
ஆம்பணிகள் அனைத்து முற்றார். 112

## வேறு

ஏதேதோ அறியோநாம் அங்குவந்த
இனியவர்கள் கூட்டத்தில் ஆகமத்தி
லோதுமுறை நெறிதேர்ந்த அன்பருந்தான்
உடன்வந்தார் தாபிக்க உதவிசெய்தார்
சாதகமாய்த் தாபித்தே முழுமண்டலநற்
சார்பினிலே உயர்பூசை அபிடேகங்கள்
ஆதரவாய் வல்லியூர் அன்பருக்
கயலவரும் உதவிடநன் கியற்றினரே. 113

## வேறு

நாகத்தா லுற்றபெரும் சாபம் தீர்ந்தே
நங்கைநல மெய்திவிட்டாள் தாய்மை யன்புச்
தாகமுமே யற்றதுளப் பதிவும் தீர்ந்தாள்
தவந்தழுவி வாழ்ந்தவுயர் மாண்பி னாலே
பாகமுற்றாள் மாயவனார் பதமு றற்காம்
பண்புற்றாள் உலகிலுள்ள மக்க ளுக்கிங்
காயவுயர் சுதர்சனமும் தாபித் தன்பாய்
ஆலயமும் துலங்கநலம் செய்திட் டாளே. 114

தூயவுயர் கண்ணாடி மீது மிக்க
சூரியனின் ஒளிபட்டு மீளும் போதில்
ஆயகதிர்ச் சூட்டிலும்தான் அதிக மாக
அனல்வீசும் பான்மையுறு தன்மை போல
தேயமொடிவ் வுலகுநிறை யருளு மங்கே
நிமலனார் அடியரிடம் படிந்து மீளின்
ஆயவதன் மகிமைநல மதிக ரிக்கும்
அன்புடையாள் நிலையுமதிங் காய தன்றே. 115

ஞானமொடு பிரபத்தி மார்க்கம் நாடி
நன்றியங்கும் அடியார்கள் உலகி லென்றும்
தானமொடு தவம்நிறைந்து மக்க ளுய்ய
தகுந்தபடி யுளம்மகிழ்த்து வகுக்கும் கோயில்
வானவரும் வந்துபணி வளமு டைத்து
வரமிகுந்த வல்லிபுரத் தலமு மிங்கே
ஆனவுயர் தன்மையினு லருண் மிகுந்த
ஆலயமாய் வளர்ந்தருளி னிலங்கு தன்றே. 116

ஆலயத்தைத் தாபித்திங் ககலு மட்டும்
ஆனபணி இவள்செய்தாள் உலகி னெட்டாச்
சீலநல முயர்வாழ்விங் குற்றி ருத்தே
சிறந்தபணி மிகச்செய்தாள் செய்கை யெல்லாம்
கோலமுறு முலகியலுக் கொத் திருப்ப
கொள்கையுயர் குறிப்பெல்லாம் அருண் மிகுந்த
நீலமணி வண்ணனுக்கே ஆக்கி யிங்கே
நித்தியமும் வாழ்ந்துபத மவள டைந்தாள். 117

இலங்கையுறு நன்மக்கள் இன்னு முற்ற
இந்தியநா டுடையமக்கள் அவர்க ளெல்லாம்
நலங்கிளர்சீ ரன்பினெடு வந்து போற்றும்
நலமிகுசீர் அருணலமிங் கின்னு மின்னும்
துலங்கியது இத்தலத்தைப் பேணி நித்தம்
தொண்டுசெய்யும் அன்பருடை நிலைமை யோடிங்
கிலங்குகின்ற ஆலயத்தின் வளர்ச்சி மிக்க
இயல்பினையும் போற்றிவியந் தினியு ரைப்பாம்.

# 9. ஆலயச் சருக்கம்

ஆரண முதல்வ ளுகி அறிவினுக் கறிவு மாகி
காரண மூர்த்தி யாகிக் கருணையின் மிக்க தேவன்
நாரண மூர்த்தி தூய நாடக மாடி யீந்தார்
பூரண வருளின் மிக்குப் பொலியுமிச் சக்க ரத்தை. 1

தூயநல் ஆடி மீது தோன்றிநன் றிலங்கி மீளும்
ஏயநற் கிரண மிங்கே எரியினை யூட்ட வல்ல
வாயின கதிருக் கந்த ஆற்றலிங் காவ தில்லை
மேயநல் அடியார் மீது மேவிடு மருளு மீதே. 2

எங்குமே பரந்து நிற்கும் எம்பிரான் அருளின் தோற்றம்
அங்கெலாம் நோக்கமாட்டோம் ஆலயந் தன்னிற் காண்போம்
இங்கிதன் மேலா யின்னும் எழில்மிகு மான்ம சோதி
பொங்கிடும் புனித வாழ்விற் பொற்புறக் காண்போ மன்றே.

தூயவ ளாய வல்லி தொடர்புடைப் பாம்பின் சாபம்
ஏயவா றகலப் பெற்றே இனியநற் தாயைப் போல
ஆயனூர் குழந்தை யாக ஆதரித் ததனைப் பேணி
மேயநன் நினைவு நீங்கி மேவினுள் முத்தி மார்க்கம். 4

நலங்கிளர் கரண மெல்லாம் நாரண மயமா யுற்றிந்
நிலங்கிளர் தோற்ற மெல்லா நிறையருட் தோற்றமாகி
இலங்கிடக் கண்டு போற்றி எம்பிரா னினைவி னுற்றித்
தலங்கிளர்ந்தோங்க மிக்க தகுதியிற் பணிமேற் கொண்டாள்.

அருணனின் தூய சோதி ஆடியிற் பட்டு மீளின்
இருணலம் நீங்கும் தூய எரியுமங் குதய மாகும்
கருணையின் நலத்தி னலே காரிகை இவளு முய்ந்தாள்
அருணல மோங்கி யிந்த ஆலய முயர்ந்த தன்றே. 6

யோகியர் அடியார் தூய ஒளியருட் பட்ட வன்பர்
ஆகியோர் சமாதி யுற்ற வாலய மருளி னேங்கும்
யூகியா தெவையு மிங்கே யிணைந்துணர் ஞான முற்ற
தேகியர் ஆக்கும் கோயிற் திருவுமத் தன்மைத் தாமே. 7

இன்னருள் மாயன் கோயில் இலங்கையிற் பலவுண் டேனும்
அன்னநற் கோயில் தன்னில் அமைவுடை யருளின் தோற்றம்
இன்னதோர் தன்மைத் தாக இலங்கிடக் காணு ராகி
உன்னியிங் குறுவார் மக்கள் உயரருள் வேண்டி நன்றே. 8

நங்கையி னருளி னாலே நலமுடைத் தாகும் மூர்த்தி
தங்கிய குறிப்பி னாலே தலமுமீ துயர்ந்த தாகும்
மங்கையை ஆண்ட தாலே மலர்ப்பதம் படிந்த தீர்த்தம்
இங்கிவை மூன்றும் சேர இலங்கிடும் சிறப்பிங் குண்டே. 9

இன்னருட் சக்க ரத்தோ டிங்குற்ற கிரியை மார்க்க
நன்னெறி யுணர்ந்த தொண்டர் நலமுறு பணிகட் கெல்லாம்
முன்னின் றுதவி யாற்றி முறைமையும் தேர்ந்தோ ரறுவர்
அன்னவ ரேக நன்றே அவர்பணி தொடரு கின்றார். 10

சேதரோ டாழ்வார் தூய்மை திகழுநன் நினைவர் வேலர்
ஆதர வாய வல்லி புரரொடு மாந்தா மோதர
ஓதுநற் பண்பின் மிக்க உயர்வுடைத் தொண்ட ரின்னோர்
மாதவன் பூசை மேவி மகிழ்வொடு செய்தா ரன்றே. 11

பூசையை நிதமு மாக்கிப் புகலுநன் மார்க்கம் நாடி
ஆசகல் தூய வாழ்விங் கமையவும் உலகி லுள்ளோர்
நேசமா யிணைந்து நன்றே நிதமுமிங் கன்பின் வாழ்ந்து
தேசுறல் அதுவும் நாடித் தினம்தினம் வேண்டி நிற்பார்.

பின்வரு முறையி லன்னார் பேரருள் நயந்து மிக்க
நன்னய மாக வன்பின் நாடியிங் கிவைகள் கூறி
தன்னலம் பாரா தென்றும் தவநெறி மார்க்கம் நாடி
இந்நில முய்ய வேண்டு மெனவிவர் வேண்டி நிற்பார். 13

தீராப் பிறவிப் பிணியிதனைத்
தீர்த்து நாமு முனதடியே
சேர நிதமும் துடிக்கின்றோம்
நீதோ விடுவ தேதுமில்லை

பேரார் அமுதே தூயநற்சீர்ப்
பின்னைப் பிராட்டி யுவக்குமுயர்
பிரானே ஆயர் குலத்தினருட்
பேறே மாயா கோபாலா
ஆராப் பேரன் பசோதையருள்
அன்னை மடியு மிலவல்லி
யருளார் மடியும் மகிமையுற
வணைந்தோ யெம்மை யாண்டருளே
சீரார் மக்கள் நாமுமெலாம்
திருந்திய சிந்தை பெறவேண்டும்
சீரார் வல்லி புரம்வளர்சீர்
தேவே யெம்மை யாண்டருளே. 14

மீனாய்க் கடலடைந் தாமையாகி
மேல்வளர் பன்றி யுருவமாகி
மிக்கிரு சீரார் நரசிம்ம
மேனி தாங்கி நலமருளி
ஊன மில்லா வாமன நல்
உருவு மாகிப் பரசுராம
உத்தம நன்வடி வினோடுள்ள
உயர்சீதா ராம னாகிநல்
வானார் வளம்பெற் றுயருமுயர்
வயற்காம் கலப்பைப் படையுடைய
வலமிங் குற்ற பலராம
வள்ள லுருவு மாகியுயர்
தேனார் கிருஷ்ண தேவுமாகித்
திகழ்ந்தே சக்கர ரூபமேவிச்
சேர்ந்தவெம் வல்லி புரத்தரசே
தினமு மெமைநீ யாண்டருளே. 15

வஞ்சப் பெருந்தீ மூண்டுலகை
வதைக்கு தந்தோ ஆற்றோம்நாம்
வளர்தீப் பகையொடு கோபமச்ச
வகையும் தான்றிதம் வருத்துதிங்கே

கஞ்சன் விதியைத் தான்வெல்லக்
கருதவந் நிலையை மாற்றிக்
கட்டி யுரலோ டிணைத்தகற்றிக்
காத்தாய் நியதி கோபாலா

அஞ்சி யவற்காய் பெற்றவுயர்
அன்னை ஈந்தா ளசோதையிடம்
அன்னாள் பெற்ற தவப்பேறே
அடைந்தாள் வல்லி யிலவல்லி

பஞ்ச மின்றிப் பகையின்றிப்
பசிப்பிணி நோய்க ளிவையின்றி
பாரிங் குய்ய அருள்செய்வாய்
பண்பார் வல்லி புரத்தரசே. 16

சீரார் வெண்ணெ யுயரறுகும்
திருவார் நீரும் அருங்கோடை
திகழும் போது மிவைமாறுத்
திருத்தல மாகு மிதுவன்றே

ஊரார் தலங்கள் உலர்ந்தாலும்
உற்ற தழைநீர் அற்றிடினும்
உண்ண உணவும் நன்னீரும்
உதவும் வல்லிபுர மணற்பரப்பில்

ஏரார் இடையநற் சேரிமதிப்
பெய்திட வைத்தாய் கோபாலா
எளியோ மெங்கள் தவம்முன்னை
இருந்த வாறோ அறியோம்நாம்

பேரார் பிரானே அருளாளா
பேரரு ளீந்திங் கெமைக்காப்பாய்
பிரானே வல்லி யிலவல்லி
பேணித் துதிக்கும் பெருமானே. 17

சிறப்புற விளங்கு மிந்தச் சீருடை யால யத்தை
அறப்பணி உறவின் மிக்க அருளுடை வல்லி மாதி
னுறப்பெறு முரிமை யுற்ற உத்தம ராமவ் வறுவர்
மறப்பில ராகி நித்தம் மாண்புறப் பேணி வந்தார். 18

மரத்துயர் தூண்கள் நாட்டி மாம்பனை வளைகள் வைத்து
உரத்துடன் கூரைக் காய உயர்மர மிணையக் கோத்து
தரத்துறு தென்னங் கீற்றுற் தகவுற வேய்ந்து, மிக்க
வரத்துய ரால யத்தை வகுத்துமுன் புற்ற வின்னர். 19

சூழ்நிலை தூய்மை யாக்கி தூயநன் நீர்தெ ளித்து
ஊழ்வினை வலிமை தீர உரமிகு பக்தி யோடு
தாழ்வெலாம் நீங்க வன்பிற் தகுமுறை தூப தீப
நாள்வழா தென்று மிக்க நலமுறச் செய்து வந்தார். 20

வைகறைப் போதெ ழுந்து வழுவிலாக் கடன்க ளாய
செய்கைகள் தவறு தாற்றி சீருடன் மலர்ப றித்து
மெய்கிளர் ஞான ரூப மேலவன் குருக்கட் டண்ணல்
உய்கையீங் கியும் பாதம் உவந்துமுன் போற்றி நன்றே. 21

பூசையங் கினிது செய்து பொற்புறு கிருபை நாடி
மாசிலா மாயன் கோயில் மாண்புடன் சென்று மேவி
ஆசகல் கரும மாற்றி அபிடேக மதுவு மாற்றி
நேசமார் மலர்கள் தூவி நிறைவுறப் பூசை செய்வார். 22

ஆண்டவன் பூசை யாற்றி அடியிணை மேவி யன்பின்
மீண்டுதம் மனைக்கு வந்து மிகுபசி யதனை யாற்றி
வேண்டிநல் வயலுக் கேகி விளைவுறு கருமம் செய்வார்
ஆண்டுமற் றுற்ற தூய அருளுடைச் சேதி யொன்று. 23

ஊக்கமோ டுற்று மேவி உயர்வுறப் பணிக ளாற்றி
ஆக்கமார் வயலின் நிற்ப அயலுள வூரி லுற்ற
நீக்கமி லன்பு மிக்க நிகரிலாத் தூய பத்தன்
காக்கநம் பணிக ளென்றே கனிகளோ டங்கு வந்தார். 24

கருத்தொடு தாம்வ ளர்த்த கனிதரு பலாவின் கன்று
பருத்துநன் கினிது காய்த்துப் பழந்தர அதனை முன்னர்
திருத்தமார் அன்பி னோடு திருவுடை நாத னுக்குப்
பொருத்தமா யமுது செய்யப் போந்தங்கே யாரு மின்றி. 25

தூயநற் பழத்தி னோடு தொடர்ந்தனர் வயலை நாடி
ஆயநல் அமுதா மிந்த அருங்கனி தன்னை நாதர்க்
கேயநன் முறையின் வைத்தே இனியவோர் பூசை யாற்றி
நேயமோ டின்ப மோங்கும் நிலையெமக் கருள்க வென்றார்.

வயலிலே கரும மாற்றி வளமுற நின்ற வனார்
அயலிலோ ரிடத்தைத் தூய்மை அழகுறச் செய்து மாற்றி
மயலிலா உளத்தி னோடு மாயனை யங்க ழைத்து
செயலெலா மினிது மேவிச் சிறந்தநற் தூப தீபம், 27

அன்பொடு காட்டி யன்பர் அவரையும் வணங்க வைத்து
தன்பணி அதனை மிக்க தகுதியின் முடித்தா ராயின்
அன்பரோ ஆல யத்தில் அக்கனி தன்னை வைத்தங்
கின்பமார் பூசை செய்யா வின்னலோ டகன்று சென்றார்.

போகின் றதூய வன்பர் பொழுதெலாம் நினைவி தாக
வேகின்ற நிலையிற் பட்டார் வேதனை மிகவு முற்றார்
ஆகின்ற துயிலின் போதங் கருங்கன வதனிற் தோன்றி
நோகின்ற வுளத்தி னார்தம் நோவெலாம் தீர வேண்டி. 29

மீனமாய்க் கடலிற் தோன்றி மேன்மைகள் செய்த மாயன்
தேனொத்த சுவையின் மிக்க தீங்கனி சுவைத்து மிக்க
வானந்த மடைந்தே னுந்தன் அன்பினை மெச்சு கின்றேன்
ஏனிந்தத் துயர மென்றான் எழுந்தனர் விழித்தங் கன்பர். 30

மாயனைக் காண வில்லை மற்றுள நிலைமை தேர்ந்தார்
நேயமாய் வயலில் நின்றோர் நேசமா ரிடத்தின் மேவி
ஏயவா றடிப ணிந்தங் கியற்றினும் பூசை மாயன்
ஆயவா றேற்பா னுற்ற வாலய மவையு மாகும். 31

அறிவிலா மாந்தர்க் காக ஆலய முளதே யன்றிச்
செறிவுடை யருளின் தோற்றம் சீர்பெற வெங்கும் காணும்
பிறிவிலாப் பக்தி ஞானப் பெருநெறிப் பட்டு நிற்கும்
அறிவுடை யார்கட் கெங்கு மாலய நிலைய மாகும். 32

என்பதோர் எண்ணந் தோன்ற இன்னுநற் பக்தி மேவ
முன்புதான் நினைத்த வெல்லாம் முழுப்பிழை யான தன்மை
துன்பமோ டினிது நோக்கித் துயரினை ஆற்ற வேண்டி
அன்புடன் இன்னோ ரின்பக் கனியுடன் அங்கு சென்றார். 33

இன்றுமே பூசை செய்யும் இனியவர் வயலி லேதான்
நின்றனர் அவர்க்கு மந்த நிர்மலன் கனவின் மேவி
சென்றுநீ எனது தூய செய்கட னதனின் மற்றிங்
கொன்றிய பணிக ளோதான் உயர்வெனக் கருதிக் கொண்டாய்.

நன்மையும் உற்ற தீமை நட்டமும் நயமு மாய
தன்மைக ளனைத்து மிங்கே தருபவன் நானே யன்றி
நின்மய மாக வேது நிகழ்ந்திடா வறியா துற்ற
புன்மையிங் காய செய்தி பொருந்தினைய் தவிர்க வென்றார்.

சோர்வினை நீக்கி நானும் சுறுசுறுப் பாகச் சென்று
தேர்வுடைக் கரும மாற்றித் திருமாலைப் பூசித் தன்பாய்
ஏர்வினை யிவைக ளாற்ற இங்குற வேண்டு மன்றி
நேர்வினை இனியிங் கெண்ணேன் நித்திய மாக வென்றார். 36

நேர்வது நிமல னாலே நிகழ்பய னவனுக் காகும்
சோர்வறக் கரும மாற்றும் தூய்மையே யெமக்கிங் காகும்
ஆர்வமாய்ப் பூசை செய்தல் அதுகடன் என்று சொண்டார்
தேர்வுட னன்ப ரோடும் சென்றுயர் கனிப டைத்தார். 37

இந்தநற் பாங்கி லேயே இனியநன் மாலு மிங்கே
சந்தத மடிய ரோடும் சார்புள தொண்ட ரோடும்
பந்தமார் அன்பு மேவி பரவிமற் றவர்க ளுய்ய
விந்தைசே ரருள்பு ரிந்தார் வேறுமொன் றுரைப்போ மிங்கே.

அற்றதோர் காவலங் காணதால்
ஆலய பூசை யெல்லாம்
முற்றுற முடிந்த பின்னர்
முறைமைசேர் தூப தீப
முற்றிடு கால்கள் இன்னும்
உபயோக மாம்பொ ருட்கள்
மற்றவர் வீட்டிற் கின்னார்
மாண்புறக் கொண்டு செல்வார். 39

பெட்டக மதனுட் பூட்டி
பேணிமற் றென்றும் காத்தே
இட்டமோ டடுத்த நாளும்
எடுத்துச்சென் றுபயோ கிப்பர்
துட்டர்கள் ஒருநா ளிரவு
தூங்கிய பின்னர் யாரும்
திட்டமிட் டந்தோ வந்து
திருடுதற் குன்னி னார்கள். 40

நாகமங் கிருந்து சீறி நாயகன் பூசைக் காய
பாகமார் பொருள்கள் தன்னை பாவியர் திருட வோநீர்
வேகமாய்ப் போங்க ளென்னும் விதத்திலே இரைந்து நிற்ப
சோகமோ டேகி னார்கள் சுவாமியே காத்தா ரென்று. 41

காலையில் எழுந்து வந்து காணுநற் பூசைக் காகச்
சீலமார் பொருட்கள் நாடத் திறந்துள பெட்டி கண்டு
ஏலவே திறந்த பான்மை எண்ணிப்பார்த் தேதோ கள்வர்
நீலனார் பூசை யன்பர் நிகழ்ந்தமை உணர்ந்து தேர்ந்தார்.

அரவமிங் கேதோ கேட்க ஆட்களிங் குறுவ தாகப்
பரபரப் படைந்து கள்வர் பாத்திர மாதி யெல்லாம்
திரவியங் கிருந்துங் கொள்ளார் நீங்கினர் என்ன நோக்க
அரவமங் கிருப்பக் கண்டே அதிசய முற்றா ரன்னார். 43

ஆயனே தூய கண்ணு அனங்கனு யிங்கு மேவி
தூயநற் பூசைக் காய தூயநற் தீப மாதி
தீயராற் கவர வொண்ணுத் திறத்திலே பேணிக் காத்தாய்
நேயமார் நினது மாண்பின் நிலைமையே தென வியந்தார்.

அனந்தனே போற்றி தூய ஆதிசேடனே போற்றி யுற்ற
வனங்கடந் தண்ண லார்தம் வாகன மாகி யுங்கள்
இனங்களுக் கெல்லாம் மேன்மை எழிலுறச் செய்த தேவே
தினங்களிங் கென்று முன்னைத் திருவுளம் கொள்வோ மன்றே.

நன்றிநாம் கூறு கின்றோம் நலமுறு மாவின் தீம்பால்
இன்றிதிங் கமுத மாக எம்பிராற் காக்கு கின்றோம்
என்றுரைத் தங்கு வைப்ப இனிதுற வதனை யுண்டே
சென்றது மெல்ல மெல்ல சிந்தையின் மகிழ்ந்தா ரின்னுர். 46

வல்லியின் தொடர்பி னுலும் வந்தவிவ் வியல்பி னுலும்
நல்லியல் முறையின் மிக்க நாகநற் தம்பி ராற்காம்
கல்வளை கோயிற் பூசை கருத்துடன் செய்ய வின்னும்
வல்லவர் இவர்கள் மிக்க வணக்கமோ டுறுதி பூண்டார். 47

எண்ணிய வாறே பின்னர் இயற்றினுர் தூய கோயில்
நண்ணிநற் பூசை தன்னை நாளுமே இயற்றி னுர்கள்
புண்ணிய வன்னு ருற்ற புனிதநன் மரபி னோர்கள்
கண்ணிய மாக வின்றும் கருதிமற் றியற்று கின்றுர். 48

ஆச்சிய ரடிமைப் பண்பும் யசோதைமா தன்பின் சீரும்
மாச்சுடர் வான மாதர் மகிமையு வல்லி யுற்ற
தூச்சுடர் அருளின் பண்பும் தொடர்புற நினைந்து போற்றி
நாச்சிமார் தமக்கும் பூசை நலமுறச் செய்தா ரன்றே. 49

கல்வளை யென்னும் தூய கருணைகூர் தலம்மற் றிந்த
நெல்விளை பூமி சார்ந்த நிமலனுர் தலத்திற் கப்பால்
நல்வள முடைய தாய நலமுறு தென்கி ழக்கில்
பல்வர மீயுந் தெய்வப் பாங்கினி லிருந்த தன்றே. 50

நாச்சிமா ரோடு நாக தம்பிரா னுலய யங்கள்
பூச்சுமந் தேத்தி யங்கே புனிதமாய் நாடிச் சென்று
நாச்சுமந் தேத்த நாமம் நாடிநற் பூசை செய்தல்
ஆச்சிவர் கடமை யாக அதனையும் மேற்கொண் டார்கள். 51

ஊதிய மேது மின்றி உயர்பணி கருதிச் செய்வார்
ஆதலின் மூன்று தூய ஆலயப் பூசை யாற்றிப்
போதரல் கஷ்ட மாகப் பொருந்தவங் குற்ற மூர்த்தி
கோதறு மாய னுற்ற கோயிலிற் கொணர்ந்து சேர்த்தே. 52

நன்றுயர் நாச்சி மார்க்கும் நாகநற் தம்பி ராற்கும்
ஒன்றவோர் மாயன் கோவில் உயர்வுறு கோயி லாக்கி
என்றுநற் பூசை செய்தார் இத்துடன் உழவு பேணி
நின்றுதம் வாழ்வும் செய்தார் நினைவெலாம் மாயற் காக்கி. 53

காலமுங் கடந்து செல்லக் காணுமிம் மரபி லுற்றோர்
ஆலயப் பணிகள் சார்பில் அடைந்துற்ற குரோதத் தாலே
சிலமார் நீதி நாடிச் சென்றுயர் கோடு மேவ
ஆலய வதிகா ரங்கள் அந்நியர்க் காய தன்றே. 54

சீரிய புலோலி யூரிற் சிறப்புடன் திகழ்ந்த செல்வர்
காரிய மாற்று மாற்றல் கடிதுநன் குடைய வன்பர்
கூரிய மதியும் கொண்ட கோதிலா வேகாம் பரமெனும்
நேரியர் மணியம் தன்பால் நிர்வாகம் சென்ற தன்றே. 55

நீதவான் பொறுப்பை யிந்த நீதிமா னிடத்தி லீந்தங்
காதர வாக வென்றும் அறநெறி கூறி நிற்ப
பேதிலா இருந்த வந்தப் பெரும்பதி வல்ல மாந்தர்
சாதனைக் குரியார் இருவர் சார்துணை அதுவும் செய்தார். 56

இன்னவர் காலத் தேதான் இனியநன் நாச்சி மார்கள்
நன்னல மீயு நாக தம்பிராற் காய மூர்த்தம்
உன்னுமுட் பிரகா ரத்தில் உயர்வுற மேவச் செய்து
மன்னுநற் பூசை செய்யும் மகிமையிங் குதித்த தென்பார்.

உற்றகொடித் தம்ப மிங்கே உயர்வுற அமைத்து நன்றே
குற்றமிங் கணையா வாறு குறித்துயர் நித்தி யத்தி
லுற்றிடு தாழ்வு நீங்க உயர்விழா நிகழ்ந்த தேனும்
மற்றுயர் வீதி யோடு மண்டபம் சிறக்க வில்லை. 58

மண்டப மமைத்துத் தூய மாண்புற வீதி யெங்கும்
அண்டிநற் கோவி லோடு மழகுறக் கூரை யாத்து
தொண்டிவர் பலபு ரிந்தார் அனுமனுக் காய கோயில்
அண்டியங் கிசைசீர் வசந்த மண்டப மதுவும் செய்தார். 59

தேரிலா திருந்த தன்மை தெரிந்துணர்ந் தால யத்தின்
ஓருயர் தேரிங் காக்கி உயர்விழா மேவச் செய்ய
சீரிய பணிமேற் கொண்டார் சீர்பெறு நாக லிங்கம்
பேரியல் அப்புக் காத்து பேணுபொன்னம் பலத்தி னோடே.

ஆலய நிர்வா கத்தில் ஆயசீர் ஒழுங்கி லாமை
சீலமா யறிந்து ணர்ந்து செல்வநற் துரையி னோடும்
கோலமார் நீதி நாடிக் குறித்துயர் வழக்கு மேவ
ஆலய நிர்வா கம்மீ தாயதோர் குழுவின் பாலே. 61

ஆயவக் குழுவுக் குற்ற அரியநற் தலைவ ராக
மேய கணபதிப் பிள்ளை மிகமுயன் றுழைத்து நன்றே
கோயிலைப் புதுக்கி யாக்கி கும்பாபி ஷேகம் செய்து
நேயமோ டுழைத்தார் குழுவின் நிறைவுடை யுதவி யோடு.

ஏரியல் அழகு தோன்ற இராசநற் கோபு ரத்தின்
நேரியல் பணியை மேவ நினைத்துநன் றாக்கி நின்றார்
சீரிய தொண்ட ராய சிவபாத மென்போ ரந்தக்
காரிய நிகழ நீத்தார் கணபதிப் பிள்ளை வாழ்வை. 63

அரியவப் பணியு முற்ற ஆலய வீதி மூன்றுக்
குரியநற் பணியு மின்றிங் குயர்வுற வாதற் கென்றும்
உரியவர் உழைக்கின் றார்கள் உவந்துநற் தொண்டர் கூட்டம்
பிரியமாய் வந்து போற்றும் பெருமையும் பெருகு தன்றே. 64

கண்டுளார் அன்ப ரெல்லாம் கவலையை மாற்றி வாழ்வு
கொண்டுய வேற்ற மார்க்கம் கோமகன் வல்லி பாதம்
அண்டிநாம் நிதமும் போற்று மருள்நெறி மார்க்க மென்றே
தொண்டுகள் பணிகள் செய்து துதிக்கின்று ரிங்கு நித்தம்

நாரணு என்ப ரன்பின் நப்பிரான் நீயே தஞ்சம்
காரண மாகி யெங்கும் கருவிகள் கடந்தி யங்கு
மாரண முதலே யென்பார் ஆவினம் பேணும் தூய
வாரண மதனைக் காத்த வாழ்வுளோய் போற்றி யென்பார்.

வேறு

படுகின் றோம்பே ரல்லல் பரந்தாமா பரந்தா மா
விடுகின் றவாறே தோதீ வினையெம்மை நிதம் மருவிச்
சுடுகின்ற தந்தோ மிகமிக சுடர்விட்டே யெழுந் தெழநாம்
நடுநின் றிங்கல றுகின்றோம் நம்பெருமான் காவென் பார். 67

வாரா திருக்கின்ற பேரோ வருந்தநாம் கண்ட தில்லை
நாரா யணுவிங் குன்னையே நாடினர் கோவித் துயரம்
தீராதே யின்னு மின்னும் தீச்சுடர்போல் மூளுவதோ
நேராய வுன்மலர்த் தாள் நீங்கோம்நாம் காத் தருளே. 68

புண்ணிலே யின்னுமின்னும் பொருத்திமிகு துருசமர்த்தி
நண்ணினர்தாம் எரிந்தலற நாடாதே யங்கிருக்கும்
கண்ணியமார் வைத்தியநற் கலையுணர்ந்தோர் தமைப்போல
அண்ணுநீ வினையாற்றும் அருளிதுவோ நாமறியோம். 69

ஆற்றுத் துயரமெமை யடைந்தலறும் போதுமதன்
மாற்றுக வேய்ங்குழலின் மாண்பாய கீதவிசை
போற்று மெமதுசெவி பொருந்திடவே நீயிசைத்துத்
தோற்றுதிங் கத்துயரம் துணையீயும் மகிமையென்னே. 70

ஈன னெருத்தன் என்துகிலை உரிகின்றுன்
மானமிழத்தேன் மதிப்பிழந்தேன் கோபாலா
ஆன சபைக்குரித்தாம் அறிஞருந்தா னறிவிழந்து
போனுர்க ளென்றவள்தம் புகலாயோய் நீயென்பார் 71

நின்னைநாம் மதித்தறியோம் நின்னினுமே மிக்கதுணை
பொன்னே எனமதித்தோம் புரிந்தோமின் றுண்மைநிலை
பொன்னும் வினைவிளைவே புகலாமோ பொருளாகா
தென்னைநா மீதுணர்ந்தோ அடைந்தோமிங் காண்டருளே.

குற்றமெலாம் நீபொறுப்பாய் குணமாய வாழ்வருள்வாய்
சுற்றமொடிங் குற்றவுயர் தொடர்பெல்லாம் நீயேயாம்
நற்றவநல் வாழ்வீந்து நாயகனே எமைக்காப்பாய்
கொற்றவா வல்லியூர் கோமகனே என்பார்கள். 73

சீராய நல்வாழ்வு சிந்தித்தே நாம்நிதமும்
பேராப் பெருங்கருணைப் பெருவழிக்கிங் காளாமாய்
நேராய பாதையருள் நெறிவிலகா தொத்தியங்க
தாராயோ நல்லகதி தாயனைய தேவேநீ. 74

உத்தமநல் ஒளியாய ஓங்காரப் பேரொலியோ
டொத்திசைய நம்பெருமா னுயர்நாமந் தனையோதி
பத்தி மிகமிகவே பரவசமாய் மின்னுமின்னும்
நித்தியமும் வருமன்பர் நிலைமைக்கோர் குறைவில்லை. 75

நித்தியம் நிகழும் பூசை நிலையிலாக் குறைக ளுண்டேல்
உத்தம மாக நீங்க உயர்விழாச் செய்து நன்றே
பக்தருக் குதவு கின்ற பண்புடை நிலைமை யெல்லாம்
அத்தனுர் அடிகள் போற்றி யன்புட னினியு ரைப்பாம். 76

# 10. விழாவயர் சருக்கம்

சீரியநற் றிருநீறு சிவநற் சின்னம்
    திருமண்ணே திருமாலுக் குரிய சின்னம்
நேரியலில் இவையிரண்டு முவந்து பேணி
    நித்தியமும் தரித்தன்பர் மகிழ்ந்து செல்லும்
பேரியலின் நலமுண்டு பேணு கின்றோர்
    பெரும்பாலும் சைவமதத் துற்றோ ரேனும்
தேரியல்பிங் கேதுமின்றித் திருமால் மீது
    திகழுகின்ற வுயர்பக்தி பேணு கின்றார். 1

ஆரணநூல் அறிந்துணர்ந்த வந்த ணர்கள்
    ஆயவுயர் தவநெறிக்கிங் கொத்த வாறு
காரணநல் ஆகமநூல் நாடி நன்றே
    காட்டுகின்ற மார்க்கத்தைக் கருத்திற் கொண்டு
பூரணமார் பூசைநெறி மேவி யன்பிற்
    புரிகின்றார் தூயவருட் சிவனுக் குற்ற
நாரணனார் சக்தியெனக் கொள்ளு கின்ற
    நலமார்ந்த கொள்கைநெறி தழுவி நன்றே. 2

உத்தமராம் கணபதிச் சாமி யென்னும்
    உயர்வாய குருக்களருட் பணிகள் நன்றே
சித்தியுறச் செய்துவந்தார் முன்னே நாளும்
    சேர்வுடைய அவர்மரபோர் இதைமேற் கொண்டார்
இத்திருநாள் இவர்மக்கள் இணைந்த வர்கள்
    இனியபூசை பேணிநித மியற்று கின்றார்
நித்தியத்திற் றாழ்வகல நைமித் தியமும்
    நிகழ்த்துகிறார் புரட்டாதி மாத மேவ. 3

போற்றுமுயர் கணபதிச் சாமிக் கன்னார்
    புகலாய மாமன்மார் வைத்தீஸ் வரரோ
டேற்றமார் கருணாகர ராய முன்னோர்
    எம்பெருமான் பூசையைநன் கினிது பேணி
யாற்றியவோர் தொடர்பாலே யமைந்த திப்போர்
    ஆலயத்திற் பூசைசெய்தற் காம்பே றென்பார்
போற்றியிந்நாட் கணபதிச் சாமி மைந்தர்
    பூசைமகிழ்ந் தேத்திநிதம் புரிகின் றாரே. 4

சக்தியருட் பூசைக்கிங் குற்ற மாதம்
சால்புமிகு புரட்டாதி மாத மாகும்
உத்தமநற் திருமாலுக்கிங் குலகி லுள்ளோர்
உமையவளைச் சோதரியென் றுரையும் செய்வார்
ஒத்தபடி தேவிக்கும் மாய னுக்கும்
உற்றுவளர் பிரதமையோ டுற்ற நாட்கள்
பத்துமொரு பதினாறு பதினே ழாக
பண்பாக விழாவெடுத்துப் போற்று வாரே. 5

வேறு

பள்ளிச் சிறுவர் நாமம்மா
பணிய வேண்டு முமையவளை
அள்ளித் தருவா ளவளருளே
அம்மா தாயே ஆதரியும். 6

சென்னித் திருவார் கங்கைவளர்
தேவன் தேவி பூசைக்காம்
கன்னித் திங்க ளிதுவம்மா
கருணை செய்வீர் தாயாரே. 7

வாணி திருவோ டுற்றவுயர்
வாழ்வார் துர்க்கை யாமிவரைப்
பேணிப் பூசை செய்திடவே
பிரிய முற்றோம் சிறுவர்கள்நாம். 8

ஆய நவமி தசமியிலே
ஆயுத பூசை செய்தன்பாய்
ஏய சிறுவர்க் கேடுகளும்
இனிது தொடக்கும் காலமிது. 9

ஒன்பது நாளிங் குயர்பூசை
உவந்திட வேண்டும் நாம்சிறுவர்
என்பது தேர்வீர் உமையவளே
இனிதே போற்ற உதவிடுமின். 10

## வேறு

இல்லந்தோ றிவ்வாறே சிறுவ ரெல்லாம்
இனிதாய பாடலொடு வேண்ட வன்பின்
நல்லமன துடனெவரும் உவந்தங் கீய
நாடியுயர் ஒன்பதுராப் பூசை செய்து
நல்லருளைப் பெற்றிடுவார் அடுத்து யர்சீர்
நன்விஜய தசமியிலே நாடி மிக்க
செல்வருக்கு நாளேடும் தொடக்கி வைப்பார்
சீருடனே நற்கல்வி சிறக்கு மன்றே. 11

எந்தவொரு வாலயத்தும் சிறுவர் தம்மை
எவருந்தாம் பூசைக்கிங் குதவி யாக
வந்துதவ அனுமதியார் விலக்கி வைப்பார்
வாணியருட் திருமாது துர்க்கை யாய
இந்தவருட் சக்திகளின் பூசைக் கிங்கே
இருவருக்கே அதிகாரம் ஆத லாலே
சிந்தைமகிழ்ந் தியற்றிடுவார் இதனைப் போல
சிறப்பான விழாவெதுவு மவர்கட் கில்லை. 12

அந்நியநன் மதமுடைய சிறுவ ருக்கும்
ஆச்சரிய முடையதொரு விழாவீ தாகும்
இந்நிலையில் அவர்மதத்தில் விழாக்க ளேதும்
இருக்குதோ அன்றோநா மஃ தறியோம்
அன்னவரும் பணிந்தருவார் அமுது செய்ய
அவல்கடலை அவிக்கவுயர் பூசை செய்ய
என்னவுயர் மகிழ்வுடனே கலக்கின் றார்கள்
எமதன்னை சிறுவருக்கிங் கினிய ளாமே. 13

பெரியோர்க்கு மாயவனு மிந்த வாறே
பெருநியதி இவன்பூசைக் கெதுவு மில்லை
உரியவுயர் பேரன்போ டொப்ப டைத்திங்
குனதடிக்கே பாரமென வீற்றி ருக்கும்
சீரியநன் நிலையாலே சிறப்பிங் காகும்
சிங்கைநகர் வல்லிபுரம் மேவி மாயன்
ஏரியலி லுறுகின்றார் இதனைப் போலும்
இலவல்லி தவமகிமை வாழ்க நன்றே. 14

வங்காளக் கடலோரம் வாழு கின்ற
வல்லவர்கள் யாவர்க்கும் தூய மாயன்
மங்காத பெருந்தீபம் கற்கை மேவு
மாண்புடைய மாந்தரைப்போல் யாரு மன்பால்
இங்கேது மெய்தவில்லை அவர்கள் வாழும்
இன்தரையும் பெருங்கடலும் பெற்ற பேறு
எங்கேனு மெவரேனும் பெற்ற துண்டோ
இனியபிரான் திருவடியிங் கிட்ட தாலே. 15

தூய்மைமிகு கடலில்வளர் மீன மாகி
துள்ளியெழுந் தார்ப்பரிக்க பிடிக்க நன்றே
வாய்மைநிலை உணராதே இன்ன வர்கள்
வாடிமிக முயன்றாலும் பின்பு ணர்ந்து
வாய்மைநிலை வசமாகி வணங்கி நின்றார்
வருத்தார்கள் பல்லக்குச் சக்க ரத்தை
செய்மையுறு தலத்திற்கோர் சிரம மின்றிச்
சிராகச் சுமந்துற்றார் இவர்க ளன்றே. 16

மாயவனைச் சுமக்கின்ற கடமை யெல்லாம்
மரபுவழி இன்னவர்க்கே உரிய தாக
நேயமொடிங் கின்றுமிதை நிகழ்த்து கின்றார்
நீலவணார் உறிதிருடித் துயில் கவர்ந்த
ஆயகஞ்சன் தனைக்கொன்று மேலும் மேலும்
ஆற்றுபல நாடகமும் நடிப்பா ரின்னார்
தூயபணி மேவியுயர் கடல்மீ தேக
துயர்வாரா திவன்பார்த்திங் கிருக்கின் றானே.

ஊரையுயர் மாயவனார் நோக்க வில்லை
உதயவான் கடலினையே வுற்று நோக்கி
சீருறவிங் கிருக்கின்றார் அவ்வூர் மாந்தர்
திருமாலே தஞ்சமென இயம்பிச் செல்வர்
ஆருறவிங் கென்செய்யும் அருளார் மாயன்
அவனுறவே ஆதரமா மதனா லின்னார்
நேருறவிங் குற்றுறைவர் நாடி யன்பின்
நித்தியமும் அன்புடனே போற்றி நிற்பார். 18

உற்றவிழா மேவிடவிங் குரிய காலம்
உற்றணையு முன்பாக ஆல யத்தை
சுற்றிவரத் தூய்மைசெய்வார் சுவருக் கும்நற்
சுதைபூசி அழகுசெய்வார் ஏது மிங்கே
குற்றமுரு வாறவன்நற் சக்க ரத்தை
குலவவொளி துலக்கிடுவார் மக்க ளுக்கும்
உற்றுறைய வணங்கியுண் டுறைவ தற்கும்
உரியபணி மேற்கொள்வா ருவந்து நன்றே. 19

கடைகளுக்காம் கொட்டில்களு மிட்டுக் கொள்வார்
கவலையிலா துறுமக்கள் சுற்றி நன்றே
நடைபயிலற் கிடையூறிங் கில்லா வாறு
நாட்டமொடு கடைகளையோர் புறத்த மைப்பார்
முடையிலா தெவருந்தான் விழா நயந்து
முறைமையொடிங் குயரருள்பெற் றேகு தற்கு
தடையிலா மார்க்கமெலாம் நன்கு ணர்ந்து
தகுதிபெறச் செய்வார்நன் முயல்வி னேடு. 20

ஆதார நலம்பலவும் அடைய மக்கட்
காதரமாம் கருமநெறி யரசு பேணும்
சுகாதார நெறிதவரு துற்ற மக்கள்
சுத்தநிலை பேணுதற்கும் ஒழுங்கு செய்வார்
யாதார விந்தநலம் நாடு கின்ற
பக்தருக்கோ தீங்குரு வாறு பொலிஸ்
போதார அல்லும் பகலு மிங்கே
பொருந்துமுயர் கடமைநலம் போற்றி நன்றே.

தீர்த்தமிரன் டானதினல் விழாவுக் குற்ற
தினம்பதினு ருகவிங்கே யாக்கி யிந்நாள்
தீர்த்தமொடு தேருரும் நெறியும் சேர
தினம்பதினே ழாக்கினர்நல் அமைவின் காக
கீர்த்தியோங் கபரபக்கத் திறுதி நாளில்
கேண்மையொடு கொடியேற்றி விழாவி யற்றி
பூர்த்தியுறு பூரணையின் பின்னு ளிங்கே
புனிதமுறு பொலிவெய்த நிறைவு செய்வார். 22

பூரணைநாட் கடற்தீர்த்தம் நிகழு மிங்கே
பொருந்திவரு மறுநாளிற் பட்டுத் தீர்த்தம்
நாரணற்கு நிகழுமிராக் கொடியி றக்கி
நாடுமறு நாளிற்சீர் அனுமற் கோர்
பூரணமாம் விழாவெடுத்துப் போற்றி நிற்பார்
பொலிவுற்ற ஜயந்திவிழா வாரந் தோறும்
சிரணையும் ஞாயிறுநாள் விழாவு முண்டு
சிறப்பாய விழாக்கள்பல வின்னு முண்டு. 23

கொடியேற்றும் தினத்திற்கு முந்நாள் முன்னர்
குருக்கட்டுத் தலமேகிக் கொடியு யர்த்தி
கொடியேற்ற முற்றநாள் அந்தி வேளை
கொண்டுசென்று விநாயகரை அங்கி ருத்தி
மிடியற்று விழாவுயர மிகவ ணங்கி
மீண்டிங்கு முந்நாளின் பின்பு நன்றே
கொடியேற்றி விழாவியற்றும் வழக்க மேன்மை
குறித்துற்றார் இன்றுமது நிகழு மன்றே. 24

திருவீதி மணல்மேவி மிகவு மிங்கு
தினகரனார் கொடுஞ்சூடு நிகழ்வ தாலே
ஒருவீதி யுலாவேதான் பகலிற் கொள்ளும்
உற்றவொரு வழக்குண்டு தேரூர் திருநாள்
திருவீதி யுலாபகலிற் நிகழும் தீர்த்தம்
நிகழுமருட் கடல்நோக்கிச் செல்வ தாலே
பெருவீதி யுலாவாகும் கேணித் தீர்த்தம்
பேணுகின்ற மறுவுலா வாகு மன்றே. 25

ஆறுதிரு நாளிங்கே இரவி லுந்தான்
அரியவெளி வீதியுலா நிகழ்வ தில்லை
பேறுமிகு திருநாளாம் ஏழாம் நாளில்
பெருமானார் வெளிவீதி யுலாவிங் கேற்பார்
கூறுமுயர் குருக்கட்டுத் தலத்துக் குற்ற
குறிப்போடு மறுநாளிற் சென்று மீள்வார்
தேறுமுயர் வருமறுநாட் தோறு மிங்கே
சீர்மிகவே விழாநலங்கள் சிறக்கு மன்றே. 26

மாயவனுர் விழாத்தொடங்கி விட்ட தாயின்
　　மருவுமய லூரிலுள்ள மாந்த ரெல்லாம்
நேயமுடன் பசியிருந்து நினைவு கூர்ந்து
　　நித்தியநன் விரதநலம் மேவி நிற்பார்
ஆயவுயர் கடைகளெல்லா மங்கு மிங்கு
　　மழகாகத் தோன்றுமுயர் தீப சோதி
தூயவருள் போலமிகத் துலங்கி நிற்கும்
　　தொடர்ந்தடியார் தினம்வருவார் விழாக்கள் காண.

உற்றவுயர் வுள்வீதி விழாவிங் காகும்
　　உறுமேழாம் நாளில்வெளி விழாவி னேடு
மற்றநாட் குருக்கட்டுக் கேகு விழாவின்பின்
　　மருவிவரும் உறிதிருடல் துகில் கவர்தல்
உற்றவுயர் பாம்புநடம் கஞ்சன் தீர்வு
　　உறும்வேட்டை சப்பறம்தேர் விழாவி னேடு
நற்றவமார் கடற்றீர்த்தம் கேணித் தீர்த்தம்
　　நன்றுதினம் நிகழ்கின்ற நிலையி தாமே. 28

தேர்வருநாள் மட்டுமிங்கே பொறுத்தி ருப்பார்
　　திருவார்ந்த சப்பறம்சேர் தீப நன்னுள்
பேர்வுயர்நற் பண்டமெல்லா மிங்கு சேர்த்துப்
　　பேணிவிலை கூறிடுவார் அருளு மோங்கும்
ஊர்வருநாள் தேர்விழாக் கொள்ளு கின்ற
　　உயர்வாய நாளாகும் தீர்த்த மாய
பேர்விழாக் காணவரும் மக்கள் கூட்டப்
　　பெருமைதனை யேதிங்கே உரைப்போம் நாமே. 29

சப்பறநாள் விழாவிங்கே விடியு மட்டும்
　　சார்பாய முன்னைநாள் வழக்கம் பேணி
செப்புமுயர் நாதஸ்வர கான மோடு
　　சிறப்பாக நிகழுமுயர் மறுநாட் காலை
வெப்பநிலை யோங்குமுன்னே தேரின் மேவி
　　வீதியுலாக் கொள்வார்கள் தீர்த்த மிங்கே
வெப்பநிலை தணிந்துறுசீர் மாலை வேளை
　　வியந்துநிதம் பேணிடுவார் நிதமு மன்றே. 30

மாயவனுர் கீர்த்தியருள் பரவு கின்ற
மகிமைக்கோர் எடுத்துக்காட் டிலங்கை யெங்கும்
ஆயவுயர் பக்தரினம் வந்து போற்றி
ஆம்பணிகட் குதவியீந்து விழாவும் செய்து
நேயமுறு நிலைமைநலம் சிறப்ப திங்கே
நித்தியமும் வந்துமக்கள் தொழுகின் ருர்கள்
தூயவரம் ஓங்குமிங்கே தொழுப வர்க்குத்
துன்பநிலை மாறுமருள் பெருகு மன்றே. 31

சனவரவு கூடுகின்ற விழாவின் போது
சஞ்சடிக ளெங்குமுண்டு ஆனு லின்று
சனவரவிங் கிருப்பினுமிங் கில்லை யேனும்
சத்தமிட ஒலிபெருக்கி தவறு தென்றும்
தினவரவிற் காதார மாகி யுற்ற
சிலகடைகள் அவையெல்லாம் தவிர விங்கே
இனவரவாய்ப் பலகடைகள் எங்கு முண்டு
இசைபெருக்கு மொலிபெருக்கி யதுவு முண்டு. 32

பக்தர் பக்தித் திறமகிமை
பரிசோ திக்கும் காலமிது
பக்தர் நீவி ரென்கின்றீர்
பணியு மிந்த வொலிமேவி. 33

என்றே தேவன் எமக்கிந்த
இரைச்ச லொலியை ஈகின்ருன்
நன்றே ஒவ்வோர் கடைதோறும்
நாடி யழைக்கும் ஒலிபெருக்கி. 34

சங்கக் கடைக்கு மீதுண்டு
சாய்ப்புக் கடையும் தம்நிலைமை
இங்கே ஒலிக்க வொலிபெருக்கி
இனிப்புக் கடைக்கு மொலிபெருக்கி. 35

திருப்பணி வேலை ஆரம்பம்
தேவன் கிருபை நீர்நாடி
விருப்புட னீயும் எனவிங்கே
விட்டுணு பத்தர் அவர்களொலி. 36

சோதிக் கின்றான் தேவனென்றே
துதிக்க நாமும் முடிவதிலை
மோதிக் கொள்ளு மோசையொலி
மூழ்கி நாமும் மிகத்திணறி. 37

அல்லற் படவே யாகுதுமற்
றதையும் தாண்டி நாம்தொழுது
செல்ல முயல்வோம் இதுவுமுயர்
தேவன் விழாவி லாம்பயில்வு. 38

அன்பே பணமாய் அருளியும்
அரிய வணிகன் தேவனெமக்
கென்ப துன்னி வந்தோம்நாம்
ஏதோ பொருளும் கேட்கின்றான். 39

இத்தனை ஓசை மத்தியிலும்
இனிதே விழாவும் சிறப்புறவே
சித்தித் தியலும் அந்நலங்கள்
சீருறப் போற்றி நாமுய்வோம். 40

## வேறு

வெண்ணெய் உறிதிருடல் கஞ்சன்போர் துகில்கவர்தல்
எண்ணும்பாம் பெழில்நடனம் ஏற்றதிரு வேட்டையுலா
நண்ணும்நாட் சிறுவரினம் நாடிமிக நடிப்பார்கள்
வண்ணவருண் மாயன் வளரருளிங் குய்த்திடவே. 41

## வேறு

தேர்விழா இல்லாத் தன்மை கண்ட
திருவுடையான் நாகலிங்கன் தனது வீட்டில்
ஏர்விழா வாகவுயர் இனியநாட் பூசை
ஏற்றமுற வாரம்பித் தியற்றி யில்லம்
நேர்விழாக் காட்சியுற வாசாரி தன்னை
நிகழநல மிருத்தியுயர் தேரின் மீது
ஊர்விழா வாக்கியோ ரிருமைல்கொள் தூரம்
உயர்வீதி வழியாக நகர்த்தி வந்து. 42

தேர்விழாச் சிறப்பாக நிகழ விங்கே
திருப்பணிமற் றுயனவும் செய்து மிக்க
சீர்விழா வாக்கினன் தேர்விழாப் பொருந்தாத
தேவ மகோற்சவத்திற் காய மேன்மை
பேர்விழா பலபலவே நிகழி னும்தான்
பேணுநிலை நிறைவாய தென்ப தெவ்வாறு
தேர்விழா இதற்கிசைய ஆல யத்தின்
எழில்வீதி உறுதியுறல் அதுவும் செய்தார். 43

கால்புதையும் வீதியிலே மக்க ளென்றும்
கஷ்டமுறு வாரிந்தத் தூய தேரின்
கால்புதையா தென்செய்யும் உயர மென்ன
கனமென்ன மணலகற்றிக் கல்லு மிட்டுச்
சால்புமிக வுறுஙளயுமிட் டுறுதி யாக்கி
சகலருமிங் குவப்பவுயர் பணிக ளாற்றி
மால்புகழ்நன் மதிப்போங்க வழக்கு மிட்டு
மாற்றிடவே நிருவாகம் முயன்று ழைத்தான். 44

இன்றுள்ள உயர்நிலையிங் கியைவ தற்கோ
ரினியவுயர் ஆதாரம் இவனே யாவான்
நன்றாக ஆலயத்தைப் புதுக்கி யுற்ற
நற்குருமார் தகைமையையு முயரச் செய்தார்
குன்றனைய ராசவுயர் கோபு ரத்தைக்
கோலமுறு காட்சிமிக வியற்று கின்றார்
ஒன்றிணைய வீதியுமூன் றுக்கு கின்றார்
உயர்பணிகள் பலசெய்தார் செய்கின் றார்கள். 45

வேறு

கோவிந்தா கோபாலா கண்ணா மணிவண்ணா
கோவிந்தா கோவிந்தா கோபாலா எனக்கூறி
நாவின்சீர் நலம்பெருக நாரா யணப்பேரார்
கோவின்பே ருச்சரித்துக் குறித்திழுப்பர் தேரன்றே. 46

பூவின்சீர் நலம்நயந்தோன் பொற்புறுதேர் ஊர்ந்துவர
கோவிந்தா கோவிந்தா எனக்கூறி சீரடியார்
ஆவின்சீர் நலம்காப்பான் அவனூர்ந்த பாதைவழி
மேவும்சீர் அடியழிப்ப மேவுபணி மேற்கொள்வர். 47

ஆய னருட்பாத வடிபதிந்த சுவட்டினிலே
ஏய பிறரடிகள் இட்டுநடந் தேகாவா
ருயபணி இவர்செய்வார் அன்போடு வேறுசிலர்
தூயவருட் பாடலொடு தொடர்வார்பின் துதிகூறி. 48

வேறு

தேருயர் வீதி மேவத் திருந்திய வன்பி னோடும்
ஏருயர் மாய னூர்தம் இணையடி மனதி லுன்னிச்
சீருயர் தேரின் பின்னே சேர்ந்துநன் அன்பர் மிக்க
பாருயர் பண்பி னோடு பாடிப்பின் பேகு வாரே. 49

தேர்வீதி வலம்வந்து திருமுன் பாக
திகழுமுயர் அர்ச்சனைகள் நிகழு மன்பர்
நேர்வரிசைப் படநின்றங் கொழுங்காய்ச் சென்று
நிகழ்த்துவார் பிறருக்கோ ரிடையூ றின்றி
பேர்வரிசை யிதுமூன்று மணிவ ரைக்கும்
பெருமானூர் தேர்விட் டிறங்கு மட்டும்
சீர்வரிசை யுடன்நிகழும் நற்தீர்த்த விழா
சிறப்புநல மகிமைகளிங் கினியு ரைப்பாம். 50

ஆவியுடல் பொருளனைத்தும் உனக்கே யாக்கி
ஆழ்வார்கள் பன்னிருவர் மிக்க வன்பிற்
பூவியலை மதித்துன்னைப் பொருந்தி வாழ்ந்த
புனிதநெறி நாமுமினி தடைய வேண்டி
மேவியுனை நாடிவர மிங்க டைந்தோம்
மிக்கநல மூர்த்திதீர்த்த மகிமை யாய்
மூவியலும் மிகவிணையுமுயர் முறைநமை நாடி
முன்வந்தோம் வல்லிபுரா எமையாண் டருளே. 51

பொன்வெண்டோம் பொருள்வேண்டோம் பூமி வாழ்வில்
பொருந்தியநா மிதையேதான் தஞ்ச மென்றே
மின்வேண்டு மாயநெறிப் பட்டு வாழோம்
மிகமிகவே யுன்னடியே போற்று வோமுக்
கென்வேண்டு மெனக்கேட்பின் நித்த நித்தம்
இணையடிகள் மறவாத சிந்தை வேண்டும்
நெல்வேண்டி மிகவுழுது விளைக்கும் சீரார்
நிலம்வளமார் வல்லிபுர தேவே போற்றி. 52

ஆழ்வார்கள் கண்டவுயர் மார்க்க மேதான்
அறிவுநிலை யோங்காவெம் மியல்புக் கொத்த
வாழ்வாய தூயவருள் மார்க்க மாகும்
வள்ளலே கோபாலா தூய கண்ணா
தாழ்வாய மார்க்கநெறி தவிர்த்து நித்தம்
தகுதிபெறு நினதருளின் உதவி கொண்டெம்
ஊழ்வினையின் வலிகெடுத்திங் குய்ய வேண்டும்
உத்தமனே வல்லிபுரா நீயுவந் தாண்டருளே. 53

ஆவினத்தின் நலம்பேணும் அண்ணா தூய
அடியருயிர்க் குயிராம் தேவே சீரார்
பூவினத்தின் மிகவுயர்ந்த பங்க யத்தில்
பொலிகின்ற தேவிதனை மார்பி னன்பாய்
மேவினைநீ மேதினியின் முயற்சி யோங்க
மிகுசெல்வம் விளைப்பாய்நீ உனது நாமம்
நாவினிலே நிதமிலங்க நாமு மிங்கே
நாடினம்காண் வல்லிபுரா நீயாண் டருளே. 54

நெறிவழி யுணர்ந்த மாந்தர் நிறைவுற வெவ்வா றேகச்
சிறுவரும் தமக்கிங் கொத்த சீரியல் நெறியிற் பாடி
உறுவர்நற் றேரின் பின்னே உவப்பொடு தாள மிட்டே
மறுவற அவர்கள் மாண்பும் மாயவன் மதிப்ப னன்றே. 55

அன்னைபிதா அடியிணைகள் அனுதினமும் துதிப்போம்நாம்
சொன்னபடி குருபதமும் தொழுதுநிதம் கற்றிடுவோம்
அன்னியரைப் பேணிடுவோம் ஆர்க்கும்நா முதவிடுவோம்
தன்னலமாய்த் தாய்நாட்டின் நலமுயர நாமுழைப்போம்

இன்னபடி நாம்வாழ்ந்துன் இணைமலர்த்தாட் கன்புமிக
உன்னியுனை நாமடைந்தோம் உறுதியெமக் கீதெனவே
அன்னையெமக் காவாய்நீ அப்பனுமே யிங்காவாய்
நன்னிலைமை நாமடைய நாயகன்நீ ஆண்டருளே. 57

மாயவனே கோபாலா மலர்மாதின் நாயகனே
தூயவனே கோபாலா தொடர்ந்தினிய பைந்தமிழ்ப்பின்
போயவனே கோபாலா புவனியிலே புகலெமக்கிங்
காயவனே கோபாலா அனைத்தெமைநீ யாண்டருளே. 58

பரந்தாமா கோபாலா பார்த்தனருள் சாரதியே
நிரந்தரமாய் எமையுந்தான் நின்றியக்கும் சாரதிநீ
பரந்தவுயர் உலகாளும் பண்புமிகு நாயகனே
வரந்தரநீ வேண்டுகிறோம் வாழ்வுநல முயர்ந்திடவே. 59

ஆயிழை யார்கள் தாமும் அவர்கள்தம் தகுதிக் கேற்ப
சேயுயர் மாய னுக சிந்தைதனை யனைத்து மீயும்
தாயுநற் தாமே யாய தன்மையிற் பாடிப் போற்றும்
நேயமார் நிலைமை நாடி நிறையுய ரன்பிற் செல்வார். 60

மாயனே கோபாலா மணிவண்ண மாண்புயர்சீர்
ஆயனுய் அனைத்துயிரு மாதரவாய்ப் பேணுகின்ற
நேயனே எவ்வுருவில் நினைத்தாலு மதுவேயாம்
தூயனே எமக்குற்ற துயரெலாம் துடைத்தருளே. 61

தாய்மைநல வன்புடையோம் தகுங்குழந்தைக் கெனமையீயும்
தூய்மைநிலை நாமுடையோம் தொடருவதிங் காதலினுற்
சேய்மைநெறி பட்டிடலே சேருமெமக் கிங்காகும்
தாய்மைநெறி நின்றுநாம் தவம்பேண எமக்கருளுதியே. 62

அன்னையுயர் பேறுடைய யசோதை மாதுற்ற
நன்னலமே நாமுந்தான் நாடுகிறோம் நித்தியமும்
உன்னிடத்தே எம்மனதை உறப்பொருத்தி மிகுமன்பின்
உன்னியுனைத் தொழுதற்கா முபாயமெமக் கீந்தருளே. 63

ஆண்டானுய் அடிமையாய் அன்னையுயர் சேயுமாய்
பூண்டநெறி எதுவேனும் பொருந்தியது வாகியெமக்
கீண்டருளும் கோபாலா இனிதார்சீர் மணிவண்ணு
ஆண்டருள வேண்டும்நீ அடியோமை அணைத்தினிதே. 64

தீர்த்தத் தலத்தினிலே சேர்ந்துவிட்டார் சமுத்திரம்போல்
மூர்த்தி தலத்தினிலும் முறையான சனக்கூட்டம்
நேர்த்தியுறும் பாதையினும் நிலைத்திணைந்த தொடர்வரிசை
தீர்த்தம் நிகழுமட்டும் தீராதித் திருவரிசை. 65

தீர்த்தம் முடிந்தவுடன் திரும்புமிந்தப் பேர்வரிசை
தீர்த்த நலங்கண்டு திருமா லருள்பெற்று
பூர்த்தி யுறுமுள்ளப் பொலிவோடு மக்களெலாம்
நேர்த்தி யுறவிரைவார் நின்றுநின்று சிலர்வருவார். 66

## வேறு

வெள்ளை மணல்மீது வீற்றிருந்து மகிழ்வாக
விண்ணவனூர் ஆலயத்தை வியந்துமிக நோக்கியிவர்
உள்ளம் குளிரமகிழ்ந் துயர்வான காட்சியென்பார்
உற்றவுய ரழகுணர உறுதூர முதவும்போன்ம். 67

நீலக் கடல்மீது நெளியுமலை தனைப்பார்ப்பார்
நெளிந்து நெளிந்ததுவும் நிலையாகக் காட்சிதரும்
கோலக் குருமணல் கொண்டிருக்கும் வரிநிரையும்
கூடவே யங்கிருந்து குதுகலித்து நோக்கிடுவார்; 68

பார்ப்பர்பின் பாதைவழி பாதைநிறை சனக்கூட்டம்
பண்பான கோயிலிலும் பக்தருக்குக் குறைவில்லை
நீர்ப்பரப்பிற் கெதிராக நிறைந்திருக்கும் பெருங்கூட்டம்
நீருமிங்கு சமுத்திரமோர் நிறைசனமும் சமுத்திரமாம்.

## வேறு

நிறமில்லா நீரிங்கே நிறைந்துபெறும் உயர்நீலம்
நிறமில்லா ஆகாயம் நிறைவிலுந்தான் உறும்நீலம்
நிறமில்லான் குணமில்லான் நிறைவாகி எங்குமுள்ளான்
நிறமுந்தா னடியார்கள் நீலமெனக் கண்டுற்றூர். 70

நேரில்லான் நிகரில்லான் நித்தியத்திற் கழிவில்லான்
சீரில்லான் சிறப்பில்லான் சிந்தனைக்குட் சிக்காதான்
ஊரில்லான் பேரில்லான் உருவில்லான் நிறைவினுக்கிங்
கோரெல்லை இல்லானுக் குறுநிறம்மற் றேதேதோ. 71

நீல எழில்வானும் நீலப் பெருங்கடலும்
சீல முடனிணையும் சிறப்புடைய அடிவானில்
கோலமுறு சந்திரனும் குறித்துவரும் வேளையிலே
நீலத் திருமாயன் நீர்விழா விங்குறுவான். 72

## வேறு

தூரத்தே தீபவொளி தோற்றுவதை இவர்காண்பார்
சுவாமி வருகின்ற ரெனவுள்ளம் களிப்பார்கள்
தீரத்தோ டடியாரும் தீவிரமார் வேகமொடு
சிறிது கணப்பொழுதில் சுமந்துவிரைந் துற்றிடுவார். 73

தீர்த்த முறும்வேளை சேர்ந்துமிக நெருங்கிடுவார்
சீரலையும் நோக்காது சென்றிடுவார் முன்னேறி
மூர்த்தி சமுத்திரத்தில் முன்னேறும் செய்திவர
முட்டிமுட்டி மோதியின்னும் முந்திடுவார் ஓர்சிலரே. 74

தீர்த்தமுறக் காண்போர் சிலரேதா னுளலும்
தீர்த்தம் முன்னிற்பார் தெளிப்ப மிகமகிழ்ந்து
பூர்த்தியுறு மனதோடு புனிதநிலை தாமடைவார்
பூரணைநாட் சந்திரனும் பொருந்துமிப்போ தடிவானில் 75

அங்கேறின் றழகுமிகு மடிவானைப் பார்க்கின்றார்
பொங்குமுயர் தூயவொளி பூத்துவரும் திருக்கோலம்
தங்கவொளி தளதளக்கும் தண்ணளிசேர் தனியுருவாம்
மங்கலமார் உருவதனை மாண்புடனே நோக்குகின்றார். 76

வங்கக் கடலடைந்து வாழ்வுயர நற்தீர்த்தம்
இங்கருள வந்தபிரான் இனிதேபின் கடல்மூழ்கி
பொங்குமெழில் அடிவானிற் போய்மிதந்து பூரணமாம்
தங்கவழ கொழுகுமுயர் சந்திரனைய் வந்தனனே. 77

இங்குயர்சீர் எழில்வடிவா னிடைகீறி எழுந்துமிகு
தங்கவொளி வீசியங்கே தலைகாட்டி மேனிமிர்ந்து
மங்கலமாய் வருந்தூய மதியழகின் பூரணச்சி
ரிங்கிதத்தை என்னென்போ மென்கின்று ரிங்குசிலர். 78

ஏதோவோர் பிரமாண்ட வினியவட்ட வடிவாகி
மீதேறும் போதினிலே மிகப்பெரிதாய் நகர்ந்துவரும்
போதிங்கே சிற்றுருவிற் பொலிவதனைப் பார்த்துமிக
ஏதென்போ மிங்கெனவே இன்னபல இவருரைப்பார். 79

தாரணிக்கு வானீயும் தண்ணளியின் நல்லுருவோ
காரணனார் தம்முடைய கருணைப் பெரும்பொலிவோ
நாரணனார் தீர்த்த நலத்தின் நிறையுருவோ
பூரணமாய் நின்றொளிரும் புதுமையழ கேதென்பார். 80

பொற்பதந்தந் தெமையாளும் பூரணனின் பொற்புருவோ
கற்பகநல் வாழ்வுடையார் கவினழகு நற்பந்தோ
சிற்புதமாய் ஈர்ப்பிதரு மழகுருமற் றேதேதோ
சொற்பதத்தின் விஞ்சுமிந்த தூயவுரு வுதயநலம். 81

## வேறு

வானமொடு தூயகடல் இணையும் நற்சீர்
வனப்புடைய அடிவானில் மதியின் தோற்றம்
ஈனமிலா திலங்குகின்ற மேலே வானில்
இனிதாய கதிர்வீசும் எழினித் தோற்றம்
ஆணவுயர் தென்றற்காற் அருண் மிகுந்த
ஆகாயம் நீர்நிலனோ டுற்ற தீபம்
தானதுவாம் தன்மைபெறு மான்ம கோடி
திருமட்டு மூர்த்தமிவை யாகு மிங்கே. 82

மாயவனார் மீன்கி நடன மிட்டு
மாண்பாகப் பதம்பதிந்த மகிமை யுண்டு
நேயமுடன் இவ்வலிவி சாபந் தீர
நிலம்மேவி யிட்டபத நலனு முண்டு
ஆயதனால் திருவரங்க மாகி யுற்ற
அருண்மிகுந்த தலமிதுவே யித்த லத்தில்
ஏயவுயர் தீர்த்தநல் மகிமை யோங்கும்
இயைந்ததுசீர் அட்டமூர்த்த மனையு மிங்கே. 83

ஆக்கமுறு மக்கினிதன் ஆற்றல் காட்ட
ஆதார மொன்றிங்கே யுற வேண்டும்
மாக்கருணை மிக்கவரெம் பிரானே யேனும்
மகிமைநல மவனுமுய்ப்ப வித்தி யேபோல்
நீக்கமறு மாதார நிலைமை வேண்டும்
நிலைமைநிறை வுறுமூர்த்த மெட்டு மாகிப்
பூக்குமருட் கருணைக்கோ ரெல்லை யில்லை
பொலிந்துநல மிங்கிவான் மாய னன்றே. 84

வானமுயர் நீலமெழிற் கடலும் நீலம்
வகுத்திவற்றை நோக்கிடினே நிறமே யில்லை
ஆனபடி அணுவணுவாய்ப் பரந்த தோற்றம்
அற்றதுவே நிறமேனும் காட்சிக் கென்றும்
ஈனமிலா நீலநிற வியைபு காட்டும்
இத்திறமே எங்குநிறை மாய னுக்கும்
வானநிறம் கடலழகு வண்ண மெல்லாம்
வந்திணையும் இங்கிதனை நினைக்கத் தோன்றும். 85

ஐம்பூதம் மாதவன்நற் சந்தி ரன்சேர்
ஆன்மாக்கள் பலகோடி யாக விங்கே
எம்பெருமான் நீலநிறக் கடலி னுற்ற
இனியவுயர் தீர்த்தவிழா மகிமை மேவி
வெம்பிறவிப் பட்டவரெம் வினைகள் தீரும்
வெந்துயரைச் சகிக்குமுயர் ஆற்றல் சேரும்
ஐம்பொறிக்கு மவனேதான் காட்சி யாவான்
அருளோங்க ஈடேறி உய்வோம் நாமே. 86

என்றுமிலா மனநிறைவோ டுற்ற மக்கள்
இங்கிருந்து மீளுவதைக் காண நேரும்
ஒன்றியநன் மாலைமதி யுதயக் காட்சி
ஒளிவழ்பர்க்க வருந்தென்றல் இதம் மிகுந்த
குன்றனைய மணல்மேடு மணலின் மீது
குறித்தடிகள் வேர்க்கும்போ தினிய வின்பம்
நன்குய தீர்த்தநல மகிமை யோடு
நயந்தினிவும் மீள்வருயர் அருளின் மேவி. 87

வேகமுறச் செல்வார்கள் முதிய வர்கள்
வியாதியிடைப் பட்டவர்கள் சிறுவர் தாமும்
சோகமுறு தடிபெயர்ப்பார் என்று மில்லாச்
சுறுசுறுப்பை இன்னவரு மடைந்தி ருப்பார்
நாகமுறு பாயலுளான் நாடு தீர்த்த
நலமகிமை ஏதென்போம் யாருக் கேனும்
தாகமுற நேரினுமே சகிக்கு மாற்றல்
தாமடைவார் இன்பமொடு விரைந்து செல்வார்.

சென்றிவரும் ஆலயத்தைச் சேர நன்றே
திருமாலும் பரிசனமும் வேக மாக
சென்றிவரை முன்னேறி வீதி மேவி
திருந்துமுயர் ஆலயத்தின் வீற்றி ருந்தே
ஒன்றிவர முடியாதோர் தமக்கு மின்பம்
உரித்தாக அருள்ஈவார் மற்ற வர்கள்
நன்றாய பண்டங்கள் பலவும் வாங்கி
நலம்சிறப்ப நகர்வார்கள் இல்லம் நோக்கி. 89

மாலையிலே தீர்த்தவிழா நிகழு கின்ற
மகிமையினால் உற்றவுயர் கிரியை யெல்லாம்
சாலவே செய்யவொணுத் தன்மை யாலோ
சார்பாய மக்கள்நலம் கருதி யோதான்
நீலனருட் கோபாலன் கேணித் தீர்த்த
நிலைமையையும் நயந்திட்டான் மறுநா ளிங்கே
கோலமுற அதுவுந்தான் நிகழு மன்பிற்
குழுமியடி யார்போற்றி மகிழு வாரே. 90

இனிதாக நிகழுமுயர் கேணித் தீர்த்தத்
திரவினிலே கொடியிறக்கி நிறைவு பேணும்
புனிதவிழா நிகழுமன்பர் போற்றி யங்கே
பொருந்துமுயர் கிரியையெலாம் மகிழ்ந்து நோக்கி
மனிதவுயர் பிறப்பெடுத்த மகிமை நன்றே
மருவிடத்தம் உளத்திலுறும் மிடியி றக்கி
நனிதவநல் மார்க்கமுறு நயப்பி னோடு
நாடிமீண் டேஇடுவார் நாமங் கூறி. 91

மறுநாளில் எம்பெருமாற் கினிய வன்பன்
மனம்வாக்குக் காயமிவை அனைத்து மிங்கே
குறைவறநன் கிணையமிகு பக்தி யோடு
கோபாலன் பணிக்கெனவே அர்ப்ப ணித்த
நிறைவாய வாழ்வுடையான் தொண்டிற் கிங்கோர்
நிகரிலா அனுமனவற் காய பூசை
குறைவிலா முறைமையிலே நிகழ நோக்கி
குதுகலமாய்த் தொழுதேத்தி அன்பர் செல்வார்.

உற்றதோர் ஸ்கந்த புராண நன்னூல்
ஓதுகின்ற தட்சிணகை லாய மான்மியத்
துற்றவுயர் வல்லிபுர வைப வத்தை
உரைக்கின்ற சூதமா முனிவ ரின்னும்
குற்றமிலா இலவல்லி தவத்தி னாலே
குழந்தையாய் வந்திங்கே சேர்ந்த மாயன்
பொற்றுணையாம் இருதயங்கள் போற்றி யுய்யப்
பொருந்தியநாண் மகிமையுந்தான் புகலு கின்றார்.

முனிவர்களே கேளுமெனத் தொடங்கி நன்றே
மூர்த்திதல நற்தீர்த்த மகிமை மூன்றும்
நனிசிறந்த வாலயத்து பஞ்ச பருவ
நாட்களொடு முற்றவுயர் ஜயந்தி நன்னாள்
கனிவுமிகு பக்தியொடு நாடி வந்தே
கருணைமிகு வல்லிபுர நாதன் பாதம்
இனிதெவர்கள் போற்றுவரோ அவர்கள் வாழ்வில்
இடரில்லை இலட்சியவாழ் வெய்து வாரே. 94

என்றுரைத்தார் பூரணைநா ளோடமா வாசை
இனிதுயர்சீர் கிருஷ்ண சதுர்த்திநா ளோடு
ஒன்றிவரும் கிருஷ்ணாட் டமிநா ளுற்ற
உயர்வாய சங்கராந்தி யிவை யைந்தும்
நன்றாய பஞ்சபரு வகால மாகும்
நம்பெருமா னவதரித்த முகூர்த்த மெல்லாம்
பொன்றாத புகழ்படைத்த ஜயந்தி யாய
புனிதமுறு நாட்களென வியந்து ரைத்தார். 95

இன்றினிதே மகிமைமிகு மித்த லத்தில்
    இனிதாய ஜயந்தியோ டேகா தசிநாள்
ஒன்றியசீ ரிரண்டிணைய வுலகம் போற்று
    முயர்வுமிகு கார்த்திகைத் தீப நன்னாள்
நன்றாய புதுவருடம் முயர்வார் தைநாளி
    நரகாசுர சங்கார தீபா வளிநாள்
என்றிவையோ டிணையந்துமிக வின்னு மின்னு
    மினியவிழா நிகழுமரு ளோங்க வன்றே. 96

ஞாயிறுநாள் தோறுமுயர் விழாவே யாகும்
    நன்றாய ஆவணிநாள் விரத நோற்பார்
நேயமுடன் மார்கழிநாள் முழுது மன்பர்
    நீராடி வைகறையிற் றொழுது நன்றே
மாயவனார் பூசைநலம் மகிழ்ந்து காண்பார்
    மாதுதிருப் பாவையுயர் பிரபந் தங்கள்
ஆயவருட் பக்தியுடன் பாடிப் பாடி
    ஆலயத்தை வலம்வருசீர் உரைப்ப தென்னே. 97

# 11. சீரடியார் திருச்சருக்கம்

ஆண்டுயர்சீர் ஆயிரத்துத் தொளாயி ரத்து
இருபத்தேழி லுயர்சீர்நன் நவம்பர் மாதம்
ஈண்டடைந்த வுயர்மகாத்மா காந்தி அண்ணல்
எம்பெருமான் தலங்களிலே அருளின் மேன்மை
பூண்டவுயர் வல்லிபுரத் தலம டைந்து
போற்றிநல மெய்தினர்மற் றெனிலிங் குற்ற
தூண்டுசுட ரனையவருட் சோதித் தோற்றத்
தொகுதிநல மகிமைநாம் உரைப்ப தென்னே. 1

சோதியருட் தோற்றமதை உளத்திற் கண்டே
தொடர்புற்றத னோடுநித மொத்தி யங்கி
நீதியுரு அதுவேதான் நிமல னென்றும்
நிலவுமுயர் அகிம்சையவர்க் குகந்த தென்றும்
ஆதியுடை அறநெறிமற் றீதே யென்றும்
ஆனுலின் றழிந்ததென வதுவும் கூறிச்
சோதியொடு வாழ்விணையச் செய்த காந்தி
சோதியருண் மயமாய தோற்ற மன்றோ. 2

உத்தமநல் வரிச்சந்திர னுண்மை மேவி
உரியவெலா மிழந்தலைந்த சேதி யெல்லாம்
சித்திமிகு புராணத்தின் சேதி யாகும்
செய்கைவழி அதைநிகழ்த்திக் காட்ட வந்த
உத்தமன்காண் உயரண்ணல் மகாத்மா காந்தி
உண்மையொடு மதம்கூறும் தெய்வ மிங்கே
ஒத்தனவே வேறல்ல எனவு ரைத்தே
உயர்வாழ்விற் தெய்வீகம் திகழச் செய்தார். 3

சீதைசிறை மீட்டுயர்ந்த போர்வி ளைத்தான்
சிறீராமன் பார்த்துனுக்கிவ் வுலகு முய்யக்
கீதைநிறை மொழிகூறிப் போர்செய் நீ
கேடில்லை எனவுரைத்தான் கிருஷ்ண னுமிம்
மேதையிறை வாழ்விணைய அகிம்சை மார்க்கம்
மேலாகும் காலத்திற் கொப்ப வென்றே
வாதையிலா யுத்தநெறி தழுவு தற்கு
வல்லிபுரன் அழைத்துறுதி கொடுத்தான் போலும்.

இல்லம்வாழ் உயர்துறவி தூய சைவத்
தியல்பினிலே யுலகத்தோ டொட்டி வாழ்ந்தும்
நல்லபடி யுள்ளத்திற் துறவு மேவி
நலம்பெறலா மெனவுரைத்தான் காந்தி யண்ணல்
சொல்லுக்கும் செயலுக்கும் ஏது மிங்கே
சோர்வடையா வாழ்வுநிலை யதுவும் கொண்டான்
வல்லிபுர நாதனுமிங் குவக்கும் கொள்கை
வளமாய விக்கொள்கை யதுவே போலும். 5

நாவேநற் துணையாகக் கால மெல்லாம்
நம்பெருமான் நாமத்தை நயந்து கூறி
பூவோடு நன்னீரும் புனைந்து வாழும்
புனிதநிலை அதுபோதும் நாம மேயத்
தேவோடிங் கெமையிணைக்கு மேன்மை யாய
செல்வமெனக் கூடிநிதம் பிரார்த்தித் தற்கிங்
காவனவும் தான்வாழ்ந்து காட்டு மண்ணல்
ஆயன்நல் வல்லிபுரற் கினிய ஞானன். 6

ஆண்டவன்தன் சந்நிதியில் வறுமை செல்வ
மவையெலா ஒப்பாகும் ஏது மங்கே
தீண்டாமை என்பதற்கோ ரிடமு மில்லை
தேவனுக்கிங் கொப்பில்லா இவ்வ நீதி
வேண்டவே வேண்டாமென் றியம்பி நித்தம்
வெறுத்ததனை ஒதுக்குதற்கிங் காய சேவை
பூண்டவனெம் காந்தியண்ண லிவனி டத்தே
பூரணநல் லருட்சோதி பொலிந்த தன்றே. 7

அடியவர்கள் வரவுதலத் ததிக மாக
அருளுந்தா னத்தலத்தி னதிக மாகும்
அடியவர்கள் அணைவோர்தம் உளத்த லத்தும்
ஆண்டவனார் இருந்தொளிதான் வீச லாலே
அடியாரில் ஆன்மீக லாப முற்றே
அருளாரும் சிவமுத்தி யடைந்த தூய
அடியர்வரின் அதன்மகிமை பேச வேண்டாம்
அண்ணல்மகான் காந்தியுமத் திறத்த ரன்றே. 8

அன்னிபெசண் டருளன்னே மகாத்மா விங்
    காகியிவர் உயர்ந்தநலம் அதுதான் கண்டே
நன்னலமாய் அதனையுல கறிய வைத்தார்
    நன்றேமற் றனைவருமிங் கிதனை ஒத்தார்
உன்னுமனத் துறுதியினும் ஆத்து மீக
    உறுதியேமிக் கவரிடத்திங் குற்ற தாலே
மன்னரும்தான் பணியுமுயர் மகிமை பெற்றார்
    மாயவனும் வரவழைத்திங் கருள் புரிந்தான். 9

அருள்மிக்கார் அவரடைந்த கார ணத்தால்
    அருளுந்தான் மிக்கதிங்கிவ் வால யத்தே
இருள்மிக்கிங் கெம்பெருமான் தாள் நினையா
    திடருற்ற நம்மவர்களிங் கிவர் வரவாற்
பொருள்மிக்க புனிதமிகும் வாழ்வு பூத்து
    பொற்பதம் நாம்நாடற் காய ஞானத்
தெருள்மிகுதற் காயநிலை ஆய தன்றே
    திருமிகுசீர் அடியர்பலர் இன்னும் வந்தார். 10

இமயமலை சாரலிலே இருஷி கேசத்
    தினிதிருந்து தவமியற்றி நல்வாழ் விற்கிங்
கமைவாய உயர்நெறிகள் காட்டிய சீர்
    அருளாளன் சிவானந்த மகரி ஷிதனக்
கமைவாய தொண்டுடைய அடிய ருந்தான்
    அன்புமிகு மருள்பேணி இங்கு வந்தார்
நமைவாழ வழிவகுக்கும் அவர்தொண் டாலும்
    நமதுதல மருள்மிகவிங் குற்ற தன்றே. 11

அத்வைதா னந்தாவெ னக்கூறு மிந்த
    அடியரா யிரத்துத்தொ ளாயி ரத்தோ
டொத்துவரு முப்பத்தைந் தாமாண் டிலிங்
    குற்றடைந்தார் அரசியலோ டுலகி யலும்
இத்தலத்தே துறந்தவ ராவ ரின்னார்
    இனியநம் காந்திமகான் அரசிய லோடு
சித்திமிகு ஆத்மீகம் கலக்கச் செய்தார்
    சீரிருவர் நமக்குமித் தலமொத்த தன்றே. 12

காந்திமகான் உடனணைந்தே இத்த லத்திற்
　　கருணைமிகு தேவனருட் பூசை கண்டோர்க்
காந்துணையு மருண்மேவு மன்பு மேவி
　　அடிமைநிலை வாய்த்தவர்நல் வல்லி புரத்
தேந்தலடி நிதம்போற்றி உய்தி மேவு
　　மினியநிலைப் பட்டிங்கே வாழு கின்றூர்
சாந்திமிகு திவ்வியஜீ வனநல் லன்பர்
　　சார்பாலும் பற்பலரிங் கடிய ராஞர். 13

நித்தியத்தின் தாழ்வெல்லாம் நீங்க விங்கே
　　நிகழ்த்துகின்ற விழாநிகழ்வ தாய காலத்
தித்தலத்தே அடியர்தொகை அதிக மாகும்
　　எங்கெங்கும் நாமநல மகிமை யோங்கும்
புத்தியொடு மனமொடுநற் பொறிக ளுக்கும்
　　புலனுவ தெங்குமருட் தோற்ற மொன்றே
சித்திமிகு அடியர்நல மகிமை தன்னை
　　சிறப்புடனே நினைப்பதுநல் வழிபா டாமே. 14

குருலிங்க சங்கமத்தின் மேவி நின்றே
　　கோபாலன் காட்சியெமக் கீவா னிங்கே
பொரலிங்கே தியதெனும் பார்த்த னுக்குப்
　　பொருந்துமருட் குருவாஞர் இங்கு மாவர்
உருலிங்க சக்கரமாய் நிதமொ ளிர்வார்
　　உத்தமநல் அடியர்பாற் தோன்றி யருள்
தரலிங்கே எமக்குமிக வினிய தாகும்
　　தக்கவர்கள் இவரைநிதம் வணங்கு வோமே. 15

சீர்மிகவே மூச்சம்பலத் தடிய ராய
　　சிறப்புமிகு பேருடைய அடிய ரிங்கே
நேர்மிகுபே ரன்பிடையே மூழ்கி வாழ்ந்து
　　நிறையருளின் முத்திநிலை பெற்று யர்ந்தார்
பேர்மிகவே அவர்க்குரித்தாம் சமாதி யிங்கே
　　பேணியய லாமிடத்தே வகுத்து முள்ளார்
ஏர்மிகுநன் நாகலிங்க வடிக ளார்க்கும்
　　இங்கயலோர் சமாதியுள தாகு மன்றே. 16

அன்பாகப் பூசைமுறைப் படி செய்த
அருளாளர் வல்லிபுரம் சமாதி யுற்ற
நன்புலமும் ஆலயமு லத்தா னமுந்தான்
நன்றியைந்த தென்பதுவே அடிய வர்தம்
இன்புரை ஆகுமிங் கெவ்வா றேனு
இனிதாயி னடியார்கள் தொடர்பு நன்றே
என்பதொரு முடிபிற்கே நாம்வ ருவோம்
இன்னுமவர் பெருமைநல மெடுத்து ரைப்பாம். 17

## வேறு

தூயதோர் அருவுருத் தோற்றமேவித்
துதித்திட நாமுமிங்கே
மாயவன் சக்கர ரூபமாகி
மகிமையுற் றிருக்கின் றூன்காண்
ஆயதோர் தன்மையே யன்றிநாமு
மதிகமே துரைக்க வேண்டும்
நேயமோ பலவா றுகும்மக்கள்
நிலைமைகட் கேற்ற வாறே. 18

உருவத்தைக் காண்பதே யன்றியேதும்
உணர்ந்துதாம் போற்று தற்காம்
பருவமிங் கெய்தாதார் தமக்குப்
பருவுருத் தோற்ற மீவான்
அருவுரு வாகி நிற்பானின்னும்
அறிவினிற் சிறந்த பேர்க்கோர்
அருவமே ஆகிநின் றருள்வான்
ஆந்திற னுற்ற பேர்க்கே. 19

எங்குமாய்க் கலந்துற்ற சோதி
இறைவனுர் தடத்த மாகும்
தங்கிடா தகன்று தன்மைத்
தனிநிலை சொரூப மாகும்
இங்குநம் அறிவினுக் கறிவாய்
இருப்பது மதுவே யாகும்
துங்கமார் அறிவெனு மரியவந்தத்
தோற்றமே துதிப்பார் வல்லோர். 20

நால்வகை மக்க ளுற்ருர்
நால்வகை மக்கட் கேற்ற
நால்வகைத் தோற்ற மேவி
நம்பிரான் காட்சி யீவான்
நூல்வகை விரித்துக் கூறிஇந்த
நுணுக்கமு முரைத்து வைத்தான்
மால்வகைப் பட்டு நாமும்
மயங்குவோ மேது தேர்வோம். 21

ஞானத்தின் திரட்சி யாய
நலமிகு தோற்ற மேதான்
ஆனநம் தேவனுர்க் கமைந்ததோற்றம்
அந்நிலை தேரில் நாமும்
ஞானத்தினே டொத் திணைந்து
நலம்பெற நாடு மட்டும்
கானத்தோ டிணைந்த தேவன்
கருதிநன் குருவ மீவான். 22

தில்லையில் சிவனுர் செய்யும்
திருவுடை நடனக் காட்சி
எல்லையில் கருணை மேவும்
இயக்கத்தின் தோற்ற மாகும்
வல்லவோர் சக்க ரத்தின்
வளமிகு சுழற்சி தானும்
எல்லையில் இயக்க மாய
எழில்மிகு கருணை யன்ருே. 23

ஏதிதிற் பேத மிங்கே எதற்குநா மையம் கொள்வான்
நாதனுர் உளத்தின் பான்மை நலமெலா மறிவ தாரோ
ஆதலும் அழிவு மெல்லாம் அவன்வய மாவ தன்றி
ஏதுநா மியற்ற வல்லோம் எம்கடன் பணிகள் செய்தல். 24

எம்கடன் பணிகள் செய்தல் இனியனு மெமது நாதன்
தன்கட னுவ திங்கே தமியனே னெனையும் தாங்கல்
இன்கட னிவையி ரண்டும் எம்மத மேனு மொப்பாம்
நன்கடன் செய்வ தன்றி நாமென்ற தென்ப தேனே. 25

புல்லாய்ப் புழுக்க ளாகி பொருந்திய நிலனோ டுற்ற
கல்லாய் மிருக மாகிக் கணக்கிலாப் பிறப்பு மேவி
அல்லலுற் றடைந்த நாமிங் கழுக்குடை மனது கொண்டோம்
நல்லதோர் பிறப்ப டைத்தும் நாடுவோம் பேத மன்றே. 26

நன்மைகள் தீமை தேரும் நற்கனி யருந்த வேண்டா
தென்மய மாக நீங்கள் இருமெனத் தேவன் கூறிப்
புன்மையே மயமாய் நாமும் புத்திமற் றுடையர் போல
நன்மைகள் தீமை நாடி நலத்தினை இழக்கின் றேமே. 27

நம்பிட வேண்டும் முன்னோர் நயந்துநன் குரைத்த வார்த்தை
நம்பினோர் கெடுவ தில்லை நான்மறை யிதுவே கூறும்
நம்பிரா னொருவ னுள்ளான் நமக்கொத்த காட்சி யீவான்
எம்பணி அவனை வாழ்த்தி இன்னருள் பெறுவ தாகும். 28

பிறந்துநன் குயர்ந்த தேவன்
பிரியமாய் மக்கள் போற்றும்
சிறந்தநற் தேவ னவான்
சீருடை ராமன் மற்றை
அறந்தனை நாடிக் காத்த
ஆயர்நற் குலத்தின் தோன்றல்
பிறந்ததால் உலகிற் பக்தி
பெருகிய தாகு மன்றோ. 29

பக்தியிங் கிரண்டே யாகும்
பயில்கின்ற பக்தி பிர
பக்தி யிவற்றிடைப் பேதம்
இயைந்துள அடியார்க்குப் பிர
பக்தியே மேன்மை யீயும்
பரனிடத் தாவியோ டுடல்பொருள்
மிக்கவா றீயு மிதே
மிகநல முடைய பக்தி. 30

ஈர்ப்பினூற் கவரப் பட்டே
எம்பிரான் தமக்கே யாளாம்
தீர்ப்பினே டனைத்து மீந்தே
திறமிகு மடிமை மேவி
ஏற்பதே யன்றி மற்றிங்
கேதுமே தேராப் பான்மை
மேற்படு நிலையிங் கியும்
மேலுமிங் குரைப்பக் கேளும். 31

ஐந்துபேர் கணவ ராக
அருஞ்சபை தன்னில் நின்றே
எந்தையெம் பெருமா னென்றே
இனிதழைத் துய்ந்த தேவி
தந்துணைப் பாதம் போற்றும்
தகுதியிங் குற்ற தென்னே
சிந்தைநாம் செய்ய வேண்டும்
திகழும்நற் பக்தி யிங்கே. 32

சீர்பெறும் இராமன் நாமம்
செப்பிடும் காந்தி யண்ணல்
பேர்பெறும் பக்தி மார்க்கப்
பெருந்தகை யாவ ரன்றோ
ஏர்பெறு முடலெ டுத்திங்
கியங்கிய இராமன் மீது
பார்பெறு மக்கள் கொண்ட
பக்தியிங் குயர்ந்த தாகும். 33

மானிடப் பக்தி மேவும்
மார்க்கமிங் குற்ற காந்தி
ஊனிடத் துற்ற சோதி
உள்ளொளி யதனைக் கண்டே
வானிடத் தேவன் போலும்
வணங்கிடற் குரியர் போன்றார்
காணிடத் தேக வில்லை
கலந்துல குறைந்து வாழ்ந்தார். 34

உள்ளுணர் வதனைக் கண்டே
உற்றுணர்ந் ததனோ டொத்தல்
தெள்ளிய ஞான மாகும்
திகழுநல் ஆத்ம போதம்
கொள்ளுமித் தகுதி யாலே
கூறுவர் மகாத் மாவாம்
ஒள்ளிய நாம மிட்டே
உளங்கொள வேண்டு மீதும். 35

பக்தியால் உயர்ந்த ஞானப்
பக்குவ முற்ற காந்தி
மிக்கவோர் அருண லத்தால்
மேவியித் தலத்தி னாடி
தக்கபே ரடிய ரோடும்
தானருட் பூசை கண்டே
நெக்குநெக் குருகிப் போற்றி
நிறையருள் பெற்றா ரன்றே. 36

பூரண மனித னாகிப்
பொருந்திய ஞான முற்றான்
நாரண நாம மேவு
ஞானமே பூத்த தோற்றத்
தேரணங் குற்ற தாலே
எம்பிரா னாகி வாழ்வின்
காரண னாகி விட்டான்
கண்ணனும் பரனோ டொத்தே. 37

உற்றநற் பக்தி யாலே
உண்மைசீர் ஞான மோங்கி
குற்றமற் றொளிரும் பான்மை
குறிப்பது காந்தி வாழ்வு
மற்றவர் ஆத்ம சோதி
மலர்விலித் தலத்து ளோர்நாம்
பெற்றிடற் குற்ற தாச்சே
பேரருட் பெருக்கு மிங்கே. 38

ஞானமும் தானு மாகி
    நலமுற விணைந்து நன்றே
தானெனு முணர்வே யின்றித்
    தனிமுதல் தன்தாள் மேவி
ஆனநல் இன்ப மெய்தும்
    அடியர்மற் றிவரும் மேன்மை
கானமோ டொத்தி லங்கும்
    கண்ணனைத் தொழலின் குற்றூர். 39

ஆனவோர் பக்தி மார்க்கத்
    தடியரும் அறிவாம் தூய
ஞானநன் மார்க்கம் மேய
    நலனுடை யடியார் தாமும்
வானநன் நீல ரூப
    வண்ணனை வணங்க வந்தார்
ஏனிவர் இங்கு வந்தார்
    இதனைநாம் நினைக்க வேண்டும். 40

மூர்த்திநற் தீர்த்த மேன்மை
    முழுநிறை வுற்ற பான்மை
கீர்த்தியின் மிக்க தாகும்
    கிருபைக்கோ ரளவே யில்லை
நேர்த்தியாய் நாமும் நாடி
    நிதம்நிதம் வணங்க வன்னுன்
தீர்த்திடு கின்ற னல்லல்
    தேர்வதிங் கிதே யாகும். 41

ஆராய்வா னறிதல் வேறு
    அனுபவ வுணர்வு வேறும்
ஆராயா தகத்துட் பட்ட
    அனுபவ உணர்வி னுலே
சீராய வருளின் மேன்மை
    சிறப்புற நோக்கு வோர்கள்
ஆராயா தினிது நன்றே
    அனுபவித் தருளிற் றோய்வார். 42

## வேறு

வானப்பே ருயரழகு வண்ணு போற்றி
    வளரருட்பே ரரசேயெம் தேவே போற்றி
கானப்பே ரழகுருவே கண்ணு போற்றி
    கவிதைகலை யுருவமுமிங் காவாய் போற்றி
ஞானப்பே ருருவேயெம் நாதா போற்றி
    நானிலமும் வானகமு மாவாய் போற்றி
மீனப்பே ரெழிற்பிறவி யுற்ற தேவே
    மேலவனே வல்லிபுர நாதா போற்றி. 43

நேர்மைநெறி நிறையுருவிங் காளுய் போற்றி
    நிர்மலனே நிறையுமருட் டிருவே போற்றி
சீர்மைமிகு நற்செங்கட் தேவே போற்றி
    திருவாமெம் தேவிமண வாளா போற்றி
நீர்மைமிகு தகைமையருண் நிலையே போற்றி
    நினையாதார் தமக்குமருள் நிலைமை போற்றி
கூர்மவுயர் அவதார மாய கோவே
    கோபாலா வல்லிபுரா போற்றி போற்றி. 44

பராபரனிங் காயவனே அருளே போற்றி
    பக்தருளம் நீங்காநின் பண்பு போற்றி
சராசரமோ டுயிர்க்குயிரா யுற்ருய் போற்றி
    சார்ந்தும்தான் சாராநின் தகைமை போற்றி
தராதரங்கள் பாராநற் தயவே போற்றி
    தகுதிநிலை கண்டருளும் தகவு போற்றி
வராகவுரு வாயவனே வல்லி யூர்வாழ்
    வள்ளலே தேவநின் பதங்கள் போற்றி. 45

தாயுளமார் தகுதியுடைத் தேவே போற்றி
    தந்தையுயர் தனயனுமாம் தகவு போற்றி
சேயுளங்கொள் சிறந்தவுயர் பண்பு போற்றி
    சேயிழையார் உளம்கவர்ந்த செல்வா போற்றி
தூயவருள் ஈயுமுயர் துணையே போற்றி
    துன்பமும்நல் இன்பமுமிங் கற்ருய் போற்றி
நேயமிகு நரசிங்க ரூப மாய
    திருமலனே வல்லிபுர தேவே போற்றி. 46

நாமநலம் புனைபவர்தம் கோவே போற்றி
நமதருளார் நாயகநற் தேவே போற்றி
தேமதுரத் திருவோசைச் செழிப்பே போற்றி
செந்தமிழு மாரியமு மருள்வாய் போற்றி
மாமதுரை பயந்தவருண் மணியே போற்றி
மாதவஞ்சேர் ஞானப்பூ மலரே போற்றி
வாமனனு முருவுற்ற வகைமை போற்றி
வல்லிபுரம் வாழ்தேவே நின்தாள் போற்றி. 47

அரசுடைநற் சிங்கைநகர்த் தேவே போற்றி
அரியவருட் சக்கரமிங் காணும் போற்றி
வரசுகமிங் கீயுமருள் வகைமை போற்றி
வண்ணமிலா வுயர்நீல வண்ணம் போற்றி
பரசுகமிங் கீயுமுயர் பதங்கள் போற்றி
பார்த்தனுயர் சாரதியிங் காணும் போற்றி
பரசுராம வாயதிரு வுருவு மேய
பண்பார்சீர் வல்லிபுரத் தரசே போற்றி.

தராதரத்திற் காயவருள் ஈவோய் போற்றி
தகுதியுடை ஞானநல மீவோய் போற்றி
பராமுகமா யிருக்குமுயர் பண்பு போற்றி
பட்டுழல விடுத்தருளும் பண்பு போற்றி
வராதிருப்போர்க்கு வருத்தமருள் வகைமை போற்றி
வருந்திவர வாண்டருளும் வண்ணம் போற்றி
இராமவுரு வவதாரம் ஆய நற்சீர்
எம்தேவே வல்லிபுரா நின்தாள் போற்றி. 49

தலைபத்திங் குடையவனை மாய்த்தோய் போற்றி
தகுதியுடை நீதிநெறி காப்போய் போற்றி
நிலைபத்திங் காயபிறப் புடையாய் போற்றி
நீசர்தமைத் திருத்துமருண் நிலையே போற்றி
வலைபத்தி யாயவதிற் பட்டோய் போற்றி
வல்லியில வல்லிதுயர் தீர்த்தாய் போற்றி
பலபத்திர னேயாய வுயர்பர னேயெம்
பண்புமிகு வல்லியருள் வாழ்வே போற்றி. 50

அருச்சுனனுக் குபதேச மளித்தோய் போற்றி
ஆச்சியர்தம் குரவையிடை மகிழ்வோய் போற்றி
உருச்சுமக்கும் உயிர்க்குயிராய் உற்ருய் போற்றி
உத்தமனே கோகுலவாழ் முதலே போற்றி
மருச்சுவைமகொள் வாசமலர் வளமே போற்றி
மாயாகோ பாலாமணி வண்ணு போற்றி
கிருஷ்ணனின் தூயவருட் கேண்மை மிக்க
கிருபைநிறை வல்லிவளர் தேவே போற்றி. 51

தர்க்கித்திங் கறியவொணுத் தகவே போற்றி
தமிழமுதம் நாடுமருட் தகையே போற்றி
வர்க்கநலப் பேதமுரு வளனே போற்றி
வறுமையிலும் சிந்தைவள மருள்வோய் போற்றி
நிர்க்கதியிங் காருமுரு வருளே போற்றி
நீதியுருச் சுதர்சனமிங் காணுய் போற்றி
சுற்கியுரு மேவுமுளம் கொண்ட பண்பார்
கருணைமிகு வல்லிபுரா நின்தாள் போற்றி. 52

இலவல்லி துயருமவள் தவத்தா லுற்ற
இயல்புகளும் எம்பெருமா னுண்ட வாறும்
நலவல்லி நாயகனுர் நாம் வணங்க
நலமிகுசீர் சுதர்சனமா யுற்ற வாறும்
தலவல்லி புரதலமும் மூர்த்தி தீர்த்தத்
தகைமைகளும் விழாச்சிறப்பு மடியார் பண்பும்
சொலவல்லி தாயினுமிங் குரைத்தோ மேதோ
சோர்வுளதேற் பொறுத்தருளத் துதிக்கின் ருேமே.

தேவியில வல்லிதன தடிமை போற்றி
திருவுடைய இத்தலத்திற் காய தொண்டின்
மேவியசீர் அடியவர்தம் மகிமை போற்றி
மேலாய திசையனைத்து மிருந்து வந்திங்
காவியனைத் துயிரினுக்கு மாய பெம்மான்
அடியவராய் அருள்பெற்ரு ரவர்தாள் போற்றி
தூவியலார் காந்திமகான் சிவா னந்தர்
திருவடியும் போற்றியுயர் வாழ்வுமேற் கொள்வாம்.

மூர்த்தியருள் தீர்த்தநலம் திருவ ருட்கா
முறைமையுடை உயர்திருமண் பூத்த தூய
கீர்த்தியுடைத் தலமகிமை இவைக ளெல்லாம்
இருமையினூ டொத்திலங்கும் தான மேய
நேர்த்திமிகு சுதர்சனநற் தேவ னரோர்
நீதியுயர் உருவாயிங் கெமதி டர்கள்
தீர்த்தருளும் திறம்போற்றி அவன் தூய
திருவடியும் போற்றிநிதம் வாழ்வோம் நன்றே. 55

புராணம் முற்றும்.

குருநாதன் விஷ்ணு பதமே சரணம்!

வல்லிபுர ஆழ்வார் சுவாமி திருவடிகளே சரணம்!

குருதேவர் திருவடிகளே சரணம்!

அடைக்கலம்! தஞ்சம்! அபயம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இந்நூலின் முகப்பு ஓவியக் கரு : வடிவேல்
மேலட்டை அன்பளிப்பு :
வேலழகன் ஸ்தாபனம், சுன்னாகம்

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்